உ

கடவுள்துணை.

செந்தமிழ்.

தொகுதி-௪.] விசுவாவசு௵ மார்கழி௴ [பகுதி-௨.

திருத்தக்கதேவரும், கம்பரும்.

(முன்றொடர்ச்சி)

கம்பர் ஆற்றுப்படலத்து,

புள்ளிமால்வரைபொன்னெனநோக்கிவான்
வெள்ளிவீழிடைவீழ்த்தெனத்தாரைக
ளுள்ளியுள்ளவெலாமுவந்தீயுமவ்
வள்ளியோரின்வழங்கினமேகமே.

எனப்பாடினர். இது சிந்தாமணிக்கண்,

தேனி ரைத்துயர் மொய்வரைச் சென்னியின்
மேனி ரைத்து விசும்புற வெள்ளிவெண்
கோனி ரைத்தன போற்கொழுந் தாரைகள்
வானி ரைத்து மணந்து சொரிந்தவே.

என்னும் பாடற் கருத்தினைப்பற்றி வந்ததென்று கொள்ளலாம். கம்பர் மழைத்தாரையை வெள்ளி வீழென உவமித்தது "வெள்ளி வெண்கோனிரைத்தன போற்கொழுந்தாரைகள்" என்னுஞ் சிந்தாமணிபற்றியேயாயினும் சிந்தாமணிக்கண் அவ்வெள்ளிக்கோல் இம்மலைச் சென்னியிற் சொரிதற்குக் காரணங் கூறப்பட்டதில்லை. கம்பர் கூறியது அவ்வாறன்று. வானுலகு பொன்னுலகு; இமயமலை பொன்மலை; எனப்படுதலை நோக்கி, அவ்வானுலகு பொன்னுதலிற்றனக்கே இப்பொன்மலை உரியதாவது: இம்மண்ணுலகிற் குரித்தாவதில்லையென்று கொண்டு, அதனைத் தனக்குரித்தாகப் பிணித்துக் கோடற்கு வெள்ளிவீழ்களை இடை வெளியே வீழ்த்தினாற்போல, மேகம் தாரையை இமயமலைமேல் வழங்கின என்பது கம்பர் பாடிய பாட்டின் பொருள். வானுலகு பொன்னுலகாதலிற் பொன்மலை தன்பா

விருத்தற்குரித்து: மண்ணுலகிற் குரித்தன்று என்று கருதி அதனைத் தன்பாலிழுத்துக் கோடற்கு வெள்ளிவீழ்களை வீழ்த்தியது எனினும் அமையும். பொன்னெனல் நோக்கி வெள்ளிவீழ்த்திற்றென்றது, மணியைப்பொன்னானும் பொன்னைவெள்ளியானும் பிணிப்பது வழக்காதல் பற்றி என்று கண்டுகொள்க. "ஒள்ளழற் புரந்த தாமரை, வெள்ளி நாராற் பூப்பெற் றிசினே" எனப்புறப் பாட்டின்கண் (கக) பொன்னாகிய தாமரையை வெள்ளி நாராற்றொடுத்தது கூறினமையானும் இதனுண்மை யுணர்க. இமயமலையைப் பொன்மலை யென்பது பிங்கலந்தையிற் காண்க. புள்ளிமலை என்பதும் அவ்விமயத்திற் கொரு பெயர். இவ்வாறு பல படியாகப் புனைந்து கூறுதலல்லது தாரையின் றோற்றமட்டிற்கண்டு வெள்ளி வெண்கோலென்று வாளா கூறினாரில்லை யென்க. ஈண்டுப்புள்ளி மலையைப் பொன்மலை யென்று வைத்து அதற்குப் பொருந்த வெள்ளிவீழ் எனத் தாரையைக் கூறினாற்போல "மள்ளர்கண் மறுபடைமான யானைமேல், வெள்ளிவே லெறிவன போன்ற மேகங்கள்" எனக்கார்காலப்படலத்து மலையை யானையாக வைத்து அதற்கு இயையப் பாய்தலும்வெண்மையுமுடைமையாற் றாரையை வெள்ளிவேல் எனக் கூறினார். யாண்டுக் கூறினும் பலவற்றிற்கும் பொருந்தக் கூறுவதிவர்க்கியல்பென்க. கம்பர் உண்டாட்டுப் படலத்து,

> கண்மணி வள்ளத் துள்ளே களிக்குந்தன் முகத்தை நோக்கி
> விண்மதி மதுவி னாசை வீழ்ந்ததென் றெருத்தி யுன்னி
> யுண்மகிழ் துணைவ ரோடு மூடுநாள் வெம்மை நீங்கித்
> தண்மதி யாகில் யானுந் தருவெனி நறவை யென்றாள்.

என்று பாடினார். இதன்கண் வள்ளத்துநறவிற் றன்முகத்தைக் கண்டு அதனை மதி யென்று மயங்கினாளென்பது, சிந்தாமணிக்கண் முத்தியிலம்பகத்து,

> குழைமுக மிடவயிற் கோட்டி யேந்திய
> வழனிறத் தேறலுண் மதிகண் டையென
> நிழன்முகப் பகைகெடப் பருகி நீள்விசும்
> புழலெனா நோக்குவாண் மதிகண் டேடினாள்.

என்னும் பாட்டிற் கண்டது. கம்பர் வாக்கியத்தில் மதி மதுவிற் றோன்றுவதற்கு 'மதி மதுவினாசை வீழ்ந்தது' என்று ஏது கூறி

யுள்ளது. சிந்தாமணியில் அதற்கோரேது காணவில்லை. தன் முகத்தையே மதியெனக்கண்டு அதனையே முகப்பகையாக்கி அதனுக்கு நறவினையீயாமல் உண்ணலினும், மதியை வள்ளத்துட்கண்டு கணவனுடன் ஊடியகாலத்துத் தன்னியல்பு திரிந்துஅழலுவது இஃதென நினைந்து, அம்மதியினைநோக்கி, 'ஊடற்காலத்து என்னைச்சுடாதொழிவையாயின் நினக்கு இம்மதுவினைத் தருவல்' என்று சொல்லி இவள் தன் குறையையும் அம்மதியின் குறையையும் முடிக்கக் கருதுதல் மிகச்சிறந்ததேயாமென்க. முன்

பெருந்த டங்கட் பிறைநுத லார்க்கெலாம்
பொருந்து செல்வமுங் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க் கீதலும் வைகலும்
விருந்து மன்றி விளைவன யாவையே.

எனப் பெண்பாலார்க்குக் கல்வியறிவுடைமை கூறி அதன் பயனாக வருந்தி வந்தவர்க் கீதலும் உண்மை கூறினாராதலால், அதற்கேற்பவே கொடையொடு கூடிய நல்ல குணத்தால் ஈண்டும் பெண்பாலைச் சிறப்பித்தாராவர். இனிக்கம்பர் தாடகைவதைப்படலத்து,

" ....கண்ணிற்காண்பரேல்
ஆடவர்பெண்மையையவாவுந்தோளினாய். "

என இராமனைக் கோசிகர் கூறியதாகக் கூறினர். இக்கருத்துச் சிந்தாமணியார் இலக்கணையினழகைப் புகழுமிடத்து,

" ஆண்விருப்புற்றுநின்றாரவ்வளைத்தோளினாரே.

எனக்கூறியதனடியாய்ப் பிறந்ததொன்றாகும். சிந்தாமணியார் இலக்கணையினழகினை நோக்கிய மகளிரெல்லாம் அவளை நுகர்தற்குரிய ஆண்மையை விரும்பி நின்றார் என்றார். கம்பர் சீராமமூர்த்தியின அழகினைக் கண்ணிற்கண்ட ஆடவரெல்லாம் அவனை நுகர்தற்கேற்ற பெண்மையை விரும்புவர் என்றார். இவ்விரிடத்தும் ஆண் பெண் என்னும் வேற்றுமை யல்லது கருத்தொன்றேயாமென வைத்துத் தாரதம்மியமில்லையெனக் கொள்ளின் கம்பர் சிந்தாமணியார் கூறியதையே சிறிது பெயர்மாற்றித் தாமொன்றுகூறினாற்போலக் கூறியதல்லது உள்ளவாறு முன்னையதினும் பெருஞ்சுவைபயப்பத் தாமொன்றும் பாடியதில்லையெனக் கருத அமையும். இதன்கண் ஆராய

வேண்டுவதொன்றுண்டு; அது சிந்தாமணியார் பெண்பாற்பக்கத்துக் கூறிய கருத்தொன்றை என்னைகாரணத்தாற் கம்பர் ஆண்பாற்பக்கத்து வைத்து மாற்றியுரைத்தனரென்பது. பெண்பாற் பக்கத்து வைத்ததே பொருந்தியதெனக்கண்டனராயின் கம்பர் தாமும் ஒரு பெண்பாலைச் சிறப்பிக்குமிடத்து அவ்வாறே கூறி யொழியலாமே? அங்ஙனம் கூறாமல் ஆண்பாற்பக்கத்து 'இக்கருத்தை வைத்தல் தாழ்ந்ததென்று தெரிந்துகொண்டே அதனைக் கூறப்புகுவது இழுக்கேயன்றோ. இவற்றையெல்லாம் நோக்குமிடத்துக் கம்பர் சிந்தாமணியார் கூறிய இக்கருத்தை நன்றாராய்ந்து அக்கருத்தைப் பெண்பாற்கேற்றுதலினும் ஆண்பாற்பக்கத்து வைத்துரைத்தல் சிறந்ததென்று தெளிந்தபின்னேதான் இதுகூறுவதற்கு எழுந்தார் என்று கொள்ளுதலே பொருந்தியதாகும். இன்னும் ஒருவகையானும் இது துணியப்படும்; அது பின் வருமாறு. சிந்தாமணியார் “ஆண் விருப்புற்று நின்றாரவ்வளைத் தோளினாரே” என்றது, இலக்கணை என்பாளைப் பல அணிகளாலும் அலங்கரித்து அங்ஙனம் அவளை அலங்கரித்த மகளிர் அவளுடைய பொலிவழகைக் கண்ட போதின்கண் என அறிக. இதற்கு முழுதும் ஒத்த சமயோசிதம் இராமாவதாரத்து முள்ளது. அது சீதையார் திருமணத்திற்காகக் கோலங்கண்டருளியபோது எனக்கொள்க. ஆங்குக் கம்பர் சிந்தாமணியார் கருத்தையே தழுவிப் பிராட்டியாரைப் பலமகளிர் பலவணிகளால் அலங்கரித்த பின்னர் அம்மகளிர்பலரும் தேவியாரின் பேரழகைக்கண்களாற்பருகித் தகைதடுமாறி நின்றார் என வுரைத்துளார். அங்ஙனம் பிறபெண்டிரெல்லாம் அழகை மாந்திக் களிமயக்குற்றார் என்று கூறுதற்குடம்பட்ட கம்பருக்குச் சிந்தாமணியாருடைய பெண்டிர் ஆண்விருப்புறுங் கருத்துமுடம்பாடாயின், ஆண்டுக் கூறிப்போவர் என்க. கம்பராங்குக் கூறியது,

> கஞ்சத்துக் களிக்கு மின்றேன் கவர்ந்துணும் வண்டு போல
> வஞ்சொற்கள் கிள்ளைக் கெல்லா மருளினா ளழகை மாந்தித்
> தஞ்சொற்கள் குழறித் தத்தந் தகைதடு மாறி நின்றார்
> மஞ்சர்க்கு மாத ரார்க்கு மனமென்ப தொன்றே யன்றோ.

என்பது. இப்பொருத்தமானவிடத்துக் கம்பர் சிந்தாமணியார் கருத்துப்படி அழகு மாந்திய பெண்களெல்லாம் ஆண் விருப்புற்றார்

என்று கூறினாரில்லை. மற்று, மாதரார் அழகுமாந்தினர் என்றராலெனின், மாதர்கள் ஒரு பெண்ணழகை மாந்தினார்களென்றற்கும் மாதர்கள் ஒரு பெண்ணழகைக் கண்டு அவள்பாற் காமந்துய்த்தற்கு ஆண்டன்மையினை விரும்பினார்களென்றற்கும் வேற்றுமை பெரிதன்றே? மற்று 'மஞ்சர்க்கும் மாதரார்க்கும் மனமென்பது ஒன்று' எனாஈண்டுக்கூறியதென்னெனின், இங்கே பெண்ணழகைப்பெண்கள் மாந்தினர் என்றன்றே கூறினார். 'பெண் என்பது மைந்தர் மட்டில் நுகரும் பொருளேயாக நினையற்க; அது பெண்ணுறும் அழகு நுகரப்படும்: ஆணுக்கும் பெண்ணுக்கும் நுகரும்மனம் வேற்றுமையில்லாது ஒரு படித்தாதலான்' என்று கூறியதாமென்க. ஈண்டுச் சிந்தாமணியார் கருத்தைக் கம்பர் தழுவாமைக்கு ஏது விசாரித்தாலானே இவ்விருவர் கருத்துக்கும் ஒருவாறு தாரதம்மியங்காணலாமென்று கருதுகின்றேன். கம்பர் சீதையாரைச் சீராமமூர்த்தியன்றிப் பிறராடவர் விரும்பியதாகக் கூறுதலேயில்லை. அது பிராட்டியார் பெருந்தூய்மைக் கேற்காதென்பது அவர் கருத்தாம். பிறராடவரெல்லாம் பிராட்டியாரைத் தெய்வமாகக்கண்டு கைதொழுது நிற்பரென்றே கூறுவர். இவ்வாறு,

> நைவள நவிற்றுமொழி நண்ணவர லோடும்
> வையநுகர் சொற்றவனு மாதவரு மல்லார்
> கைகடலை புக்கன கருத்துளது மெல்லாந்
> தெய்வமென வுற்றவுடல் சிந்தைவச மன்றே.

எனக் கோலங்காண்படலத்து வந்ததனாலறியப்படும். இம்முறையினின்று தவறி விழைந்தவன் அரக்கன் பட்டபாடே இவ்விராமாவதாரமாவது. சீராமமூர்த்தியைக்கண்டு பலமகளிரும் விழைந்ததாகக் கூறுவதல்லது பிராட்டியைக்கண்டு பல புருஷரும் விழைந்ததாகவே நினைக்கவுஞ்செய்யார். இத்தகைய பேரறிவாளர் பிராட்டியினழகைக் கண்டு பெண்கள் ஆண்மையை விரும்பினாரெனக் கூறுவரோ கூறார்.

இனி "ஆண்விருப்புற்றுநின்றாரவ்வளைத்தோளினாரே" என்ற சிந்தாமணியார் கூற்றினை நோக்குமிடத்து 'அவ்வளைத்தோளினாராகிய பலரும் இவளை நுகர்தற்கு ஆண்மையை விரும்பினார்' என்றற்கண் ஒருமகளைப் பல ஆடவர் விழைகின்றது தொனிக்கின்றது.

"ஆடவர் பெண்மையை யவாவுந் தோளினாய்" என்ற கம்பர் கூற்றைநோக்குமிடத்துப் பலஆண்மக்களும் இவனை நுகர்தற்குப் பெண்மையை விரும்புவர் என்றற்கண் ஒரு மகனைப் பலமகளிர் விழைகின்றது தொனிக்கின்றது. பெண் ஆண்விருப்புறுதற்கண், பெண் தனக்குரிய பணிவு மென்மை அமைதித்தன்மை இவற்றை விட்டுத் தன்னினுயர்ந்த ஆண்டன்மையைவிரும்பித் தான்விழைவுற்றபெண்ணைத் தனக்குப் பணிந்ததாகச் செய்ய நினைக்கின்றது உளது. ஆண் பெண்மையை விரும்பற்கண், ஆண் தனக்குரிய *பெருமையினையும் உரனையும் விட்டுத் தன்னிற்றணிந்த பெண்டன்மையினைவிரும்பித் தான் விழைவுற்ற ஆணுக்குத் தான் பணிந்ததாகச்செய்ய நினைக்கின்றது உளது. "தன்னையுந் துறக்குந் தன்மை காமத்தே தங்கிற்றன்றே" என்று கம்பரே கூறியுள்ளதுக்கேற்ப ஆண் பெண்மைவிரும்புதலிலே தன்னை விடுத்தலிருத்தலன்றிப், பெண் ஆண்மையை விரும்பற்கண் தன்னையுயர்த்தலேயுள்ளது என்று கண்டுகொள்க. இவற்றாற் கம்பர் சிந்தாமணியார் கூறியாங்குக்கூறாமல் மாற்றியுரைத்ததற்குக்காரணந்தேறப்படும். இதுபோலச் சிந்தாமணியார் கருத்துக்களை ஆங்காங்குத்தழுவியும் மாற்றியும் புனைந்தன பலவுள. சிந்தாமணியார் "பருந்துமதனிழலும் பாட்டு மெழாலும்" (காந்த-உ௬அ) என்றார். கம்பர் "பருந்தொடு நிழல்சென்றென்ன வியலிசைப் பயன்றுய்ப்பாரும்" என்பர். சிந்தாமணியார் "வள்ளி வாரிய குழியின் வளர் பொன்னும்வயிரமுமிமைக்கும்" (கேமசரி கூ) என்றார்; கம்பர் "வள்ளிகொள்பவர் கொள்வன மாமணி" என்பர். இவற்றை யெல்லாம் ஈண்டு விரிப்பிற் பெருகும். இத்துணையுங் கூறியவாற்றாற் கம்பர் திருத்தக்கதேவருடைய சிந்தாமணியையும் நன்று பயின்றவரேயாவரென்பது தெளியப்படும்.

(இன்னும் வரும்.)

ரா. இராகவையங்கார்,

பத்திராசிரியர்.

* "பெருமையு முரனு மாடூஉ மேன" என்பது தொல்காப்பியம்.

இராமாவதாரச் செய்யுட்பாடாந்தரம்.

[முன் றொடர்ச்சி.]

சூர்ப்பநகைப் படலம்.

காவற்றின் கற்பமைந்தார் தம்பெருமை தாங்கழறு
ராவற்பே ரன்பினா லறைகின்றே னுமன்றே
தேவர்க்கும் வலியான்றன் றிருத்தங்கை யாளிவளீண்
டேவர்க்கும் வலியாளென் றிளையானுக் கியம்பீரோ.

என்னும் கஉஎ-ம் செய்யுளில், "தேவர்க்கும் வலியான்றன் றிருத்தங்கை யாளிவளீண்—டேவர்க்கும் வலியாளென் றிளையானுக் கியம்பீரோ" என்பது "தேவர்க்கும்வலியான்றன்றிருத்தங்கையாளிவளிங்—கேவர்க்கு வலியானுக்கிளையாளெற்கியம்பீரே" எனக் காணப்படுகின்றது. இராமபிரானை உடன்படுத்தற்குச் சீதைபெருமையினும் தன்பெருமையை மிகுத்துச் சொல்வதே அவள் கருத்தாதலின் பின்னையதே பொருத்த முடைத்து. சீதையினும் தன்னை மிகுத்துச்சொல்வதே அவள் கருத்தென்பது இதற்கடுத்த செய்யுளானும் பெறப்படும். இதனுள் "தம்பெருமை தாங்கழறு—ராவற்பேரன்பினாலறைகின்றேன்" என்பதற்கும் அது சிறந்த இயைபுடைத்தாதல் காண்க.

கரன்வதைப்படலம்.

சூலமும் பாசமுந் தொடர்ந்த செம்மயிர்ச்
சாலமுந் தறுகணு மெயிறுந் தாங்கினா
ராலமும் வெளிதெனு நிறத்த ராற்றலாற்
காலனுங் காலனென் றயிர்க்குங் காட்சியார்.

என்னும் சஉ-ம் செய்யுளில், 'ஆலமும்வெளிதெனுநிறத்தராற்றலால்' என்பது 'ஆலமும்வெளிதெனுநிறத்தராதலால்' எனக்காணப்படுகின்றது. 'ஆற்றலால்' எனக்கொள்ளின் 'சூலந்தாங்கல்' முதலியன அயிர்த்தற்கு எதுவாகாமையின் 'ஆதலால்' என்பதே பொருத்தமுடைத்து. ஆற்றலை மாத்திரம் எதுவாகக்கோடல் சிறப்பின்று.

இயக்கரிற் பறித்தன வவுணரிட்டன
மயக்குறுத் தமரரை வலியின் வாங்கின
துயக்கில்கந் தர்ப்பரைத் துரந்து வாரின
நயப்புறு சித்தரை நலிந்து வவ்வின.

என்னும் ௪௭-ம் செய்யுளில், 'நயப்புறுசித்தரை நலிந்துவவ்வின' என்பது 'வியப்புறுபடைக்கலவிழுமம்பெற்றுளார்' எனக்காணப்படுகின்றது. 'பறித்தல்' 'இட்டல்' முதலிய வினைகள் படைக்கலங்களுக்கே சிறப்புடையனவாதலின் பின்னையதே சிறப்புடைத்து.

ஷை

கொடிதழை கவிகைவான் றொங்கல் குஞ்சரம்
படியுறு பதாகைமீ விதானம் பல்வகை
யிடையிலா தெங்கணு மிசைய மீமிசை
மிடைதலி னுலகெலாம் வெயிலி மூட்பவே.

என்னும் ௪௮-ம் செய்யுளில், 'குஞ்சரம்' என்பது 'குஞ்சமேல்' எனக்காணப்படுகின்றது. கொடி தழை முதலியவற்றிற்குக் குஞ்சமும் இனமுடையன வாதலின் பின்னையதே பொருத்தமுடைத்து.

ஷை

ஆன்றமை யெறிபடை யழுவத் தார்கலி
வான்றொடர் மேருவை வளைத்த தாமென
வூன்றின தேரின னுயர்ந்த தோளினன்
றோன்றினன் யாவருந் துணுக்க மெய்தவே.

என்னும் ௫௨-ம் செய்யுளில், 'தோன்றினன்யாவருந்துணுக்கமெய்தவே' என்பது 'தோன்றினன்கரனமன்றுணுக்கமெய்தவே' எனக் காணப்படுகின்றது. தோன்றினவன் இவன் என்பது பெறப்படுதலின் பின்னையதே பொருத்தமுடைத்து. கரன் என்பது சரித முறையானே பெறப்படினும், மலைவுறுது ஈண்டு வெளிப்பட்டு வருதலே சிறப்புடைத்தென்க.

ஷை

இனைய வாகலின் மானுட னொருவனென் றிவனை
நினைய லாவதொன் றன்றது நீதியா நின்ற
வினையெ லாஞ்செய்து வெல்லலாந் தன்மைய னல்லன்
புனையும் வாகையாய் பொறுத்தியென் னுரையெனப் புகன்றான்.

என்னும் ௭௩-ம் செய்யுளில், 'நினையலாவதொன்றன்றதுநீதியாநின்ற' என்பது 'நினையலாவதிங்கேழைமை நீயமர்க்கியன்ற'; எனக் காணப்படுகின்றது. 'நினையலாவதொன்றன்றதுநீதியாம்' என்பது பொருள் கொள்ளுமிடத்துச் சிறப்பின்றாதலின் பின்னையதே சிறப்புடைத்து.

ஷை

உரைத்த வாசகங் கேட்டலு முலகெலா முலையச்
சிரித்து நின்றவென் சேவகந் தேவரைத் தேய
வரைத்த வம்பியா மலங்கெழிற் றோளமர் வேண்டி
யிரைத்து வீங்குவ மானுடற் கெளியவோ வென்றான்.

என்னும் ௭௬-ம் செய்யுளில், 'சிரித்து நின்றவென் சேவகம்' என்பது 'சிரித்து நன்றுநஞ் சேவகம்' எனக்காணப்படுகின்றது. 'நின்றவென் சேவகம்' என்பது பொருள் கொள்ளுமிடத்துப் பொருத்தமின்றாதலின் 'நன்றுநஞ்சேவகம்' என்பதே பொருத்தமுடைத்து.

ஷை

சூல மற்றன வற்றன சுடர்மழுத் தொகைவாண்
மூல மற்றன வற்றன முரட்டண்டு பிண்டி
பால மற்றன வற்றன பகழிவெம் பகுவாய்
வேலு மற்றன வற்றன வில்லொடு பல்லம்.

என்னும் ௭௭-ம் செய்யுள்,

சூல மற்றன சுடர்மழுத் தெறித்தன சுரிவாண்
மூல மற்றன முசுண்டிக டெறித்தமாப் பிண்டி
பால மற்றன தெறித்தன தண்டுபல் பலவாம்
வேலு மற்றன தெறித்தன வில்லொடு பல்லம்.

எனக்காணப்படுகின்றது. 'பகழி' என முற்கூறிப் பின்னும் 'பல்லம்' எனக்கூறல் பொருத்தமின்றாதலின் பின்னையதே பொருத்த முடைத்து.

ஷை

வானத்தன கடலின்புற வலயத்தன மதிசூழ்
மீனத்தன மிளிர்குண்டல மிதுனத்தன மிடல்வெங்
கானத்தன மலையத்தன திசைசுற்றிய கரியின்
தானத்தன காருத்தன சரமுந்திய சிரமே.

என்னும் ௯௧-ம் செய்யுளில் 'குண்டலமிதுனத்தன' என்பது 'கொண்டலின்மிசையத்தன' எனக்காணப்படுகின்றது. மிதுனராசியை மாத்திரங் கூறுதலும், குண்டலம் என அதற்கு அடை புணர்தலும் பொருத்தமில்லனவாதலின் 'கொண்டலின்மிசையத்தன' என்பதே பொருத்தமுடைத்து.

ஸ்ரீமத்-தாயுமானசுவாமிகள் வரலாறும் அவர் மதக்கொள்கையும்.

(முன்தொடர்ச்சி)

இனித் தாயுமானவருடைய பாடல்களினின்று அவருடைய மதக்கொள்கை இன்னதென ஒருவாறு எடுத்தெழுதுவோம். "பேதித்த சமயமோவொன்றுசொன படியொன்று பேசாது" என்னை?

அன்னையனையெனுஞ்சிலசமயநின்னையேயையாவையாவென்னவே[1]
யலறிடுஞ்சிலசமயமல்லாதுபேய்போலவலறியேயொன்றுமிலவாய்ப்
பின்னேதுமறியாமலொன்றைவிட்டொன்றைப்பிதற்றிடுஞ்சிலசமயமேற்
பேசரியவொளியென்றும்வெளியென்றுநாதாதிபிறவுமேநிலயமென்றுந்
தன்னேரிலாததோரணுவென்றுமூவிதத்தன்மையாங்காலமென்றுஞ்
சாற்றிடுஞ்சிலசமயமிவையாகிவேறதாய்ச்சதாஞானவானந்தமா
யென்னையெனைகருணைவிளையாட்டிருந்தவா றெம்மனோர்புகலவெளிதோ

வேதமுடனாகமபுராணமிதிகாசமுதல்வேறுமுளகலைகளெல்லா
மிக்காகவத்துவிததுவிதமார்க்கத்தையேவிரிவாயெடுத்துரைக்கும்
ஓதரியதுவிதமேயத்துவிதஞானத்தையுண்டுபண்ணுஞானமாகும்
ஊகமனுபவவசனமூன்றுக்குமொவ்வுமீதுபயவாதிகள்சம்மதம்
ஆதலினெனக்கினிச்சரியையாதிகள்போதுமியாதொன்றுபாவிக்கநா
னதுவாதலாலுன்னைநானென்றுபாவிக்கினத்துவிதமார்க்கமுறலாம்
எதுபாவித்திடினுமதுவாகிவந்தருள்செய்யெந்தைநீகுறையுமுண்டோ?
இகபரமிரண்டினிலுமுயிரினுக்குயிராகியெங்குநிறைகின்றபொருளே.

என்று அவர் எடுத்துக்கூறி ஆகாரபுவனம் சிதம்பரரகசியம் என்னுந் தொடர்நிலைக்கண்[2] அவர் பற்பலசமயநெறிகளெல்லாம் தம் தெய்வமே தெய்வம் என்று உறுதியாகச் சாதிக்குந் தன்மையான் அவ்வச்சமயத்தவர் அவ்வகைக் கொள்கைகளை நிலைநாட்டற்குரிய நூல்களும் பலவாயுண்டாக்கியிருக்கிறார்கள்; உண்மை யாராய்வார்க்கு இத்தகையசமயமுமாய் அல்லவுமாகி எல்லாச்சமயங்களும் வணங்குமியல்பதாய் அந்த,

---

1. எங்கு நிறைகின்ற பொருள். செய்யுள் 23.
2. சிதம்பர ரகசியம்.

இயல்பென்றுந் திரியாம லியமமாதி
யெண்குணமுங் காட்டியன்பா லின்பமாகிப்
பயனருளப் பொருள்கள்பரி வாரமாகிப்
பண்புறவுஞ் சௌபான பக்ஷங்காட்டி
மயலறுமந் திரஞ்சிக்ஷை சோதிடாதி
மற்றங்க நூல்வணங்க மௌனமோலி
யயர்வறச்சென் னியில்வைத்து ராசாங்கத்தி
லமர்ந்தது வைதிகசைவ மழகிதந்தோ.

அந்தோவீ ததிசயமிச் சமயம்போலின்
றறிஞரெல்லா நடுவறிய வணிமாவாதி
வந்தாடித் திரிபவர்க்கும் பேசாமோனம்
வைத்திருந்த மாதவர்க்கு மற்றுமற்று
மிந்த்ராதி போகநலம் பெற்றபேர்க்கும்
இதுவன்றித் தாயகம்வே றில்லையில்லை
சந்தான கற்பகம்போ லருளைக்காட்டத்
தக்கநெறி யிந்நெறியே தான்சன்மார்க்கம்.

சன்மார்க்க ஞானமதின் பொருளும்வீறு
சமயசங்கே தப்பொருளுந் தானொன்றாகப்
பன்மார்க்க நெறியினிலுங் கண்டதில்லை
பகர்வரிய தில்லைமன்றுட் பார்த்தபோதங்
கென்மார்க்க மிருக்குதெல்லாம் வெளியேயென்ன
வெச்சமயத் தவர்களும்வந் திறைஞ்சாநிற்பர்
கன்மார்க்க நெஞ்சமுள வெனக்குந்தானே
கண்டவுட னனந்தங் காண்டலாகும்.

அத்தகைய கடவுளின் சொரூபத்தை யான் உள்ளவாறறியவும் என்னையவன் றுணுக்கிக்கொண்டதையும் அறிய (அவன்தான் குருவாய்,)

வந்தெனுடல் பொருளாவி மூன்றுந்தன்கை
வசமெனவே யத்துவா மார்க்க நோக்கி
யைந்துபுல னைம்பூதங் கரணமாதி
யடுத்தகுண மத்தனையு மல்லையல்லை
யிந்தவுட லறிவறியா மையுநீயல்லை
யாதொன்று பற்றினத னியல்பாய்நின்று
பந்தமறும் பளிங்கனைய சித்துநீயுன்
பக்குவங்கண் டறிவிக்கும் பான்மையேம்யாம்.

என்றபிறகு குருவானவர்,

அறிவாகி யானந்த மயமாயென்று
　　மழியாத நிலையாகி யாதின்பாலும்
பிறியாமற் றண்ணருளே கோயிலான
　　பெரியபரம் பதியதனைப் பெறவேவேண்டி
னெறியாகக் கூறுவன்கே ளெந்தநாளும்
　　நிர்க்குணநிற் குளம்வாய்த்து நீடுவாழ்க
செறிவான வறியாமை யெல்லாநீங்க
　　சிற்சுகம்பெற் றிடுகபந்தந் தீர்கவென்றே.

பந்தமறு மெய்ஞ்ஞான மானமோனப்
　　பண்பொன்றை யருளியந்தப் பண்புக்கேதான்
சிந்தையில்லை நானென்னும் பான்மையில்லை
　　தேசமில்லை காலமில்லை திக்குமில்லை
தொந்தமில்லை நீக்கமில்லை பிரிவுமில்லை
　　சொல்லுமில்லை யிராப்பகலாந் தோற்றமில்லை
யந்தமில்லை யாதியில்லை நடுவுமில்லை
　　யகமுமில்லை புறமுமில்லை யனைத்துமில்லை.

இல்லையில்லை யென்னினொன்று மில்லாதல்ல
　　வியல்பாகி யென்றுமுள்ள வியற்கையாகிச்
சொல்லரிய தன்மையதா யான்றானென்னத்
　　தோன்றுதெல் லாம்விழுங்குஞ் சொரூபமாகி
யல்லையுண்ட பகல்போல வவித்தையெல்லா
　　மடையவுண்டு தடையறவுன் னறிவைத்தானே
வெல்லவுண்டிங் குன்னையுந்தா னாகக்கொண்டு
　　வேதகமாய்ப் பேசாமை விளக்குந்தானே.

தானான தன்மயமே யல்லாலொன்றைத்
　　தலையெடுக்க வொட்டாது தலைப்பட்டாங்கே
போனாலுங் கர்ப்பூர தீபம்போலப்
　　போயொளிப்ப தல்லாது புலம்வேறின்றா
ஞானகா ரத்தினொடு ஞேயமற்ற
　　ஞாதுருவு நழுவாம னழுவிநிற்கும்
ஆனாலு மிதன்பெருமை யெவர்க்கார்சொல்வார்
　　அதுவானா லதுவாவ ரதுவேசொல்லும்.

அதுவென்று லெதுவெனவொன் றடுக்குஞ்சங்கை
யாதலினா லதுவெனலு மறவேவிட்டு
மதுவுண்ட வண்டெனவுஞ் சனகனாதி
மன்னவர்கள் சுகர்முதலோர் வாழ்ந்தாரென்றும்
பதியிந்த நிலையெனவு மென்னையாண்ட
படிக்குநிரு விகற்பத்தாற் பரமானந்த
கதிகண்டு கொள்ளவுநின் னருள்கூரிந்தக்
கதியன்றி யுறங்கேன்மேற் கருமம்பாரேன்.

என்று கூறியுள்ளார். தாயுமானவர் பாடல்களுக்கு முகவுரையாயிருக்கும் திருவருள்விலாசப்பரசிவவணக்கமென்பதனுளடங்கிய மூன்று செய்யுளில், "அங்கிங்கெனாதபடி" என்னும் முதற்செய்யுளில் தாயுமானவர் தமது சிவானந்தானுபவத் தேர்ச்சியை ஒருவாறு புலப்படுத்தாநின்றாரென்ப. "ஊரனந்தம்" என்னும் இரண்டாவது செய்யுள் பெரியபொருளாம் பரசிவத்தைப் பணிந்ததாகும். சிவத்தோடு அத்துவிதமாய்க் கலந்துநிற்கும் சத்தியை "அத்துவிதவத்துவை" என்னும் மூன்றாஞ் செய்யுளில் வியந்திருக்கின்றார். [3] இம்மூன்று செய்யுளும், இந்நூற்குப் பாயிரமாகக் கருதப்படும். சிவம் எவ்வாற்றானிற்கும் அவ்வாற்றாற் சத்தியும் நிற்கும் என்பதற்கு ஏற்ப, பாயிரமாகும் பரசிவவணக்கத்து அங்கிங்கெனாதபடி என்னும் முதற் செய்யுளிற்குறித்துள்ள 'எங்கும் பிரகாசமாய் ஆனந்தபூர்த்தியாகி அருளொடு நிறைந்தெது' என்னும் வினாவிற்கு மூன்றாஞ் செய்யுளாகிய பரைவணக்கத்துள்ள, "அத்துவிதவத்துவாகிய சொற்பிரகாசத்தனி" என்பதனையும் அதைப்போன்றே "உயிர்க்குயிராய்த் தழைத்ததெது" என்பதற்கு "ஆனந்தமயமான ஆதி"யென்பதனையும் "மனவாக்கினிற் றட்டாமனின்றதெது" என்பதற்கு "ஏகதத்துவசொரூபம்" என்பதனையும், "வழக்கிடவு நின்றதெது" என்பதற்கு "மதசம்மதம்பெறாச் சாந்த பதவியோமநிலை" என்பதனையும், "சித்தாகி யின்பமா யென்றைக்கு முள்ளதெது" என்பதற்கு "நிட்பிரபஞ்சப்பொருள்" என்பதனையும், "கங்குல் பகலற நின்ற எல்லையுளதெது" என்பதற்கு, "சுத்தமான நிர்விகாரத்தை" என்பதனையும்

3 இவற்றின் விரிபொருளை புரசை மகாவித்துவான் அஷ்டாவதானம் சபாபதி முதலியாரவர்களியற்றியுள்ள "பரசிவ வணக்கவுரை" என்னும் விருத்தியிற்காண்க.

“அது கருத்திற் கிசைந்தது” என்பதற்கு “தடத்தமாய் நின்றொளிர் நின்மயம்” என்பதனையும், “அதுவே கண்டனவெலாம்” என்பதற்குத் “திவ்யதேஜோமயம்” என்பதனையும், “மௌனவுருவெளியதாகவும்கருதியஞ்சலிசெய்குவாம்” என்பதற்கு “சிற்பரவெளிக்குள் வளர் தற்பரமதானபர தேவதையை யஞ்சலிசெய்வாம்” என்பதனையுங் கூட்டிப் பொருளுரைக்க. சிவன் நின்றவழிச் சத்தியும் யெனத் தோன்றும்.

“சத்தியாய் விந்துசத்தி யாய்மனோன் மணிதா னாகி
யொத்துறு மகேசையாகி யுமைதிரு வாணியாகி
வைத்துறுஞ் சிவாதிக் கிங்ஙன் வருஞ்சத்தி யொருத்தியாகும்
எத்திற நின்றானீசன் அத்திற மவளுநிற்பள்.”

முதற்பாட்டில் ‘எங்கும் பிரகாசமாய் ஆனந்தபூர்த்தியாகி அருளொடுநிறைந்ததெது’ என்பது முதல் ‘கங்குல் பகலறநின்ற எல்லையுளதெது’ வரையிலுள்ள ஆறுதொடரில்அமைத்துள அறுவகைத்தன்மையினையும் வாய்பாடுகளாகக்கொண்டு, நாற்கண் முதலிலுள்ள பரிபூரணானந்தம் என்னும் தொடர்நிலைமுதல் சிற்சுகோதயவிலாசம் என்பதிறுதியாகப் பன்னிருதொடர்நிலைகளிலும் பெரியபொருளின் வியாபக இலக்கணங்களை ஒவ்வொன்றிற்கிவ்விரண்டாக ஒருவாறுகுறிப்பித்துப் பரம்பொருளைப்பழிச்சல் செய்கின்றாரெனக் கொள்ளுப. மேற்குறித்தடாக்களுள் “எண்குணமுங்காட்டி சௌபான பக்ஷங் காட்டி மந்திரஞ் சிக்ஷைசோதிடாதி மற்றங்க நூல்வணங்க மௌனமோலி யயர்வறச்சென்னியில்வைத்துராசாங்கத்தி லமர்ந்ததுவைதிக சைவமழகிதந்தோ” “இதுவன்றித்தாயகம் வேறில்லையில்லை, அருளைக்காட்டத் தக்கநெறியிந்நெறியே தான்சன்மார்க்கம்” என்றும், சின்மயானந்தகுருஎன்னுந்தொடர்நிலைக்கண் சித்தாந்தமுத்திமுதலே என்றும் எடுத்தோதியவாற்றால் தாயுமானவருக்கு வேதாந்தத் தெளிவாகிய சித்தாந்தமே சிறப்புடைத்தாதலும் அஃதொன்றே அவர் தமக்கு உடன்பாடென்பதும் பெறப்படும்.

அவர் ஏகான்மவாதி என்பதும் மற்றும் பற்பலகொள்கையினையுடையவர் என்பதும் பொருந்துவனவோ அல்லவோ என்பது ஆய்ந்துணர்வார்க்குப் புலப்படக்கூடியதே.

கல்குளம். குப்புசாமிமுதலியார்.

ஸ்ரீ:

ஆழ்வார்களும் உதவிப் பத்திராசிரியரும்.

ஸ்ரீமாந்-மு. ராகவையங்கார் அவர்கள் ஆழ்வாராதிகள் காலநிர்ணயம் செய்ய முயன்றது அத்தியாவசியமான விஷயம். வைஷ்ணவ ஆழ்வாராசாரியர்களைக் குறித்து நம்மவரே எழுதின், பரம்பரையாய் நாமறிந்தவைகளும், மற்றோரால் எளிதிலறியக்கூடா விஷயங்களும் வெளிப்படும். அவ்வாற்றான் பிறர் கூற்றுக்களை மறுக்கவொண்ணும்.

இவ்வாறு முயலுமிடத்துச் சரித்திரவாராய்ச்சியின் கொள்கைகளை முற்றத்தழுவியும், சுவமதாபிமான முதலியவற்றை இவ்வுண்மை யாராய்ச்சியை யுத்தேசித்து நம்முள்ளடக்கிக்கொண்டும் தான் பிரவேசிக்கவேண்டும். அஃதன்றிப் பிறர்கூற்றுக்களை மறுத்தெழுதவேண்டுமென்றே தலைப்படுவது காலவரையறை செய்வார்க்கடாது. இது நிற்க. அய்யங்கார் அவர்களது காலவாராய்ச்சியைச் சற்றுச் சோதிப்போம்.

முதன்முதல் இவர், தம்பொய்கையார் பெரியார் காலநிர்ணயத்தில் உண்மை விளக்கினதாகக்கூறி, திருமங்கையார் காலத்தை நிர்ணயிக்கப்புகுகின்றார். ஆளவந்தார் காலம். கி. பி. 917- என்று ஸ்ரீமாந்-ம. அ. திருநாராயணாசாரியர் அவர்களின் குறிப்பை மேற்கோளாகக்கொண்டுவிட்டார். அவர் என்ன ஆதாரங்கொண்டு இக்காலம் நாட்டினாரோ, இவர் அறியமாட்டார். அவரை யாம் கேட்டவிடத்து, குருபரம்பரைக் கதைகளையே முற்றவும் எடுத்தெழுதினதாக அவரே கூறியிருக்கிறார். அவர் ஜீவித்திருப்பாராயின் அவ்விதம் எடுத்தெழுதியதை அவரே வெளிப்படுத்தத் தயாராயிருப்பார். அந்தோ! இவ்வாதரவு கிடைக்காமற்போய்விட்டதே! இக்குறிப்பை முக்கியவாதாரமாகக்கொண்ட அய்யங்கார் அவர்கள், இதை வற்புறுத்துவான், கம்பர் காலத்தைக்குறிக்கும் "எண்ணிய சகாத்தம் எண்ணூற்றேழு......" என்னும் அபத்தச்செய்யுளை வேதவாக்கியமாகக் கொண்டு, பிறர் இக்கம்பருக்கு 12-ம் நூற்றாண்டு என்று ஸ்தாபித்திருப்பதை முற்றும் முரண் என்று காட்டப்புகுகின்றார். அதற்கு

ஸ்ரீமாந். வி. கனகசபைப்பிள்ளையவர்கள், விஜயாலயன்பேரனும், ஆதித்தன் மகனும் ஆன ஓர் குலோத்துங்கன் என்பவன் இருந்தான் என்று எழுதியிருப்பதாகவும் அவ்வாறுகூறும் பிள்ளையவர்கள் ஆதாரமின்றிக் கூறுரென்றும் சொல்லிமுடிக்கிருர். விஜயாலயனுக்குக் குலோத்துங்கன் என்று ஓர் பேரனிருந்தானென்பது நாம் அறியோம். புறத்திரட்டில் கம்பர் கவி காணப்படவில்லையாதலால், இவன் புறத்திரட்டுக்காரருக்கு முந்தியவனல்லன் எனல், பன்னூற்றிரட்டில் நாலாயிரச் செய்யுட்களே காணப்படாமையால் அது ஆழ்வார்கள் காலத்துக்கு முந்தியதெனலே ஒக்கும்; ஆகையால் புறத்திரட்டால் கம்பர் காலம்பெற விரும்புபவர் அதன்காலத்தை யறிந்தன்றே எழுதப்புக வேண்டியது? வீரசோழியத்துக்காணும் "கம்பனூரிடையுளது பெருமை" என்பதற்கு "நம்பனூரிடை" என்று பாடாந்தரம் பல ஏட்டுப்பிரதிகளில் உண்டென்று கேள்வி. இவையிருக்க, செந்தமிழ்ப் பத்திராசிரியர் இரண்டுமூன்று பகுதிகளில் கம்பர் காலத்தைக்குறித்து இறுதியாய்க் கம்பர் பிரதாபருத்திரன் காலத்தும் இருந்தார் என்று கூறிவிட்டார். இக்கம்பரோ நாதமுனிகள் காலத்தார்?

இனி, களவழியாரும் வைஷ்ணவாழ்வாரும் ஒருவரே என்பதற்கு ஆதாரம் இருவரும் ஒருபெயர் தரித்தவர் என்பதே. பொய்கையார் என்பது பொய்கைநாட்டைப்பற்றிவந்ததென்பது அறியார் போலும். இது உறையூர்ப்பக்கத்துள்ள நாட்டுக்குப்பெயர். ஒருவர் தன்னாடுவிட்டுப் பிறநாட்டுக்குச் சொல்லின் அவ்விடத்து அவர் தந்நாட்டுப்பெயரான் அழைக்கப்படுவது எக்காலத்தும் நிகழும் வழக்கம். திருமழிசையார், மணக்கால்நம்பி என்பதில் கண்டுகொள்க. இவ்வாறு இருவர் ஒருநாட்டுப்பெயர் வாய்த்திருப்பின் இருவரும் ஒருவரே என்று சாதிப்பது, செந்தமிழ்ப் பத்திராசிரியரும் உதவிப்பத்திராசிரிரும் ஒருவரே என்பது ஒக்கும். இருவரும் ஒருபெயர் உடைமையின் ஸ்ரீமாந்-முத்துத்தம்பிப்பிள்ளையவர்கள் பாரதகாலம் என்பதன் மறுப்பில் இம்மயக்கமடைந்தது இயற்கையே.

7-ம் நூற்றுண்டில் சமயவாதம் முற்றிற்று என்றும் இதன்பின்னும்முன்னும் கிடையாதென்பதற்கும் ஆதாரமென்ன? ஜைநம்பௌத்தம் என்பதாரம்பித்த காலத்திலேயே மாறுபாடில்லாமல் எப்படியி

ருந்திருக்கக்கூடும். அதன்பின் நாளடைவில் மதபேதங்கள் அடங்குவது இயல்பாகவிருக்க 7-ம் நூற்றாண்டில் மாத்திரம் த்வேஷம் முளைத்ததென்பதன் பொருள் யாது?

பின்னும் அய்யங்கார் அவர்கள் ஸ்ரீமாந் து. அ. கோபிநாதராயர் அவர்களின் காலநிர்ணயத்தைத் தாக்கயத்தனிக்கிறார். இவ்விராயர் காலநிர்ணய விஷயமாய் ஆங்கிலங்கற்ற பல வைஷ்ணவரோடும் கூடி சர்ச்சித்தவிடத்து கூடியமட்டும்நிதானமாய் வரையறுக்கப்பட்டிருப்பதாய் அபிப்பிராயப்பட்டார்கள். இப்படியே யெமக்கும் தோற்றுகிறது.

"இவ்வாழ்வார்கள் தன்னுடைச்சோதிக் கெழுந்தருளி நெடுங்காலம் கழிந்தவாறே" என்றெழுதியவரே பின்னும், "அங்கே ஸ்ரீமதுரகவிகளுடைய சிஷ்யரான ஸ்ரீபராங்குசதாஸரை ஸேவித்து" என்றும் "இப்போது எங்களாசார்யர் அடியேனுக்குக்கண்ணிநுண் சிறுத்தாம்பு' என்றும் எழுதியிருக்க, முதலதைக்கொண்டு பின்னவற்றைத்தள்ளுவதென்கொண்டோ விளங்கவில்லை. தெளிவாய் இன்னார் சிஷ்யர் இன்னார் என்று கூறியதைவிட்டு அப்பரம்பரையில் யாரோ ஒருவர் என்று கொள்வது சுவமதாபிமானம் விளக்குகின்றதே தவிர மற்றெதற்கும் பயன்படவில்லை. இக்கூற்று முக்கியமானதென்பதற்கையமில்லை. இதனைக்குறித்து வெளிப்படையாய் திவ்யசூரி சரிதையில் சொல்லாதிருப்பினும் நாதமுனிகள் ஆழ்வார் ஸ்ரீகோசங்கனையடைதற்கேதுவாய் மதுரகவிகளால் இயற்றப்பட்ட பதிகத்தைப்பெற்றார் என்று கூறியுள்ளது. இவ்வாறு வெளிப்படையில்லாத விஷயத்தைப் பின்பழகியஜீயர் அக்காலத்து வழங்கியகொள்கையால் விளக்கினார் என்றுகொள்ளல்வேண்டும். இவ்வாறு ஜீயர் வாக்கியத்தை மறுத்து மதுரகவியார் சிஷ்ய பாரம்பரியத்தில் ஒருவர் என்பது எவ்வாற்றானும் எமக்குவிளங்கவில்லை. ஜீயர்வாக்கைக்கொண்டு செல்லின் ராயர்அவர்கள் செய்திருக்கும் காலநிர்ணயம் முற்றவும் பிழையன்றியிருப்பதாக யாவர்க்கும் நன்குவிளங்கும்.

மற்றும் அபிமானதுங்க னென்பான் ஒருபாண்டியனை ஆழ்வார் பாடியிருக்கிறார்; ஆதலால் இவன் இவர் காலத்தானதல் வேண்டும் என்று அய்யங்கார் அவர்கள்கொள்கை. ஒருவர் மற்றொருவரைத்

தம் கிரந்தங்களில் கூறுவாராயின், கூறுபவரும் கூற்றுக்கிலக்காயிருப்பவரும் சமகாலத்தார் என்று கொள்ளுவது ஸ்ரீமாந் அய்யங்கார் அவர்களுக்கு சகஜமாயிருக்கிறது. உபதேசரத்தின மாலையில் பெரிய ஜீயர் ஆசாரியர்கள் எல்லோரையும் புகல்கின்றார் என்றுகொண்டு இவரும் ஆசாரியர்கள் எல்லோரும் ஒரு காலத்தவர் என்னலாமா? திருவிடைமும்மணிக்கோவையில் பட்டணத்தார் வரகுணன் பக்தியை விஸ்தரித்து எழுதினார் என்றால் இவ்விருவரும் ஒருகாலத்தார் என்னலாமா? வாதவூரர் கண்ணப்பரின் மிக்க அன்புமேலீட்டை வியந்து பாடியிருத்தலைக்கொண்டு மற்ற நாயனார்களைவிட்டு இவரை மாத்திரம் பாடினாரே ஆதலால் இவ்விருவரும் ஒருகாலத்தார் என்னலாமோ?

இதுநிற்க, அய்யங்கார் காலமேற்படாத சுந்தரமூர்த்திகளின் திருத்தொண்டத்தொகையில் பாடப்பெற்றுள்ள நெடுமாறன் காலத்தை நிச்சயித்து இவனைக்கூறும் ஆழ்வாரை யிவன்பின் வைக்கப்புக்கார். இந்நெடுமாறனும், நந்திவர்ம பல்லவமல்லனும் ஒருகாலத்தாராதல் வேண்டும் என்பதற்கு இருவரும் தனித்தனியே நெல்வேலியில் சண்டைசெய்ததாகக் கூறியிருத்தலைச் சான்றாகக்கொண்டு நெடுமாறன் காலம் கி. பி. 710—760 என்று ஏற்படுத்திவிட்டார். இவ் வருஷங்களில் இருந்த நெடுமாறன், அபிமானதுங்கன் அல்லது ஸ்ரீவல்லபனும் இவன் அபிமானித்த பெரியாரும்ஒரே நூற்றாண்டினர் என்று நூற்றாண்டைக்குறிக்கும் வகையில் மயங்கி அதை 7-ம் நூற்றாண்டென்று கூறினார். மேற்கூறியதைக் கொஞ்சமேனும் நினைக்காது பெரியராரிலும் பிற்பட்டவர் என்று சொல்லும் திருமங்கையாரையும் இப்பல்லவமல்லன் காலத்தாராக்கிவைத்து, வியாசத்தினிறுயில் திருமங்கையார் எட்டாம் நூற்றாண்டினர் என்று எழுதியிருக்கிறார். இவ்விடத்துமட்டும் நூற்றாண்டைச்சரியாகக் கூறிவிட்டார்.

இப்பொழுது இவர் மயங்கினவிடத்து நாமும் மயலுறாமல் நோக்கின் அய்யங்கார்அவர்கள்கூற்று அடியில் வருமாறு என்று விளங்கும். பெரியாரும், அவரை யபிமானித்த நெடுமாறன் அபிமானதுங்கன் அல்லது ஸ்ரீவல்லபன் என்னும் பாண்டியனும், திருமங்

கையாரும், அவரால் புகழப்பட்ட நெல்வேலிப்போர் புரிந்த நந்திவர்மன் பல்லவமல்லனும் எல்லோரும் ஒருகாலத்தவர் ஒரு நூற்றாண்டினர் என்பதே.

இவைகளையெல்லாந்தவிர்த்துத் தம்கூற்றுகளுக்குறுதிதேடி ஓர் அருமையான ஆதாரம் கண்டதாகக்கூறுகிறார். இதுவிஷயத்திலும் புதுமையொன்றுமில்லை. இரண்டாம் நந்தி * வர்மன்தானும் மற்றெல்லா அரசர்களையும்போலக் காஞ்சியை வென்றதாகக்கூறுகிறான். இவனுக்கு வயிரமேகன் என்றோர் மறுபெயர் உண்டென்று இவன் காலத்ததல்லாது பிற்காலத்தது என்று சங்கிக்கப்படுகிற சாஸனம் ஒன்றில் சொல்லியிருக்கிறது. இவன் மகாதுஷ்டனென்றும் இவன் அரசாண்டால் தேசத்துக்குப் பெருந்தீங்குவிளையும் என்றும் நினைத்து இவனை சிம்மாஸனத்திநின்று நீக்கி சிற்றப்பனாகிய அகாலவர்ஷகிருஷ்ணனுக்குப் பட்டஞ்சூட்டினார்கள். இவனாண்டது சுமார் 5-6 வருஷம். அதில் அவன் காஞ்சிமுதலியவிடங்களை ஜயித்தலும் அவ்வந்நாட்டரசர்கள் இவனை யஞ்சச்செய்தலும் கொஞ்சமேனும் நினைக்கற்பாலதன்று. ஆழ்வார் இம்மகானையே புகழ்ந்தாரென்று கொள்ளினும் அவன் காலமும் இவர்காலமும் ஒன்றாயிருப்பானேன் என்று விளங்கவில்லை.

ஆதலால் அய்யங்கார் அவர்கள்கக்ஷி, எவ்வாற்றானும் ஒருமைப்பட்டில்லாததினாலும் ராயர்அவர்கள் சரித்திரம் சாஸ்திரவாராய்ச்சியையொட்டிக் கோவையாய் இருத்தலினாலும் அதுவேசரியென்று, ராயர்அவர்கள் வியாசங்களை முற்றப்படித்தவர்களுக்கு நன்கு விளங்காமற்போகாது.

N. S. ரெங்கசாமி அய்யங்கார். M. A.

ஸ்ரீ:

ஆழ்வார்கள் சரித்திரவாராய்ச்சி.

ஸ்ரீமாந்-கோபிநாதராயரவர்கள், M. A., எழுதிய ஆழ்வார்கால வாராய்ச்சியிற் றமக்குள்ள சம்மதத்தைக் குறிப்பாகவும், அவ்விஷயமாக யானெழுதியவற்றில் தமது அஸம்மதத்தைச் சிறப்பாகவுங் காட்டி, ஸ்ரீமாந்-N. S. ரெங்கசாமி ஐயங்காரவர்கள், M. A., எழுதிய விஷயம் மேலே பிரசுரிக்கப்பட்டது. தம்விஷயத்துக்கு "ஆழ்வார்களும் உதவிப்பத்திராசிரியரும்" என்று தலைச்சாத்திட்ட ஐயங்காரவர்கள் கருத்து எவ்வாறாயினும், ஆழ்வார்களது சம்பந்தத்தைச் சிறியேனும் உடையனென்பதைப் பலருமறிய விளக்கியமட்டில் நான் அவர்கட்குப் பெரிதும் நன்றிகூறுங் கடப்பாடுடையேன். இனி, ஐயங்காரவர்கள் என் விஷயங்களை ஆராயவும் அவற்றின் வழுஉக்களையவுந் தொடங்கிய நன்முயற்சி என்னைப் பெருமகிழ்வுறுத்தியது. ஆனால், என்கொள்கைகளை யாராய்ந்து தம்மபிப்பிராயமளிக்க முயன்றதில், அவர்கள் பலவிடங்களில் தவறிவிட்டமை சிறிது துக்கத்தையுந் தருகின்றது. அவ்வாறானதற்குக் காரணம், என் விஷயங்கள் முழுவதையும் ஆராய்வதற்குத் தமக்குப் போதிய அவகாசமின்மையோ அன்றி வேறெதுவோ தெரியவேண்டும். இது கிடக்க.

"பெரியாழ்வார் காலநிர்ணயம்" என்னுந் தலைப்பின்கீழ், என்னால் முன்னர் எழுதப்பட்ட விஷயத்தில், அவ்வாழ்வார் காலத்துக்குப் பின்னெல்லையாக நாதமுனிகள் காலத்தை அளக்குமிடத்து யான்கொண்ட அபிப்பிராயங்கள் இடையினிகழ்ந்த வேறாராய்ச்சிகளால் மாறலாயின. இக்கருத்தைத் திருமங்கைமன்னனைப்பற்றிய என் விஷயத்தே காட்டி, ஸ்ரீமாந்- இராயரவர்கள் கொள்கையையே தழுவியிருக்கின்றேன். நண்பரவர்கள் அதனையறிந்திருந்தால், இம்முறைச் 'செந்தமிழ்' ப்பக்கங்களில் இரண்டொன்று வீணே கழியாதிருந்திருக்கலாம்.

2-வருஷங்கட்கு முன்பு யான் வரைந்த "பொய்கையார்" என்னும் விஷயத்தின்மேலும் ஐயங்காரவர்கள் இரண்டொரு குற்றங் கற்பித்தார்கள். அவர்கள் கருதியபடி, களவழிப்பொய்கையார்க்

கும், பொய்கையாழ்வார்க்குமுள்ள பெயரொற்றுமை யொன்றையே கொண்டு, அவ்விருவரும் ஒருவரென்று காட்டினேனென்பது சிறிதும் ஏற்றதன்று. நச்சினார்க்கினியர் முதலிய உரையாளரால் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் பேசப்பட்ட "யாப்பருங்கல விருத்தி" என்னும் அச்சேறாப் பழைய உரைநூலில், பொய்கையாரொருவர், "இம்மை மறுமை முக்காலமுமுணர்ந்த தமிழ்முநி" என்று கூறப்படுதலோடு, அவர்பாடல்களிற் சிலவும் "இது பொய்கையார் வாக்கு" என்ற குறிப்போடு காட்டப்பட்டுள்ளன. இவ்விருத்தி பழையநூலென்பதற்கு, அதனானே அறியப்பட்ட சான்றுகளும் உண்டு. இதிற்கண்ட பொய்கைபாடல்களில் இரண்டு, பொய்கையாழ்வார் அருளிய முதற்றிருவந்தாதியில் உள்ளன; இது விருத்திகாரர் கருதிய தெய்வப்பொய்கையார் ஆழ்வாரில் முன்னவரே யென்பதை விளக்கியதாம். இனி, எஞ்சிய தெய்வப்பொய்கை பாடல்கள் சேரசோழரையும் பிறவற்றையும்பற்றி அமைந்துள்ளன; இஃது அவ்வாழ்வாரே அரசர்முதலியோரையும் பாடினவரென்பதைக் காட்டியதாம். ஆக, ஆழ்வாராகிய ஒரே பொய்கையாரே அரசரையும்பாடியவரென்று நன்குவிளங்கியதாதலால், களவழியிற்சோழனைப் புகழ்ந்த தன்மை யொன்றுபற்றி ஆழ்வாரின் வேறான பொய்கையாரொருவரை நாம் கற்பிக்கவேண்டுவதில்லையென நியாயங்காட்டி அவ்வியாசம் எழுதலாயிற்று.* யான் அம்முடிபுக்குக் கூறிய காரணங்களையெல்லாம் ஐயங்காரவர்கள் ஆராய்ந்தவர்களாயின், என்கொள்கை ஒருகால் அவர்கட்கு ஏற்றதாகலாம். ஐயங்காரவர்கள் பொய்கையாழ்வாரது பெயர்க்காரணம் உறையூரையடுத்த பொய்கைநாட்டி

---

* 'நல்லறிவுடைய தொல்பேராசிரியர்,' தொல்காப்பியச் செய்யுளியலுரையில், "முத்தொள்ளாயிரமும், பொய்கையார் முதலியோரந்தாதிச் செய்யுளும் புதுவது கிளந்த யாப்பின் மேலன" என்று சங்ககாலத்தை யடுத்த முத்தொள்ளாயிரத்தோடும் முதற்றிருவந்தாதியைச் சேர்த்துக் கூறுதலால் அதுபாடிய பொய்கையாழ்வாரும் சங்கத்தையடுத்த பிறசான்றோருள் ஒருவரென்று அவ்வாசிரியர் கருதினாராயிற்று. ஆகவே, கரிகாலன்வழியில் வந்த கோச்செங்கணானைப்பற்றிக் களவழிபாடப்பட்ட காலமும் சங்கத்தையடுத்ததேயாதலால், அதுபாடிய பொய்கையார் ஆழ்வாரோடு காலத்தாலுமொன்றுதலின், அவ்விருவரும் வேறாகாரென்க.

னடியாக வந்ததென்று தீர்மானித்தார்கள். பொய்கையாரது அவதார ஸ்தலம் கச்சித்திருவெஃகா என்பதே நூல்வழக்காயிருந்த லோடு, அப்பெயர் நாட்டினடியாகவே வரவேண்டுமென்னும் நியதியில்லை யென்பதற்குப் பூதத்தார், பேயாரென்னும் பெயர்களே சான்றாதலால் அவர்கள் கூற்று முடிபாகமாட்டாது. முடிபேயாயினும், பொய்கையாரது பெயர்க்காரணத்தைப்பற்றி என்னாராய்ச்சி நிகழாமையால் அஃது என் கொள்கையை இழுக்குப்படுத்துவதுமன்று.

ஸ்ரீ ஞான சம்பந்தர் முதலிய வைதிக வடியார்க்கும் ஜைனர்க்கும் சமயக் கடும்போர் நிகழ்ந்ததுபற்றி, 7-ஆம் நூற்றாண்டை 'இதற்கு முன்னேனும் பின்னேனும் இவ்வளவு கொடிய சமய வாதம் நிகழ்ந்ததாகக் காணலரிது.' என்று விசேடித்தேன். இதில் என்ன பிழை? அத்தகைய கொடிய சமயப்போரை ஐயங்காரவர்கள் காட்டாமல், என் கருத்தைப் பலவிதமாகப் அலைக்கிறார்கள். ஒருகால் காட்டினும், அவ்வேழா நூற்றாண்டை அது விலக்கிவிடுமோ! இல்லை.

ஐயங்காரவர்கள், தம்போன்ற நல்லறிஞர் பலர் ராயரவர்கள் கொள்கைகளையே தழுவுவதாகவும், ஆதலால் ஏனையர் அவற்றைத் தாக்குவது தகாவென்றும் கருதினார்கள். இக்கூற்று உண்மையாகலாம். ஆனால், இராயரவர்கள் முடிபுகளில் எம்மவர்க்குள்ள ஆசங்கைகளைத் தீர்த்தற்கு இதுவே சமாதானமாகுமா?

நாதமுனிகள் நம்மாழ்வார் காலத்தை எட்டிப் பிடித்தவரென்பதே பின்பழகியசீயர் கருத்தாயின், அவர், "ஆழ்வார்கள் தம்முடைச் சோதிக்கெழுந்தருளி நெடுங்காலங் கழிந்தவாறே அவதரித்தவர் அம்முனிகள்" என்றெழுதுவரா? என்ற என் ஆசங்கைக்கு ஏற்ற சமாதானங் கூறாது, நான் சுவமதாபிமானத்தாற் கூறுவதாக முடித்தார்கள். அவ்வபிமானம் பற்றிப் பேசுவதாக ஐயங்காரவர்கள் எதுகொண்டு அளந்தார்களோ விளங்கிற்றில்லை. நம்மாழ்வார்க்கு நாதமுனிகள் காலத்தை ஒத்துக்கொண்டுவிட்டால், நான் மதாபிமானமின்றிப் பேசுபவனென்பது அவர்கள் கருத்துப்போலும். 3, 4-நூற்றாண்டை அதிகமாக ஏற்றினால், மதாபிமானம் என்பால் வந்துவிட்டதென்பது அவர்கள்முடிபு! ஸ்ரீமாந்-இராயரவர்கள்கரு

த்துப்படியேசென்றால், அதனால்எவ்வளவு மறுப்புரைகள்நிகழுமென் பதை அவர்கள் உணர்ந்தார்களில்லை. நம்மாழ்வார், 11-ஆம் நூற்றாண்டினராய நாதமுனிகள் காலத்தவரானால், ஆழ்வார்களிற் பிந்திய திருமங்கையார் முதலியோர், அந்நாத முனிகட்கும் பிற்பட்டவராவர். அஃதாவது ஏறக்குறைய இராமாநுஜர் காலமாகலாம். நாதமுனிகட்கும் உடையவர்க்கும் ஒரு நூற்றாண்டுக்குங் குறைந்த காலமே இடையிட்டிருத்தலால், அவ்வுடையவர்நாளில் ஆழ்வார்களுடைய செய்திகள் செவ்வையாக அறியப்பட்டிருத்தல் வேண்டுமே? இவற்றை யெல்லாம் ஏறக்குறைய இராமாநுஜர் நாளில் எழுந்த திவ்யசூரி சரிதையுமா விட்டொழியும்? அந்நூல் ஆழ்வார்களிற்சிலரைக் கலியுக வாரம்பத்தே நிறுத்தியிருப்பதாகத் தெரியவருதலின், உடையவர் காலத்திலேயே ஆழ்வார்கள் காலநிலையைப் பற்றிய செய்தி மறைந்துவிட்டதென்பது விளங்குவதன்றோ. அன்றியும் இராமாநுஜர் காலத்தவரும், கூரத்தாழ்வான் சிஷ்யருமான அமுதனார் * தம் இராமாநுஜ நூற்றந்தாதியில் ஆழ்வார்களையெல்லாம் முறையே கூறிப் பின் நாதமுனியாளவந்தார்களைக் கூறுதலால், அவ்விருவர்க்கு முந்தியவர் திருமங்கையார்முதலியோரென்பது மலையிலக்காகும். இவற்றினும் ஆளவந்தார்பால் உபதேசம் பெற்றவர் ஆலிநாடர் முதலாயோர் என்னும் இராயரவர்களது ஆதாரமில்லாவூகவுரை, ஐயங்காரவர்கட்கு உகப்பானது ஆச்சரியம். அவ்வாறானால், ஆளவந்தார்பால் உபதேசம் பெற்றவர் தரத்திலுயர்ந்த ஆழ்வார் கோடியிலும், அவ்வுபதேசகர்த்தா தரத்திற்றாழ்ந்த ஆசாரிய கோடியிலும் சேர்ந்தது விநோதமே. இவற்றால் பின்பழகிய ஜீயர் கூறியவாறு, நம்மாழ்வார்க்கும் நாதமுனிகட்கும் இடையே முழுமங்கலான காலம் சிறிது தூரம் சென்றிருத்தல் நிச்சயமாம். நாதமுனிகள் யோகவலியால் 300-வருஷம் ஜீவிதராயிருந்தாரென்னும் கர்ணபரம்பரை எழு

---

* இவ்வமுதனார் கூரத்தாழ்வான் சிஷ்யரென்பது, அவரந்தாதியின் எ-ம் பாசுரத்தாலும், ஆழ்வான் திருக்குமாரராகிய ஸ்ரீபட்டர்க்கும் இவ்வமுதனார்க்கும் மனஸ்தாபநேர்ந்தபோது பட்டரை நோக்கி அமுதனார், 'நான் ஆழ்வானது ஞானச்செருக்கிற் பிறந்தவன்' என்று கூறியதாகப் பின்பழகிய ஜீயரெழுதியவாற்றாலுந் தெளியப்படும் (குருப, பக். உகந.) இவர், தம்மந்தாதியை உடையவர்திருமுன்பே அரங்கேற்றினார் என்பர்.

ந்தத்தை நோக்கும்போது நம்மாழ்வார்நாதமுனிகளுக்கு இடையினின்ற இம்மங்கலான காலத்தைப் பின்வந்தவர் தொடர்பு படுத்தக்கண்ட முயற்சிபோலத் தோற்றுகின்றது; ஆகவே, "மதுரகவியாழ்வார் சிஷ்யர் பராங்குசதாஸர்" என்ற ஜீயர்கருத்து, மதுரகவிகளை ஆசாரிய கூடஸ்தராகக்கொண்ட சிஷ்ய பரம்பரையில் வந்தவர் பராங்குசதாஸர் என்பதே யன்றி வேறில்லை. இப்பொருள் ஐயங்காரவர்கள் கருதியபடி வலிந்துகொள்வதன்றென்பது, இன்றும் தம் ஆசாரிய கூடஸ்தரையே தமக்குநேரான ஆசாரியராக கூறும் உலகவழக்காலும் விளங்கும். இவ்வாறு கொண்டாலன்றி, குருபரம்பரைகள் முன்னோடு பின் முரணுறிருக்கக் காணமுடியாது. அன்றியும், கலி பிறந்த 43-வது நாளில் அவதரித்தவர் நம்மாழ்வார்*—என்று பின் பழகிய ஜீயர் அவ்வாழ்வார் வரலாற்றுள் குறித்திருக்கின்றார். இவ்வாறு கூறியவரது அபிப்பிராயம், அவர் கருத்தால் எவ்வளவோ காலம் பிற்பட்ட நாதமுனிகளை நம்மாழ்வாருடன் இணைப்பதேஎன்றும் ஆதலால் ஜீயர் கூற்று ராயரவர்கள் கொள்கைகளையே ஆதரிப்பதென்றும் ஐயங்காரவர்கள் துணிந்தது வியப்பேயாம்.

இனி, ஐயங்காரவர்கள் கருதியவாறு, "அபிமானதுங்கன்" என்றபெயர் பாண்டியனொருவனுக்கு உண்டென்று நான் குறிக்கவேயில்லை. நெடுமாற னென்னும் பாண்டியன், பெரியாழ்வார் காலத்தவனே யென்பதற்கு, அவ்வாழ்வார் "நெடுமாறன்.........கொண்டாடுந் தென்திருமாலிருஞ்சோலையே" என நிகழ்காலத்தாற் கூறியிருத்தலைக் காட்டினேன்.† இப்பாண்டியன் அவர்க்குமுந்தியவனாயின் "செங்கணான் கோச்சோழன் சேர்ந்த கோயில்" "பல்லவர்கோன்

* குருபரம்பரை, பக். டுடு.

† "கொன்னவில் கூர்வேற்கோன் நெடுமாறன் தென் கூடற்கோன், தென்னன் கொண்டாடும்" என்பதில், ஆழ்வார் முற்றும் பொதுச் சொற்களாலேயே தாங் குறித்த அரசனைச்சிறப்பித்தாரொன்றால் பொருத்தமன்று. அத்தொடரில் 'நெடுமாறன்' என்பதே அவர் கருதிய அரசன் பெயராகும். இப்பெயர் 'நெடுமாறநாயனார்' 'நெடுஞ்செழியன்' என ஒவ்வோரரசர்க்குச் சிறப்புப் பெயராகவமைந்திருத்தல் கண்டு கொள்க. இப்பெயரை ஸ்ரீசம்பந்தர் காலத்துக்குப் பின்னிருந்த பாண்டியர் புனைந்திருந்ததாகத் தெரியவில்லை.

பணிந்ததில்லை". "தொண்டையர் கோன் செய்த......திருவல்லிக்கேணி" என்றாற் போல இறந்தகாலப் பொருள்விளங்கக் கூறியிருக்கலாமன்றோ. அன்றியும் பெரியாழ்வார் காலத்துப் பாண்டியன் சமயவாராய்ச்சியில் விருப்புற்றிருந்தவனென்றும், ஆழ்வார் அவன் முன்பு பலமதவாதியரை வென்றார் என்றும் சரித்திரப்பகுதி யுள்ளது. இதற்கேற்ப, நெடுமாறனென்னும் பாண்டியன் சமயாந்தரங்களில் அன்புபாராட்டி வந்தவனென்றும், அவன் காலத்தேதான் ஸ்ரீசம்பந்தர் சமணருடன்புரிந்த மதப்போரில் வெற்றிபெற்றாரென்றும் சரித்திரமுண்மையால், பெரியாழ்வார் தங்காலத்தவனாகக் குறிப்பிடும் நெடுமாறனிவனேயாதற்குப் பொருத்தம்பலவுண்டென்று கூறினேன்.* இது சரித்திர முறையின் வழுவியதென்பது ஐயங்காரவர்கள் துணிபு. சிலாதாமிரசாஸனக் கருவிகளில்லாத இவ்விஷயத்தை யாராய்தற்கு மேலே கொண்ட முறையினும் சிறந்த முறை எதுவோ? பெரியாழ்வார் ஆளவந்தார்பால் உபதேசம் பெற்றாரென்பது போலும்!

ஸ்ரீ சுந்தரமூர்த்திகளால் திருத்தொண்டத்தொகையிற் கூறப்பட்ட நெடுமாறன் நெல்வேலிப்போரில் வென்றவன். இவனே "நின்றசீர் நெடுமாறநாயனார்" எனச் சிவனடியார் தொகுதியுள்வைத்துப் பெரியபுராணத்துங் கூறப்படுவோன். இப்பாண்டியனே முதலிற் சமணனாயிருந்து பின் சம்பந்தமூர்த்திகளாற் சைவமதத்தின்கண் திருப்பப்பட்டான். ஆகவே அவ்விருவரும் ஒருகாலத்தவரென்பதாயிற்று. ஸ்ரீசம்பந்தர்காலம் 7-ஆம் நூற்றாண்டென்பது முன்னரே யளக்கப்பட்ட விஷயம். "பெரியாழ்வார் காலநிர்ணய"த்தில் நெடு

* பெரியாழ்வார் பழைமைக்கு அவர் வழங்கிய சொற்களும் வழக்குகளுமே தக்க சான்றுகளாம். இவராண்ட 'பட்டினங்காப்பு' என்னும் வழக்கு முத்தொள்ளாயிரத்து ஒரு பாட்டில் வந்துள்ளது. இதுபோலவமைந்த வழக்குகள் அவர் வாக்கிற் பல. அவ்வாழ்வார், பிற்காலத்ததாகிய பிள்ளைத் தமிழைக் கையாளுதலால், அவரும் பிற்பட்டவரென்று ராயரவர்கள் கருதுகிறார்கள். தமிழ் நாட்டில் அநாதியே வழங்கிய முறையில் கண்ணபிரானது பிள்ளைச்செயலை ஆழ்வார் கூறினரேயல்லது, பன்னிரு பாட்டியலிற் கண்ட இலக்கணத்தைக் கற்று அவர் பாடவில்லை. அப்பாட்டியல் பிள்ளைத்தன்மைகளை முதலில் சிருஷ்டித்துக் கொடுத்ததுமன்று. சேனாவரையர் முதலிய பழையவாசிரியர் 'கபிலரதுபாட்டியல்' 'பரணரதுபாட்டியல்' எனக் காட்டுதலால் பழங்காலத்தேயே பிள்ளைத்தன்மைகளைப் புனைந்த வழக்கமுமிருந்ததென்று தேறப்படும்.

மாறன் நெல்வேலிப்போர்புரிந்தது நந்திபோதனுடன்போலும் எனக் கருதியது பின் மாறினமையால், திருமங்கையாரைப்பற்றிய என் ஆராய்ச்சிமுடிவில், பெரியாழ்வார் நெடுமாறனிருந்த 7-ஆம் நூற்றுண்டினரென்றும், திருமங்கையார் 8-ஆம் நூற்றுண்டினரென்றும் சிறிதுமாறி உண்மையெழுதலாயிற்று. ஆதலால், ஐயங்காரவர்கள் கருதுமாறு, நூற்றுண்டில் மயங்கினவனல்லனென்பதையும், பலரையும் ஏககாலத்தவராகக் கூறினேனல்லனென்பதையும் அவர்கட்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திருமங்கைமன்னன், தம் அட்டபுயகரப்பதிகத்தில் தொண்டைவேந்தனை வென்று கச்சிப்பதியில் தம் புகழ்பரப்பிய வயிரமேகனைப்பற்றிக் கூறியிருப்பதை விளக்கி, அவன் இன்னுன் இன்னகாலத்தவனென்று என்னுராய்ச்சியிற்கண்ட வுண்மைகளையெழுதினேன். நண்பரவர்கள், அவை சிறிதும் புதுமையல்லவென்று தம்மை முதலில் சமாதானப்படுத்திக்கொண்டு, அதிற் சில குற்றங்கூறத் தொடங்கினுர்கள். அவர்கள் கூறுவன:—தந்திவர்மனுக்கு வயிரமேகனென்னும் பெயர்குறிக்கும் சாஸனம் பிந்தியதென்பதும், அவ்வரசன் மிகக் கொடியோனுதலால், ஆழ்வார் அவனைப் பாடாரென்பதுமே. வயிரமேகனென்னும் பெயர் குறிக்கும்சாஸனம் சிறிது பிந்தியதுபற்றி அதிற்கூறப்படும் விஷயமும் ஒதுக்கத்தக்கதெனல் என்ன நியாயம்? கி-பி. 813-ல் உண்டான அச்சாஸனம் திருமங்கைமன்னன் பாசுரப்பொருளோடு மிகப்பொருந்த, கச்சியைவென்ற தந்திவர்மனுக்குரிய வயிரமேகனென்னும் பெயரைக்குறித்தலால், பெரிதும் உறுதியையன்றே அடைகின்றது. தந்திவர்மன் கொடியோனுயிருந்ததுபற்றி அவனை சிம்மாசனத்தினின்று இறக்கி அவன் சிற்றப்பனை அகாலவர்ஷகிருஷ்ணனுக்குப் பட்டஞ் சூட்டினுர்களென்று ஐயங்காரவர்கள் கூறினுர்கள். பிரசித்திபெற்ற ஆசிரியராகிய டாக்டர் பண்டார்காரவர்கள் தமது தக்ஷிணசரித்திரத்தில், இத்தந்திவர்மன் ஆட்சிபுரிந்து இயற்கையினிறந்தபின்னரே அகாலவர்ஷன் பட்டத்துக்கு வந்தானென்பதற்கு இரண்டு சாஸனங்களைக் காட்டியிருத்தலோடு, இவன் மகாவீரனுய் திக்விஜயஞ்செய்தவனென்றும், அநேக தர்மஞ்செய்துள்ளானென்றும், இவனைப் பட்டத்தினின்று இறக்கி

ரர்கள் என்று சொல்வதற்கு ஆதாரமில்லையென்றும் தக்க மேற்கோள்களுடன் எழுதியிருக்கிறார்கள் (Bombay Gazetteer, Vol I, Part II., pp 194. 195.). உண்மை இவ்வாறிருக்க, இத்தந்திவர்மனாகிய வயிரமேகன் தப்முடிபுக்குப் பேரிழுக்குக்கருதல்பற்றி, ஐயங்காரவர்கள் சினங்கொண்டு அவனை அலங்கோலப்படுத்திவிட்டார்கள். இத்தந்திவர்மனாகிய வயிரமேகன் தென்னாட்டில் ஏகசக்கராதிபத்தியத்தை நாட்டினவனென்பதையும் முற்கூறிய நூலிற் காணலாம். தந்திவர்மனில்லையாயின், தங்கொள்கைக்கேற்ப, ஆழ்வார்குறித்த வயிரமேகன்வேறொருவனை அவர்கள் காட்டிவிடலாமே. முடிவில், அவர்கள், "ஆழ்வார் இம்மகானையே புகழ்ந்தாரென்று கொள்ளினும் அவன்காலமும், இவர்காலமும் ஒன்றாயிருப்பானேன்" என உசாவினர். இதற்கேற்றவாறு கூறும்படி, ஆழ்வார் பாசுரம் அமைந்துள்ளதா என்று பார்ப்பேன்.

"மன்னவன் தொண்டையர்கோன்வணங்கு நீண்முடிமாலை வயிரமேகன் தன்வலி தன்புகழ்சூழ்ந்த கச்சி அட்டபுயகரம்" என்னும் திருமங்கையார் பாசுரத்தொடரில் வயிரமேகனது புகழ்சூழ்ந்த கச்சியென்றுமட்டுஞ் சொல்லாது, அவன் வலிசூழ்ந்த கச்சியென்றும் கூறப்பட்டுள்ளது. இங்கு 'வலி' யென்பது வயிரமேகனது படைவன்மையைக் குறிக்கும். இவ்வாறு அவ்வரசனது படைவன்மையுங் கச்சியைச் சூழ்ந்திருந்ததாக ஆழ்வார் கூறுதல், அவன் தப்நாளில் ஜீவிதனாயிருந்தவனென்பதைக் குறிப்பித்தபடியாம். ஆழ்வார்நாளில் வயிரமேகனில்லாதவனாறல், கச்சியைச்சூழ்ந்திருந்ததாக அவன் வலியைப் பற்றி பேசநேர்ந்திராது. ஆறல், "சூழ்ந்த" என இறந்தகாலத்தாற் கூறியதென்? என ஒரு கேள்விபிறக்கலாம். அச்சொல், இங்கே காலத்தையுணர்த்துநோக்கத்தோடு நின்றதன்றி, தன்மைநிகழ்ச்சியைமாத்திரம் குறித்து நின்றதென்பது, அதற்குப்பின்னுள்ள மற்ற அடைமொழிகளால் நன்குவிளங்கும். இவ்வாறு தன்மையுணர்த்துவதற்கு இறந்தகாலவிடைநிலை பிரயோகிக்கப்படுமென்பதை, "நின்ற திருக்கோலம்" "இருந்தநம்பி" என்பனபோன்றவற்றாலும் அறிக. ஸ்ரீ சேஷகிரிசாஸ்திரியாரும் வயிரமேகன் ஆழ்வார்காலத்தவனேயாகவேண்டும் என்று பொதுவாகக்கருதியிருத்தலுங்காண்க.*

* தமிழ்க்கவி சரிதமுடிவு.

ஆகவே, மேற்றெடர், மனக்கோட்டமின்றிநோக்கின், ஆழ்வாரும் வயிரமேகனும் ஏககாலத்தவரென்பதையே உணர்த்தவல்லது. மேலும், வேறெவரும் எடுத்தாளாத வயிரமேகனைத் திருமங்கையார்மட்டும் எடுத்தாளக்காரணமும்வேண்டும். கோச்செங்கணன், பல்லவன் இவர்போல் இவ்வரசனும் திருமாலடிமைசெய்தமைபற்றிப் புகழப்பட்டவனாகச் சொல்வதற்கில்லை . ஏனெனில், அரசர்களைப்பற்றித் திருமங்கையார் கூறியவிடங்களையெல்லாம் ஆராய்ந்துவந்தால், "செங்கணன் கோச்சோழன் சேர்ந்தகோயில்" என்றும், "பல்லவர் கோன் பணிந்ததில்லை" என்றும், "தொண்டையர்கோன் செய்த திருவல்லிக்கேணி" என்றும் திருமாலடிமை செய்த தன்மையுடன் இணைத்தே அவர்கள் புகழப்படுதலையும், இவ்வயிரமேகனைப்பற்றிய விடத்தில் மட்டும் அவன் "தன்வலி தன்புகழ்சூழ்ந்தகச்சி யட்டபுயகரம்" என அவ்வடிமைத்திறமின்றியே கூறப்படுதலையும்காணலாம். மேலும் அட்டபுயகரப்பதிகத்திறுதியிற் பேசப்படுமவன் அத்திருப்பதியோடு சம்பந்தமுடையவனாகச் சொல்லப்படவேண்டியிருக்க, அஃதின்றி, கச்சியுடன் இணைக்கப்பட்டுள்ளான். இவற்றால் நாம் அறியக்கிடப்பன வென்னவெனில், கோச்செங்கணன் முதலியோர் போலத் திருமாலடிமைத்திறம்பற்றி ஆழ்வார் வயிரமேகனைப் புகழ்ந்தவரல்லரென்பதும், தங்காலத்திருந்த தொண்டைவேந்தனையும் வென்று கச்சியிற் றன்வலிபரப்பிய அவ்வரசனது பெருமை, தம் போன்ற வீரரை வியப்புறுத்த, அதனால், பரகாலர் அவனைக் கச்சியுடனிணைத்துப் பாடத் தூண்டப்பட்டாரென்பதுமேயாம். திருமங்கைமன்னன் காலநிர்ணயத்திற் கமைந்த பல காரணங்களோடும் இவ்வயிரமேகன் விஷயம் பொருந்தியுள்ளது.

இதுவரை, ஐயங்காரவர்கள் என் விஷயங்களிற் கண்ட குற்றங்கள் நேர்மையான குற்றங்களல்லவென்பதை மட்டுங் காட்டலாயிற்று. சரித்திரவாராய்ச்சி யென்பது மனக்கோட்டமின்றி ஆராய்வார்க்கல்லது மற்றவர்களுக்குப் பயனளிப்பதன்றாகையால், நடுநிலையுடைய செந்தமிழபிமானிகளே எம்மிருவர்கூற்றுக்களிலுமுள்ள தாரதம்மியங்களை ஆராயவல்லார்.

மு. இராகவையங்கார்,

உதவிப் பத்திராசிரியர்.

தனிச்செய்யுட் கோவை.

———— ——:o:————

[முன்றொடர்ச்சி.]

திருக்கைலாயபரம்பரைத் திருவாவடுதுறையாதீனத்துத் திராவிடமஹாபாஷ்ய கர்த்தராகிய ஸ்ரீலஸ்ரீ சிவஞானயோகிகள் காஞ்சியில் எழுந்தருளியிருந்தகாலத்தில், அச்சுவாமிகளது அளத்தற்காகாக் கல்வியில் அழுக்காறுற்ற புலவர் சிலர் "அங்கோழிமுட்டை" "எங்கணவன்" என்னும் முதற்குறிப்புடைய இரண்டு செய்யுள்கட்குப் பொருள்கூறுமாறு சுவாமிகளைக் கேட்டுவிட, அப்போது அவற்றிற்கு அரிய விருத்தியுரையியற்றி யனுப்பி, அன்னார் செருக்கை அடக்கியருளினர். இப்பாடலுரை முன்பு ஞானபோதினியில் மேலேகண்ட சரித்திரக் குறிப்பின்றி வெளியிடப்பட்டிருப்பதாகத் தெரியவரினும், சுவாமிகள் இயற்றியவுரையென்னும் குறிப்புடன் எம்மிடமுள்ள பழையவேடொன்றில் அவ்வுரைகாணப்பட்டமையால், அவற்றைச் செந்தமிழபிமானிகளும் படித்துக் களிக்குமாறு, ஈண்டு வெளியிடலாயிற்று. அவை வருமாறு:—

"அங்கோழி முட்டை யுறப்புவி யாண்ட லாலவிந்த
வெங்கோழி முட்டைமுன் சேரா வுருப்பவெல் வெம்மைபஞ்சே
ருங்கோழி முட்டை வரும்பாலை போல வுருக்குமந்தோ
செங்கோழி முட்டைக் கருப்போ லெழுந்த செழுந்திங்களே."

இது, தலைவன் வினைவயிற் பிரிந்துழி இளவேனிற் பருவங் கண்டு ஆற்றாளாய தலைவி தூதுவிடவேண்டுங் கருத்தினளாய்த் தோழிக்குச்சொல்லியது.

அழகு நிறைந்த உறையூரானது முட்டுப்பாட்டினை யுறும்படி உலகத்தை யாண்டு செவ்வந்திப்பூக்காரணமாக மண்மாரியாலவிந்த வெவ்விய அரசனுருட்டுந் திகிரியும், அவனைக்கொல்லவந்த மேகமும், அவன் கையிற் படைக்கலமும் போலும் வெப்பமும், கொளுத்த யானையும், முள்ளும் பரம்பாநின்ற பாலைநிலத்தைப் போல உருத்தலைச் செய்யாநிற்கும், செவ்விய கோழியினது முட்டையாகிய கருவைப்போலெழுந்து ஒளிர்கின்ற வளவிய திங்களொன்றே; என்பது பதப்பொருள்.

அம்-அழகு. கோழி-உறையூர். முட்டை-முட்டுப்பாட்டினை. வெம்கோ வெவ்விய கோ. 'ழி' ய்யும், 'மு' வ்வும், 'டை' யுமாகிய எழுத்துக்கள் பின்னர்நிற்ப இவற்றின் முன்னர்ப் பொருந்தும் 'ஆ' வும், 'உரு' வும், 'ப' வ்வு மாவன—ஆழி, உருமு, படை என்பனவாம். வெம்மை-வெப்பம். 'பம்' என்னும் எழுத்தைச் சேர்ந்த கோழியாவது-கோழிபம். மூன்-கண்டகம். தைவரல் - தடவுதல். செங்கோழி-செவ்விய கோழி.

"பொன்னி வளந்தரு நாடே நாடு" எனவும் அதனுள்ளும் "ஊரெனப் படுவது உறையூர்" எனவும், எல்லாராலுஞ் சிறப்பித்துச் சொல்லப்படும் அத்துணைச் சிறப்புடைய நகரத்தையுங்கெடுத்தவனென்பது தோன்ற, தன்மையலங்காரம் பெற 'அங்கோழி' என்றாள். 'முட்டு' என்பது, "அன்றின் முட்டா தணையுஞ் சோலை" என ஒழிதலையும், "முட்டிலா மூவறு பாடை மாக்களும்" எனக் குறைதலையும், "வேற்றுமை முதலியபொருளின் முட்டுங்காலை" என இயைதலையும், "கன்று முட்டி யுண்ணச் சுரந்த" என மோதுதலையும், "குன்று முட்டிக் குழியில் வீழ்ந்தால்" என இடறுதலையும், "கூர்முனை யயில்கொடு முட்டுவார்" எனப் பொருதலையும், "கண்டுமுட் டடிகண் மார்கள் கேட்டுமுட்டி யானும்" என உணவொழிதலையும், "மாகமுட்டிய மாளிகை" என அளாவுதலையும், "முன்புற் றறியா நெடுங் கானவாவிக் கரையை முட்டினாள்" எனச் சேர்தலையும், "முட்டடி யின்றிக் குறைவுசீர்த் தாகியும்" என நிறைதலையும், "யாமையார் நடையாண் முட்டதானதே," 'வீடுமுட்டுற்றது,' 'முட்டுக்கால்கொடுத்தான்' என்றாற் போலும் பிறபொருள்களையும் உணர்த்தும்; அவற்றுள், ஈண்டு ஒழிதலை உணர்த்தி நின்றது. ஒழிதல் இடையறுதல். உறவென்னுஞ்செயவெனெச்சம் 'குளநிறைய மழைபெய்தது' என்றாற்போலக் காரியப் பொருட்டாய் 'ஆண்டு' என்னும் வினையெச்சத்தோடும், அது 'அவிந்த' என்னும் பெயரெச்சத்தோடும், அது 'கோ' என்னும் வினைமுதற் பெயரோடும் முடிந்தது. 'புவி' என்பது முதலாகுபெயராய்ச் சோணாட்டை யுணர்த்திற்று. செவ்வந்திப்பூவாற் பூசுவுடம்பும், பிறர் தூற்றும் பழிமொழியாற் புகழுடம்பும் ஒருங்கேயிழந்தானென்பது தோன்ற, இரட்டுறமொழித லென்னும் உத்தியான் 'அலரால்' என்றாள். செவ்வந்தி யென்பது சொல்லெச்சம். இழிபு தோன்ற இறந்த என்னாது 'அவிந்த' என்றாள். 'அவிந்த' என்றமையால் அவித்தற்கு வினைமுதல் வருவிக்கப்பட்டது. 'அலரால்' என்புழி மூன்றனுருபு ஏதுப்பொருட்கண் வந்தது. 'வெங்கோ' என்பது பிறிதினியைபு நீக்கிய விசேடணத்தான் விசேடிக்கப்பட்டது.

அவன் உரிமையாகக் கொண்ட ஆழியும் படைக்கலமுமே அத்தீங்கு விளைதற்குக் காரணமாய்ப் பகையாயின வென்பது தோன்ற, அவ்விரண்ட

னையும் பகைப்பொருளாகிய மேகத்தின் இருபாலுஞ் சேரவைத்துக் கூறினாள். அவற்றின் கொடுமையும் இழிபுந் தோன்ற, நேரே கூறாது வேறு வேறு பிரித்து ஈற்றெழுத்துக்களை முன்னும், முதலெழுத்துக்களைப் பின்னுமாகமாற்றி "காமவிதி கண்முக மென்மருங்குல் செய்யவாய், தோமிறுகடினி சொல்லமிர்தம்" என்றாற்போல எழுத்து நிரனிறையாகக் கூறினாள். 'முட்டை' யென்பது "எஞ்சிய வெல்லா மெஞ்சுத லிலவே" என்பதனால் "உகர விறுதி யகர வியற்றே" என்னும் விதி பெற்று, "விப்பீ யென்பவற் றொப்பது" "நொப்போ வெளவுரிஞ்" என்றாற்போல வல்லெழுத்துமிக்கு முடிந்தது. 'உருப்ப' என்புழியும் இஃது ஒக்கும். "ஈமுங் கம்மு முருமென் கிளவியு, மாமுப் பெயரு மவற்றோ ரன்ன" என்பதனால் உரும் என்பதற்குப் புணர்ச்சிக்கண் விதித்த உகரம், "அஞ்சொன் மடவார்க் கருளு" "புனைமலர்த் தாரகலம் புல்லு" எனவும் "அழுக்கற்றகன்றாரு மில்லை" எனவும் ஆன், மான், கோன், ஊன் எனவும் புணர்ச்சியிடைக்கண் விதித்த எழுத்துக்கள் ஈற்றின்கண்ணும் வந்து அவயவமாய் நின்றாற்போல, ஈண்டும் ஈற்றின்கண் அவயவமாய் வந்து, 'உருமு' என நின்றது. உருமு என்பது ஆகுபெயரான் மேகத்தையுணர்த்திற்று. இனி இதனை ஆகுபெயராக்காது இயற்பெயராயே வைத்து, 'இபம்' என்பதனை ஆகுபெயரான் இபக்குரன்மேலேற்றலும் ஒன்று. 'ஆழி' என்பதும் ஆகுபெயரான் அதன் வெம்மைமேல் நின்றது. 'வெல்' என்பது-உவமவுருபு; "புல்லப் பொருவப் பொறப்பப் போல, வெல்ல வீழ வாங்கவை யெனாஅ" என்பவாகலின்; அது "மாணெழில் வேய்வென்ற தோளாய்" என்னும் பாலைக்கலியுரையானுங் காண்க.

முன்னர் உடன்போக்கின்கண் தலைவனொடு பாலை நிலத்துச்செல்வுழி ஆண்டு வாழும் யானைகளைக் கண்டு அஞ்சினாட்கு இப்பொழுதும் அதனை நினைப்புழி உருவெளியாகத் தோன்றலின் இத்தன்மையதாகிய அஞ்சத்தகும் உருவுடையதென்பது தோன்ற 'கோழிபம்' என்பாள், வாயான் அவ்வாறு கூறுதற்கு அஞ்சி, 'பஞ்சேருங்கோழி' எனப் பிறிதோராற்றாற் கூறினாள், "தலைக்குறை கமலமே சாருந் தன்மைபோல்" என்பது போல. கோழிபம்-பண்புத்தொகையாய் ஈறுபோய் ஆதிநீண்டுஉயிரேறி 'பாசிழை' 'கோழரை' போல முடிந்தது. முட் டைவரும் என்பது, முட் டீதுபோல இருமொழிக்கண்ணும் செய்கைபெற்று நின்றது. தைவரல் சமாதிக்குணம். பாலை யென்பது, ஈண்டு நிலனென்னும் முதற்பொருண்மேனின்றது. போலவென்பது இடைச்சொல்லடியாகப்பிறந்தபெயரெச்சம். உருக்குமென்பது நிகழ்கால வினைமுற்று. அந்தோ என்பது இரக்கக்குறிப்பின்கண் வந்த இடைச்சொல்.

செம்மை-கோணுமை; அஃது ஈண்டு, நன்மையை உணர்த்தி நின்றது. முருகவேளுவப்பப் பராய்க் கடனுக விடுக்கப்படுதலும், அவனுயர்த்த கொடிக்கு இனமாதலும், வைகறையுணர்த்தலும் முதலிய நற்குணங்களுடைமையின் 'செங்கோழி' என்ருள். முட்டைக் கரு-சாரைப் பாம்பு போல இருபெயரொட்டுப் பண்புத்தொகை- 'செழுந் திங்கள்' எனவே, நிறைமதியென்பது பெற்ரும். உருப்பன பலவற்றுள்ளும் திங்களைப் பிரித்தமையின் ஏகாரம் - பிரிநிலைக்கண் வந்தது. திங்கள் எழுங்கால் செவ்விய கோழிமுட்டை போல் எழுந்து செழுவிய பின்னர்க் கோழியின் குணத்திற்கு மாருக இரவினைச்செய்தலும், அறுமுகக் கடவுட்கு வழிவழி யடிமைபூண்ட எனக்குத் தீங்கு விளைத்தலும் முதலிய தீக்குணங்களைச் செய்யாநின்ற தென்பாள் 'செங்கோழி முட்டைக் கருப்போ லெழுந்த செழுந்திங்களேபாலை போல வுருக்கும்' என்ருள். மெய்ந்நிறத்தாற் கோழி முட்டையை யொத்த திங்கள், தொழிலால் அதற்கு மாருய்ப் பாலையை யொத்த தென்பது கருத்து. இதுவே இவ்வாறு செய்யின் ஏனைய என் செய்யா என்பது இசை யெச்சம் 'ஆதலால், தாழாது தூதுவிடல் வேண்டும்' என்பது குறிப்பெச்சம்.

ஐம்பெரும்பாவங்கட்கும் ஒருவாற்ருன் உய்தி கூடும், திருவடிபிழைத்தலாகிய பாவத்திற்கு எவ்வாற்ருனும் உய்தி இன்று' என்பதற்குச் சான்ருகத் தன்னுடைய இருமுதுகுரவரும் தம்முட்கூறும் இக்கதையைப் பலகாலும் அணுக இருந்து கேட்ட தலைவி, அவன் கொடுங்கோலோச்சி யுருட்டிய திகிரியும், ஒன்னலரையன்றி உற்ருரையுங் கொல்லும் அவனது படைக்கலமும், அவனைக் கோறற்கு அடர்ந்தெழுந்த மேகமும் நினைக்குந்தோறும் நிகழ்ந்தாற்போலத் தனக்கு அச்சஞ்செய்தலின், அவற்றினுங்கொடியது பிறிதில்லை யெனத் தெற்றெனவுணர்ந்தாள். பின்னர்த் தலைவனுடன்போக்கின்கண் பாலையிலுள்ள வெப்பமும் முட்களும் யானைகளும் தனக்கு அச்சஞ் செய்யுங் கொடுமையை நோக்கி 'அவற்றை இவற்ருேடு ஒப்பிடலாம்; இவற்ருன் ஒப்பிடப்படுவது பிறிதில்லை' எனத் துணிந்தாள், பின்னர்க்கற்பின்கண் தலைவன் பிரிந்துழித் திங்கள் விளக்கமும் குளிர்ச்சியும் வெண்மையுமாகிய மூன்ருனுந் தன்னையுருக்கும் உருப்பத்தை நோக்கி 'அம்மூன்றுமுடைய பாலையையே யொக்கும் இம்மூன்றுமுடைய திங்கள்' என அனுபவித்த பொருளை அனுபவிப்பதனேடு மெய்ப்பாடு தோன்ற உவமித்தாளாதலின், இது புனைந்துரைபற்றிவந்ததல்லாமை யறிக.

திணை-பாலை. கைகோள்-கற்பு. கூற்று-தலைவிகூற்று. கேட்டவள்-தோழி. இடன்-வினைவயிற்பிரிவு. காலம்-எதிர்காலம். பயன் - தலைவி தூதுவிடுவாளாதல்; முன் மேலது உரையிற்காட்டப்பட்டது. மெய்ப்பாடு-

அசைவுபற்றிவந்த அவலம். எச்சமும் முன்னர்க் காட்டப்பட்டது. இப்பாலைத் திணை, நெய்தற்றிணை முதலியவற்றிற்கும் பொதுவாய் நிற்றலின் பொருள்வகையும் முல்லைத் திணைக்குரிய மாலைப்பொழுதில் நிகழ்வனவற்றைக் கூறிப் பாலைப்பொருளான் முடித்துரைத்தலின் துறையும் அமைந்தவாறு காண்க. இதனால், தலைவிக்கு அவலமும், தோழிக்கு அச்சமும் பிறந்தது. இங்ஙிகரன பாலைத் திணையாதல் "ஒருகுழை யொருவன்போல்" முதல் "கொடுமிடனுஞ்சில்" ஈருகக் கிடந்த பாலைக்கலிகளான் உணர்க. இளவேனிற்காலத்துத் திங்கள் சிறந்து விளங்குதல் "எஃகிடைதொட்ட" என்னுங்கலியினுள் "துணிநீராற் றாய்மதி நாளா லணிபெற" என்பதனானும் உணர்க. "எஃகிடைதொட்ட கார்க் கவின் பெற்ற வைம்பால் போன்மையற விளங்கிய துவர்மணல்" என்பதனால், உவமைக்கு உவமைகூறலும் மரபாமாறு அறிக. நான்குஅடியும்-தலையாகெதுகை; சொற்பின் வருநிலை யலங்காரமுமாம். இந்தப்பாட்டு சங்கிரணவலங்காரம். இன்னும் விரிக்கிற் பெருகும்.

"எந்தனங்கள் பட்டுருவி யென்கணவன் போனவழி
கந்தமலர்ப் பூங்குழலீர் காணீரோ—நுங்கணவன்
வாழையிலே கண்டேன் வரப்பிலே கால்கண்டேன்
றாழையிலே கண்டேன் றலை."

என்பது என்னுடைய முலைகள் தனது மார்பிடத்து அம்புபோற்பட்டு உருவியதாக எண்ணி என்னுடைய கணவன் என்னை யகன்று போதற்கு உபாயமான வழி கந்தமலர்ப் பூங்குழலை யுடையீர் காணீர்கொல்லாம் எனத் தலைமகள் காதற்பரத்தையரை நோக்கிப் புலந்து கூறியவாறும்.

தனது முலைகள் அழுந்துந்தோறும் அவற்கு வெறுப்புப் பிறக்கின்றமை தோன்ற 'எந்தனங்கள் பட்டுருவி' எனவும், அங்ஙனமாயினும் எனக்கே யுரியனென்பது தோன்ற 'என் கணவன்' எனவும், காரணத்தைக் காரியமாக உபசரித்து 'போனவழி' எனவும், புறக்கோலத்தான் மயக்குவதல்லது உள்ளன்பில்லீ ரென்பது தோன்ற 'கந்தமலர்ப் பூங்குழலீர்' எனவும், "என்னை யிவ்வண்ணங் காணீரோ" என்புழிப்போலச் செய்யீரோ வென்னும் பொருள்பட 'காணீரோ' எனவுங் கூறினள்.

ஓகாரம்-எதிர்மறைக்கண்வந்தது; வரவே கண்டீரே யென்றதாயிற்று. "உகரம் பெறூஉ மாவயி னான" என்பது உகரம் பெற்று உறழ்ந்து முடியுமெனப் பொருள் தந்து நின்றாற்போல, 'பட்டுருவி' என்பது பட்டுருவியதாகவெண்ணியெனப் பொருடந்து நின்றது.

இனி, அதுகேட்ட பரத்தையர் 'யாம் ஒரு ஞான்றும் அவனை மருவி யறியேம்' என வஞ்சித்து உரைப்ப, அதனை மறுத்துக் கூறுகின்றாள், 'நுங்கண் அவன்வாழையிலே கண்டேன்' என: (பொழிலூடு நும்மிடத்து அவன் மடியிலிருந்து வாழுங்காலத்துக் கண்டேன் என்றவாறும்.) 'ஆண்டு யாங்கள் எம் இயல்பிற் சென்றுழி எதிர்ப்பட்டமையான் சிறிது பொழுது உரையாடிக்கொண்டிருந்த மாத்திரையே யல்லது பிறிது இல்லை' என வஞ்சிப்ப, அதனை மறுத்துக்கூறுகின்றாள், 'வரப்பிலே கால் கண்டேன்' என; (நுமது சேரிப்புறக்கொல்லை வரப்பின்கண்ணே அவனது அடிச்சுவடு கண்டேன் என்றவாறும்.) 'ஆண்டும் ஒருகருமப்பொருட்டு வந்ததன்றிப்பிறிதில்லை' என வஞ்சிப்ப, அதனை மறுத்துக் கூறுகின்றாள், 'தாழையிலே கண்டேன் றலை' என; (நும் ஊடலைத்தவிர்த்தற்பொருட்டு அவன் நும்மைத்தாழ்ந்து வணங்குங்கால் அவனது தலையினை யான் கரந்திருந்துகண்டேன் என்றவாறும்) இனி, 'வரப்பிலே கால் கண்டேன்' எனத் தலைமகள் கூறியவழிப் பரத்தையர் 'அவன்தலைவனுதலான் எமது சேரிக்கடைத்தலைக்கண் தமியனாய் வாரற்பாலனோ' என வஞ்சிப்ப, அதனை மறுத்துக் கூறுகின்றாள், நும் ஊடலைத் தவிர்த்தற்பொருட்டு அவன் நும்மைத் தாழுங்காலத்துக் கண்டேன் அவனது தலைமைப்பாட்டினை என' என்றலுமாம். 'தலைமை கண்டேன்' என்பது 'கற்கறிக்க நன்கு அட்டாய்' என்பது போலக் குறிப்புமொழி. கால்-ஆகுபெயராய் அதற்கு அருளெனப் பொருள்கொண்டு 'வரப்பிலே கால்கண்டேன்' என்பதற்கு வாராநின்ற நீர்ப்பெருக்கில் அவன் நும்மிடத்து வைத்த அருளுங்கண்டேன் என, பரத்தையர் சான்யாருடப்புக்குழி நீர் அவரை ஈர்த்து எழ ஆண்டுத் தலைவன் தோன்றிக் கையாற் பிடித்தெடுத்துக் கரைசேர்த்தமை தோன்றக் கூறினாளெனினும் அமையும். தலைவிகூற்றாகிய மறுத்துரை மூவகைப்பட நிகழ்ந்தமையின் அவற்றிற்கு ஏலப்பரத்தையர்கூற்றாகிய வஞ்சித்துறைகளும் வருவிக்கப்பட்டன.

இதனாற் போந்த பொருள்:—என் கணவனை என்னை இகப்பித்து நும் வயத்தனாக்கினீர்; அஃது எவ்வாறு அறியப்பட்டதென்னில், அவன் பொழிலகம்புக்கு நுங்கண் கூடிவாழுங்காலத்துக் கண்டேன்; அஃதன்றிச் சுவட்டையும் நுமது சேரிப்புறக்கொல்லை வரப்பிற் கண்டேன்; அஃதன்றி அவன் நும்மை வணங்குங்கால் அவனதுதலையினையும் ஒளித்திருந்துகண்டேன்; ஆதலால், தெற்றென அறியப்பட்டது; எனத் தலைமகள் காதற் பரத்தையரை நோக்கிப் புலந்து கூறியவாறாயிற்று.

இவ்வாறு வேறுவேறு கண்ணழியாது, உங்கண் அவன் வாழையிலே வரு அப்பிலே கண் கால் தேன் தாழ் ஐயிலே கண்டு என்றலைக் கண்டேனெனக் கொண்டுகூட்டி, நும்மிடத்து அவன் வாழுங்கால் வாராநின்ற நீர்ப்

பெருக்குப்போல வேய் காலாநின்ற தேனின் நற்சுவையைத் தாழ்ப்பதாய வியப்பினைத் தரும் இதழின்கண் உறுங் கண்டினை என்றுகோடலை யான் கண்டேனென்றாளாக ஒரு முடிபு செய்யினும் அமையும். கண்-ஆகுபெயரான், வேயானியன்ற பாசனத்தை யுணர்த்திற்று. ஐ-வியப்பு; அஃது ஆகுபெயரான் இதழ்மேல் நின்றது. பரத்தையர்க்கு இருமலும் ஈளையும் முதலிய நோய்கள் இயல்பாதலான், 'ஐயிலே கண்டு' என்பதற்கு ஐ, வளி, பித்து என்னும் மூன்றனுள் ஒன்றாகிய ஐயினில் எழாநின்ற கண்டு என இழித்தற்குறிப்பாகக் கூறினுமாம். என்றுகோடல்-ஈண்டுப்பருகுதல்.

இனி, இவ்வாறன்றி, வனத்தின்கண் கணவற்காணாதிழந்தாளாக அவ்வனங் காவல்பூண்டுறையும் அணங்கினை யெதிர்ப்பட்டு 'என் கணவன் போன வழி அறியீரோ' எனப் பொறையுயிர்த்த தலைமகள் வினாய வினாவும், 'நெருநலிற் குலையீன்கதலியை நோக்கி நின்று என்னோடு ஒருமாற்றங் கூறினான்; அப்பொழுது நுங்கணவன் கருத்தை அவ்வாழையின்கட் கண்டேன்; இற்றைஞான்று புனத்துவரப்பின்கண் அவனது அடிச்சுவட்டைக் கண்டேன்; அஃதன்றி, அவனது தலைச்சுற்றுக்கூறையும் தாழைமரத்தின் மேல் வைத்திருக்கக் கண்டேன்; இவ்வளவே யான் அறிந்தது என வனத்தணங்கு இறுக்கும் இறையுமாகப் பொருளுரைத்தலு மொன்று. இப்பொருள் கொள்வழி 'நின்கணவன்' எனப் பாடம் ஓதுக. 'கந்தமலர்ப் பூங்குழலீர்' என்பதனை ஒருவரைக்கூறும்பன்மைக்கிளவியாகக் கொள்க. பின் வந்த கணவனும், காலும், தலையும்-ஆகுபெயர். வாழையும் தாழையும்-திணை மயக்கத்தான் உளவாயின. ஏகாரங்கள்-அசை.

சங்கமரீஇய சான்றோர், அவரோடு ஒருதன்மையராகிய சான்றோர் செய்த இலக்கணத்தின் வழாத செய்யுட்களின் பொருணுட்பங்களை எம்மனோர்பாற் கேட்பின் அமையும்: 'வாழையிலே' 'தாழையிலே' என்றற்றொடக்கத்து இழிவழக்குக்களும், 'எந்தனங்கள்' என்றற்றொடக்கத்துச் சந்திவழூஉம், ஒருமையும் பன்மையும் மயங்கக்கூறுதற் றொடக்கத்துப் பால்வழூஉம், 'எந்தனங்கள்' 'நுங்கணவன்' என்றாற்போலும் எதுகைவழூஉம், பருப்பொருளும், வெளிறிய சொல்லும் முதலிய குற்றங்களை யுடையவாய இலக்கணத்திற் புதுக்க இன்னோரன்ன செய்யுட்களை இவ்வாறு செய்யுட்செய்ய வல்லாரைக் கேட்க அமையுமல்லது, எம்மனோரையும் அவரோடு ஒருவராக்கி இவற்றையும் ஒன்றாகக்கருதிக் கேட்டல் அமையாதென அறிக. இனி, இச்செய்யுட்கு இலக்கண முறையான் விதிகூறி வழுக்களை யமைத்துக்கொண்டு இன்னும் பொருள் விரித்துரைத்தனமாயின், அத்திறம் அறியவல்லார் ஆண்டு இன்மையின், உரைத்திலமென்க.

இராமசாமிக்கவிராயர்,

(இன்னும் வரும்.)

சேற்றூர்ச் சமஸ்தான வித்வான்.

"எலிபெண்டா" வெனும் "கரிபுர"க் குகைகள்.

"எலிபெண்டா" வென்பது பம்பாய்நகரத்துக் கருகிலே யுள்ளதோர் தீவு. இத்தீவானது குகைகளெனும் மலைமுழைகளுக்கு ப்பேர்பெற்றது. எலிபெண்டாக்குகைகள் என்று பூகோள சாஸ்திர மறிந்த நிபுணர் சிலர் தாமியற்றியுள்ள சிற்சில நூல்களிற் பொதுப் படக்குறிப்பிட்டிருக்கிறார்களேயன்றி அக்குகைகள் எவ்விதமாயமை ந்துளவென்பதையும், அவ்வமைப்புக் கேற்றவண்ணம் இந்துக்களா யினோர் ஆடிப்பாடி வணங்கும் சித்தமுத்தசுத்தனாகிய, அம்பலவாண ரது அடிசேரும் சாயுஜ்யபதவியைத் தரக்கூடிய அங்குள்ள விக்ர கங்களையும், உருவமைப்புகளோடுகூடிய கற்பாறைகள் அவற்றுள் (அக்குகைகளுள்) பிரதிஷ்டிக்கப்பட்டிருக்கும் நேர்மையையும், இன் னும் விக்ரகங்களைப் பார்த்தளவில் பக்திமிகுந்து பரவசராய் ஜனங் கள் கைகூப்பி "எதுவும் எம்மையாளுமீசன் செயல்" எனத்தியா னித்துத் தினந்தவறாது அக்குகைகளினருகேகூடித் தோத்திரஞ்செய் துபோவதையும் விவரித்துக்குறிப்பிட்டிருப்பதைக் காணோம். மே லும் மாட்சிமைதங்கிய எட்வர்டுசக்ரவர்த்தியின் குமாரரான வேல்ஸ் இளவரசர் தமதன்பிற்கும் பிரியத்திற்குமுகந்த மனைவியாருடன் பம்பாய்க்கு வந்திறங்கியபோது அவர்கள் 'எலிபண்டா' வென்ற இக்கரிபுரக்குகைகளையும் அவற்றினது அற்புதங்களையும் பார்த்தா னந்திக்குமாறு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது; ஆயினும் சிற்சில காரணங்களையொட்டி ராஜவமிசத்தினர் அக்குகைகளைப்பார்ப்பது தடங்கற்படலாயிற்று; எனினும் அவர்களது வரவையனுசரித்து நம் மாகாணக்கவர்னர் லார்டு ஆம்ப்தில் அந்நகருக்குச்சென்றிருந்த போது இவ் "எலிபெண்டா" க்குகைகளைப் பார்த்துவந்தனர். ராஜ ராஜர்களையும் மற்றோரையும் 'காந்தமானது ஊசியையிழுப்பது' போலிழுப்பனவும் இந்தியாவின்மேற்குப்பாகத்தில் சீருஞ்சிறப்புமிகு ந்து நம்மவர் பலராலும் புகழுடன் பேசப்படுவனவுமான அக்குகை களின் ஆதிபத்தியத்தைத் தென்மொழி யொழுகுந் தென்னாடரும் அறிந்து தமக்கொருவேளை அவையினைப்பார்க்கவேண்டுமெனும் பே

ராவல் மிகுந்திருக்கின் அவைகளின் நிலை இத்தன்மையதென்று தெரிந்துகொள்வதற்காகவும் வேண்டி யாம் இவ்வியாசமெழுதத் துணிந்து முன்வந்தனம்.

ஆதிபத்தியம்.

பம்பாய்நகரத்திற் கருகிலேயுள்ள இத்தீவுக்கு ஆங்கிலர் 'எலிபென்டா' (Elephant=யானை) என்று பெயர்வைத்திருக்கிறார்களெனினும் இந்துக்கள் அத்தீவைக் கரிபுரி என்றழைக்கிறார்கள். ஆங்கிலர் கொடுத்திருக்கும்பெயரை அர்த்தத்துடன் ஓதுகையில் "யானைகள்புகும் குகைகள்" என்று பொருள்படுவதற்கிணங்க இந்துக்கள் கொடுத்திருக்கும் கரிபுரி எனும்பெயரைப் பிரித்துப் பார்ப்போமானால் கரி - யானை, புரி - ஊர், என்று பொருள்படுவது செவ்வனே விளங்குகின்றது. குகைகளிருக்கும் இவ்விடத்திற்கு யானையையொட்டிப் பெயர்கொடுக்கப்படுவானேன்? முதன்முதல் போர்த்துக்கேசியர் (Portuguese) இந்தியாவுக்கு வந்தபோது மேற்சொல்லிய தீவின் தென்பாகத்துறையில் இறங்கினார்கள். அப்பழைய துறைக்குக் கொஞ்சதூரத்துக்கப்பால் சிகிமுக்கல்லில் செதுக்கப்பெற்றதோர் யானையுருவந்தென்பட அதனைப்பார்த்து அத்தீவுக்கு 'யானைத்தீவு' என்றுபொருள்படுமாறு எலிபென்டா (Elephanta) என்று பெயரிட்டார்கள். அப்போதிருந்து அப்பெயரே எவராலும் வழங்கப்பட்டுவருகிறது. பிறநாட்டார் அப்பெயர்கொடுத்ததைப் பின்னர் அறிந்த இந்துக்கள் தந்தாய்பாஷையில் கரிபுரி என்று கூப்பிடலாயினர். அதேபெயரை இன்றும் பாரஸீகா, குஜராத்தியர், மராத்தியர், பட்டியர், காம்பெயர்முதலினோர் சொல்லிவருகிறார்கள். அப்போது தென்பட்டயானையானது நீளத்தில் 13 அடியும், உயரத்தில் 7 அடி 4 அங்குலமுமுடையதா யிருந்தது. ஆனால் 1814-வது வருஷம் செப்டம்பர் மாதம் அச்சிலையின் தலையும் கழுத்தும் தெறித்துவிழுந்தன. பின்னர் அதன்மீதெவரும் கவனஞ்செலுத்தாராயினர். அத்தீவுக்குத் 'தமாஷா' வாகவோ, காரியார்த்தமாகவோ போனவர்களனைவரும் கஜத்தின்கீழ் நிழலுக்காகத்தங்குவதும், அப்படித் தங்கும்போது சும்மாவிராமல் தம் கையிலிருக்கவல்ல கட்டையினுலாவது கல்லினுலாவது யானையின் காற்புறங்களையும் வாலையும் மற்

றப்பாகத்தையும் வேடிக்கையாய்வருத்துவதும் வழக்கமாயிருந்ததன் காரணமாக தலையிழந்துநின்ற யானைச்சிலையானது உறுப்புக்களுள்ள பாகங்களில் சிதைவுபட்டு உருவம்மாறி ஒன்றுந்தோன்றாப் பெருங் கற்பாறையாய்ப் பூமியிற்பதிந்துவிட்டது. ஆயினும் முதன்முதல் காணப்பட்ட குறியினைக்குன்றிவிட லாகாதென்று அப்போதிருந்த அதிகாரிகள் கருதி 1864-வது ௵ல் யானைச்சிலையாயிருந்து உருவ மாறிக்கிடந்த கற்பாறையைப் பம்பாயின்கணுள்ள விக்டோரியா தோட்டங்களுக்குக் கொண்டுவந்தார்கள்.

கரிபுரக்குகைகள்.

கரிபுரியெனுங்காரணப்பெயர் கொண்டுநிற்கும் அத்தீவில் கற் பாறைகள்நிரம்பி அவையினுள் பெருங்கற்களா யிருப்பவைகளின் கீழ் இடைவெளியிருந்து மானிடர் உட்செல்லுதற்குகந்தவாறு வழி யேற்பட்டிருப்பதால் அவைகளைப்பார்த்தோர் தரணியைத்தவிர்த் துத்தனியேசென்று தவம்புரிவதற்கேற்ற விடமெனக்கருதலாயினர். இரண்டுகற்களின் அடிப்புறத்தில் விரிந்து மேற்புறத்தில் மூடிபோட் டதுபோல் ஒன்றுசேர்ந்திருக்க விரிந்திருக்கும் வழியேசென்றால் எவ் விடங்கொண்டுபோய் விடுமோவென்று சிலருக்குச் சாதாரணமாய் அபிலாஷையிருக்கக்கூடும். அவ்வபிலாஷையைப் பூர்த்திசெய்து கொள்ளவேண்டிப்பலர் பலவிதங்களில் முயற்சிசெய்திருந்தபோதி லும் அவர்களது முயற்சிமுழுதும் கைகூடுதற்கிடமில்லாமற் போய் விட்டது. ஏனெனில் கற்பாறைகளுக்குக்கீழாக அகன்று ஒரு பெ ரும் வாயிலுக்குள் போவதுபோல் விரிவாயுள்ள ஐந்துகுகைகள் கா ணப்பட்டபோதிலும் 'பெரியகுகை' (Great Cane) எனப்பெயரிட ப்பட்டகுகையைத்தவிர ஏனையகுகைகளுக்குள் எவருஞ்சென்றது கிடையாது. இக்குகைகள் ஆறும் நூற்றாண்டில் கன்னடதேசத்தி லரசாண்ட பாணாசுர சக்கரவர்த்திக்காக அமைக்கப்பட்டனவென்று பலர் சொல்லுகிறார்கள். இந்தப்பெரிய குகையானது சமுத்திரமட் டத்திற்கு 250 அடி உயரத்தில் கரிபுரியின்கண் வடவாமுகாக்கினி யைநோக்கி நிற்கின்றது. பின்னும் ஒன்றன்மேலொன்றாய்ப்பதிந்து பலர்சேர்ந்து புரட்டினாலன்றி இரண்டொருவரால் சிறிதும் அசைக்க முடியாத ஆகிருதியுடன் அமைந்துள்ள கற்பாறைகளில் அக்குகை

கள் செயற்கையினலானவையோவென்று பார்த்தோர் சந்தேகித்த ற்கு இடங்கொடுக்குமாறும் அவை புலப்படுகின்றனவாம்.

மேலேகாட்டிய குகைகள் ஐந்தினுள் பெரியகுகையைத்தவிர மற்றக்குகைகளுக்குள் எவரும்போனதில்லையென்றுதெளிவாகக்கூறி னேம். அப்பெரியகுகையின் முன்வாயினின்று உட்சென்றால் சுமார் 130 அடிதூரம்வரை யாதொரு தடங்கலுங்கிடையாது. கிழக்குமேற்காய்ப்பார்த்தாலும் இதேநீளந்தான். குகையின் உயரம் 17 அடி. சாதாரணமாய்க் கோயிலுக்குமுன் பக்கத்திற்கட்டப்பட்டிருக்கும் கருங்கல்லினலாய மண்டபங்களுக்குக்கீழாக ஒருவன் நின்று பார்க்குமளவில் அவனது கண்களுக்கு அப்பெருமண்டபத்துக் கற்றூண்கள் மேலிருக்கவல்ல கற்கூரையிற்பதிந்து அதனைத்தாங்கிநிற்பதும், அத்தூண்களில் விக்ரகங்கள் செதுக்கப்பட்டிருப்பதும் எவ்விதம் புலப்படுமோ அவ்விதமே இக்கரிபுரப் பெரியகுகையின்கணுள்ள வொவ்வொன்றும் புலப்படுமென்பதற்கு ஆக்ஷேபணை யில்லை. சமுசார பந்தத்தினின்றும்நீங்கி நெற்றியில் விபூதியிட்டு உச்சிமுதல் உள்ளங்கால்வரை காஷாயவஸ்திரமுடுத்திக் கையிற் கபாலமேந்தித் தண்டுகமண்டலதாரியாய்ப் புவியைத்துறந்த புண்ணியரோவெனப் பார்த்தோர் பக்திமேலீட்டால் பரவசராகும் வண்ணம் சர்வேசுரனின் திருநாமங்களை யுச்சரித்து முத்திமார்க்கத்தில் முனைந்து முயற்சிக்கும் தவசிகட்கேற்றவிடமென்றும் அக்குகையினைக் கூறுதலியலும். என்னே அதன்மகிமை! இக்கலியுகத்தில் தவசிகளைக்காண்பதரிதாயினும் சாமானிய மக்கள் பலர் பரம்பரையாய் இக்குகைக்கு வந்து தரிசித்துப்போவதை விரதமாகக் கொண்டிருக்கிறார்கள். இப்போதும் இந்துமத சாம்பிரதாயத்தை யனுசரித்துவரும் உற்சவாதிகளில் இந்துக்களாயினர் அக்குகையினைத் தரிசிக்கத் தவறுவதுமில்லை.

குகையின் மகத்துவம்.

சைவசமயிகளானலும் வைஷ்ணவர்களானலும் பார்ஸீகர்களானலும் மராட்டியரானலும் மற்றும் இந்துமதப் பற்றுடையோரெவரானலும் இக்குகை ஸ்தம்பங்களிற் காணப்படும் உருவமைப்புக்களைப் பார்த்து மனம் பூரிப்பது பெரும்வழக்கமாயிருந்து வரு

கிறது. இது அவர்கள் செய்த பூஜாபலனே அல்லது அக்குகையின் மகத்துவமோ யாம் கூறவல்லேம். வைஷ்ணவத்தையே நாடியுள்ள தந்தை அக்குகையின்கணுள்ள உருவமைப்புக்களைப்பாராமல் தனக்கு அவைகளின்மீது பற்றில்லையென்று கூறினும் அவனது புத்திரன் இக்குகைக்குவந்து நேரில் அவ்வுருவமைப்புக்களைப் பார்ப்பனேல் அவைகளின்மீது தனதுபற்றுதலைக் காட்டாதிரான். பனிய ஜாதியைச் சேர்ந்தோரே பெரும்பாலும் அக்குகைக்குவந்து விக்ரகங்களைத்தொழுது போவார்கள். பிப்ரவரி மாதத்து அமாவாசைக்குமுன்பாகவரும் மகா சிவராத்திரிதினத்தில் அக்குகைக்குமுன்பாக மதசம்பிரதாயச் சந்தையொன்று நடைபெறும். சிவராத்திரி மகோற்சவமானது சிவோற்சவங்களில் பிரசித்தியடைந்த தாதலானும் கரிபுரியின்கண் இம்மகோற்சவம் வெகு மும்முரமாய்க்கொண்டாடப் படுவதாதலானும் பண்டைக்காலத்தில் அதுவொருசிவன்கோவிலாயிருந்திருக்கவேண்டுமென்றே நாம் தீர்மானிக்கவேண்டி வருகின்றது. தெய்வபக்தி யுள்ளோனொருவன் இக்குகையின்முன்னின்று பிரார்த்தனை புரிவதை மோக்ஷசாம்பிராஜ்ய சாசனங்கொடுத்து உஜ்ஜீவிக்குமாறு மன்றாடும் நரனெனச் சிலர் கூறிப்பரிகசிப்பதுமுண்டு. அதற்குகந்தபடியே அங்குவந்து பிரார்த்திப்போருட் பெரும்பாலர் தமக்கு மோக்ஷவீடளிக்கும்படி சிந்தியாது ஐஹிக (இவ்வுலகத்து) சுகங்களையே சாசுவதமாகவெண்ணி பரோபகாரியென்ற பெயர் நீங்கப் பணம்வந்தாற்போதுமென்றும் வியாபாரத்துறையில் மற்றோரைக்காட்டிலும் தமக்குப்பெருத்தலாபம் கிடைத்தால் அதற்கீடாக ஏழைகள் சிலருக்கு அன்னம்போடுவதற்கும் சிறிதும் பின்வாங்குவதில்லையென்றும் எடுத்தகாரியம்கைகூடினல் (அதுஎவ்வளவு துராகிருதமாயினும்சரி) அபிஷேக அர்ச்சனாதிகள் செய்துவைக்க ஏற்பாடு செய்துவைப்பதாகவும் துதிக்கின்றனர். இதனல் ஆமுஷ்மிக (பரலோக) வாசனை அவர்களிடமிருந்து அறுபட்டுப்போகின்றது. (உலகத்தில்) உயிருடனிருப்பது தம்பெயர் சிறப்பதற்கென்றே அவர்கள் கருதுகின்றனர். தாம் செய்யும் பிரார்த்தனைகளனைத்தும் தமக்கு வேண்டுவனவற்றைக் கொடுக்கும்படி சர்வாந்தர்யாமியான பகவானுக்கு அர்ப்பிதஞ்செய்யும் வஞ்சமெனக் கூறுவோருமுளர். அக்குகைக்கு முன்னிலையில் இந்துக்களில் பலவருணத்தவர் வந்து

பிரார்த்தனைகள்செய்தாலும் அவர்களனைவரும் ஒரேதெய்வத்தைக் கொண்டாடுவது கிடையாது. நம்ஆரிய மூதாதைகள், இயற்கையிலேயே உலகத்திற்காணப்படும் இடிமுழக்கம், மழை, வானம், பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் முதலான பஞ்சபூதங்களையும் மூலாதாரப்பொருளிற் சேர்க்கப்பட்டதும் மனுஷ்யர் கண்களுக்குப் புலப்படாததும், எங்கும் வியாபித்திருக்கக்கூடியதுமான பரம்பொருளோன் றிருப்பதாகவும் அப்பொருளினை இப்புவியின்கண் இயற்கையாய் நாம்பார்க்கும் மேற்குறித்தவைகட் கதிபதியாகப் பற்பலரூபங்களில் இந்திரன், வருணன், அக்கினி, சூரியன், வசுக்கள் மாருதம், ருத்திரன் முதலான பற்பலபெயர்களை வைத்துத்தொழுதுவந்ததை இந்துக்கள் கைவிட்டவரல்லர். இந்துக்கள்தொழும் உருவமைப்புக்கள் இப்பெரியகுகையில் காணப்படுகின்றன. புதிதாய்ச்செல்வோனுக்கு அச்சிலைகளின் சரிதத்தைப் புராணங்களிலாவது அவைகளின் ஆதிபத்தியத்தை நன்குணர்ந்தோர் சொல்லக்கேட்டாவதுதெரிவித்தாலன்றி அங்குள்ளவை நன்குவிளங்கா. மேலும் அச்சிலைகளனைத்தும் சிவபிரானையே குறிப்பிடுகின்றனவாதலான் அவைகள் அக்குகையினுள் நிறுத்தப்பட்டிருக்கும் ஒவ்வோர் அங்கத்தையும் பற்றி உணராதுவிடுவதிற்பயனில்லை. ஒவ்வொரு சிலையின் அடிப்புறத்திலாவது பக்கத்திலாவது சுவர்போன்றுபின்னர்த் தடைபடும் கற்பாறையிலாவது பாதிதெரிந்ததும் பாதிதெரியாததுமாய்க் காணப்படும் லேகங்களைக்கொண்டு இன்னின்னசிலை இன்னின்ன தெய்வத்தையுணர்த்துவதென்றும் அதன் சரிதம்த்தன்மையதென்றும் குறிப்பிட்டு முன்னோருட்சிலர் அருளிச்செய்திருக்கிறார்கள். குகையானது அங்கமங்கமாய்ப் பிரிவுண்டிருப்பதனால் அவ்வவற்றிற் பொதிந்துள்ள சிலாவிஷயாமிசங்களை ஒவ்வொன்றாய்த் தொடுத்தெழுதுமாறு பலங்கொடுக்கவேண்டுமெனத் திருவருளைப் பிரார்த்திக்கின்றனம்.

(தொடர்ச்சியுண்டு.)

ல. அனந்தய்யர்.

தருக்கசூத்திர முதற்பாடம்.

———:o:———

(3-ம் தொகுதி 249-வது பக்கத் தொடர்ச்சி).

3-வது பொருளுணர்வியல்.

(70) மேற்கோளின் பயனிலைக் குறிப்புப்பொருள் கூறி, அப் பயனிலை எழுவாயோடு சம்பந்த முறுதலை யுணர்த்தும் இயலிவ்விய லாதலினாற் பொருளுணர்வியலெனக் கூறப்பெற்றமை காண்க.

ஈண்டு மேற்கோளென்றது சுத்தமேற்கோள், பிரிப்பு மேற் கோள், முக்கிய மேற்கோள், விலக்கு மேற்கோள், உண்மை மேற் கோள், விரிவு மேற்கோள்; முதலியவற்றை என்க.

(71) யாதாமொரு மேற்கோளின் பயனிலைக் குறிப்புப் பொ ருள் எழுவாய்ப்பொருளோடு ஒத்து நடை பெறுவது அல்லது அதி ன் ஒரு பகுதியாய் நிற்பது என்று இருபாலாகி வருதலினால் சுத்த மேற்கோள் அல்லது பிரிப்பு மேற்கோளாகும்.

பயனிலைக் குறிப்புப் பொருள் எழுவாயின் ஒரு பகுதியாய் இயங்காதாயின் அம்மேற்கோள் உண்மை அல்லது புணர்ப்புறு மே ற்கோள் என்று கூறப்படும்.

இவற்றுள் முன்னையது (உண்மைமேற்கோள்) புதுச் செய்தி வரவை நிகழ்த்தாமலும், பின்னையது நிகழ்த்தியு நடைபெறும்.

உதாரணமாக:—

(1) "எல்லா மனிதர்களும் அறிவுடையவர்களாக விரு க்கிறார்கள்"

ஈண்டு அறிவுடைமை மனிதத்தன்மைக் குரிய பல குணங்க ளோடு சேர்ந்ததும் முன்னமே அறிந்ததுமான ஒரு குணமேதவிரப் புதிய தன்று.

(2) "எல்லா மனிதர்களும் மரண முறத் தக்கவர்களாக விருக்கிறார்கள்.

இது மனிததத்துவத்துக்குரிய குணங்களை விடப் புதியதான மாணமுறுந்தன்மையைச் சேர்த்துக் கூறுதலை யுணர்க.

பொருளுணருந்தன்மை :—

(72) "ஐவகை யென்றே யறைகுவ ரறிந்தோர்" (த—சூ)

அவையாவன :—(1) ஜாதி. (2) குலம். (3) பேதம். (4) குணம். (5) சம்பவம். என்பனவாம்.

இவற்றுள் :—(1) ஜாதி - பல குலங்களைத் தன்னுள் ளடக்கி நிற்பது.

(2) குலம் - ஜாதியின் வகைகளுள்ளடங்கி நிற்கும் ஒரு பகுப்பு.

(3) பேதம் - ஜாதிப்பகுப்பின் குணம் விரிந்து நிகழ்வது.

(4) குணம் - ஜாதியின் மாட்டமைந்துள்ள தன்மையைப் பொதுக்குண மென்றும், இனத்துறு தன்மையைச் சிறப்புக்குண மென்றுங் கூறுவர்.

(5) சம்பவம் (தற்செயல்).

"இனத்துறு குணங்களைத் தாக்கா தாகி
யியல்பி லமைந்தது மில்லதுந் தற்செயல்" (த-சூ)

பொருள் என்பது ஒரு சிறிது தெரிந்ததுந் தெரியாததுமான ஒரு தன்மை யள்வாய குணத் தொகுதிகளையுடையது.

விரிவிடை, இஃது குலத்துட் சார்ந்ததாய் எண்ணப் பெறும்.

குறிப்பிடை, இஃது ஜாதி, குலம், பேதம், இவைகளோடு சேர்ந்ததாய் எண்ணப்படும்.

(73) (1) குலத்துறு குறிப்புக்குணம்=ஜாதிக்குணம்+பேதம்

(2) பேதம்=குலத்துறு குணம்—ஜாதிக் குணம்.

(3) ஜாதிக் குணம்=குலத்துறு குணம்—பேதம்.

உதாரணமாக :—மனிதன், ஜீவஜெந்து, என்னும் இருமொழி களை வைத்தாய்வாம்.

மனிததத்துவம்=ஜீவஜெந்துதத்துவம்+பேதம்.

ஆகையால், பேதம்=மனிததத்துவம்—ஜீவஜெந்துதத்துவம்.

ஆனல் மனிததத்துவம்=ஜீவஜெந்துதத்துவம்+பகுத்தறிகுணம்—இவை மனிதருக்குரிய இருதன்மையவாய குணங்கள்.

இப்பொழுது பேதம் - ஜீவஜந்துதத்துவம்+பகுத்தறிகுணம். ஜீவஜெந்துதத்துவம் - பகுத்தறி குணம்.

"ஈண்டு ஜீவஜெந்து" என்னுஞ் ஜாதியுட்பட்ட ஒரு குலமாகிய "மனிதன்" என்னும் பகுப்பை பகுத்தறிகுணம் மற்றவைகளினின்றும் பேதப்படுத்தி நின்றது. ஒரே ஒன்றின் குணத்தைக் கருதுங்கால்,

உதாரணமாக :—மெய்கண்ட தத்துவம்=ஆன்மதத்துவம்+பேதம்.

ஆகையால், பேதம்=மெய்கண்ட தத்துவம்—ஆன்மதத்துவம்.

ஆகவே "மெய்கண்டாரின் பேதம்" மனிதன் என்னுங் குலத்துட் போந்த ஒவ்வொருவரினின்றும் பிரித்துக் கூறுதற்கான குணத்தொகுதிகளையுடையதாய் நின்றமை காண்க.

(74) குணத்தைப் பொதுக்குணம் சிறப்புக்குணமென இரண்டாய்ப் பிரித்துக் கூறுவர். ஒரு ஜாதியைப் பற்றிய குணம் பொதுக்குணம். ஒரு குலத்தைப்பற்றிய குணம் சிறப்புக் குணம். ஒரோவொன்றைப்பற்றிய குணம் தனிக் குணம்.

உதாரணமாக :—திரிகோணம், இதின் ஜாதியைப் பற்றிக் கருதுங்கால் திரிகோண உருவத்தையும், குணத்தைப்பற்றிக் கருதுங்கால் திரிகோணத்துறும் பகுப்புகளையும், காட்டி நிற்றலை யுணர்க.

இயற்கை (தற்செயல்) பிரிப்புள்ளது மில்லதுமாய் இருவகைப் படும்.

உதாரணமாக :—ஓர் மனிதன் பிறந்த ஊர், தெய்தி, இவைகள் என்றும் பிரிப்பில்லாதவைகளாம்.

ஒரு மனிதனது, நடத்தல், அல்லது இருத்தல், முதலிய செயல்கள் பிரிப்புள்ளவைகளாம்.

(75) குலங்கள் பலவுங் குலாவுமோர் ஜாதியை
யறிதலே தருக்க பாகமா யறைவர். (த-சூ)

உதாரணம் :—புத்தகம் என்னுஞ் சாதியைப் பிரிக்குங்கால் இருமடிப்புள்ளது, நான்குமடிப்புள்ளது, எட்டு மடிப்புள்ளது என்று கூறப்படும். ஈண்டு இப்பகுப்பு புத்தகத்தின் அளவு பிரித்தறிதற்கு மூலகாரணமாய் நின்றது.

இதனையே "மூலப் பகுப்பெனமொழிகுவர் முதியோர்" (த-சூ)

(76) சரியான பகுப்பாக்கற்கு மூன்று விதிகளுள்ளன.

அவைதாம் :—

மூல வினங்க டம்மு ளகன்றிடல்
சேர்த்திடிற் குலங்கள் ஜாதியோ டொத்தல்
ஒருமுறை கொண்டு பகுத்தலோர் மூன்றே. (த-சூ)

(77) புத்தகங்கள் :—நான்கு மடிப்புள்ளன, எட்டு மடிப்புள்ளன. இந்துஸ்தானி, சமஸ்கிருதம், அகராதி, என்ற பல பகுப்பினவாய்ப் பகுக்கப்படுதல் ஒரு விதிகொண்டு பகுத்தலின்றி பல முறை கொண்டு பகுத்தலாகின்றது. இதனாற் குழப்பமுறுதலைக் காண்க. மனத்துறு பகுப்பு முதலிய வேறு பகுப்புகளு முள்ளன.

(78) இனி ஈண்டு வரையறுப்பு வாக்கியம் யாதெனக் கூறுவாம்.

"முன்னுறு பொருள்வகைக் குணங்குறி நிறுத்துப்
பன்னிடிற் றருக்க வரையறை பகர்வர். (த-சூ)

இஃது ஓர் உறுப்பின் குறிப்புப் பொருளை அல்லது அதனாற் குறிக்கப்படும் வஸ்துக்களின் குணங்களைத் தீர்மானித்துக் கூறு முறையாம். தருக்க நூலில் இவ்வரையறுப்பு வாக்கியம் முக்கியமா ய்க் கருதத்தக்கதாதலால் அதனை இங்கு விவரிக்க முயன்றும்.

(79) இவ்வரையறைவாக்கியம் இன்ன வின்ன நிபந்தனைக்குட் பட்டு நடைபெறவேண்டுமென்றும், அந்தந்த நிபந்தனைக்குட்பட்டு நடவாவிடில் இவ்வாறு பிழைக்குமென்றுங் கூறுவாம்.

> " வரையறை யினமார் முதற்குணந் தங்கல்
> அம்மொழி பொருள்கொள் மொழியினை யகற்றல்
> இனத்தினைத் தானஃ தொருங்கே குறித்தல்
> கருக வுருவக மயக்கிலா துரைத்தல்
> உடன்பா டுறுமிட மெதிர்மறை யொதுக்கலே" (த-சூ)

ஈண்டு முதற்குணங்களென்றது உறுப்பினாற் குறிக்கப்படும் ஜாதி, பேதம் இவைகளை எண்க

(80) (1) "பொருளினை யுணர்த்தா வுறுப்பினை வழங்கார்"

(2) "உண்மை யறியா மேற்கோ ளுரையார்"

பொருளுணர்வியல் முற்றிற்று.

S. பால்வண்ண முதலியார்.

புத்தகக்குறிப்பு.

சுவர்க்க நீக்கம் (முதற்காண்டம்):— ஆங்கிலபாஷையில் மில் டன் என்னும் மகாகவியால் இயற்றப்பட்டு விளங்கும் இக்காவியத்தி ன் முதற்காண்டம் சிலவருஷங்கட்கு முன் தமிழ்ச்செய்யு ளுருவத் தையும் பெற்றிருத்தல் பலருமறிந்தது. இதனைமொழிபெயர்த்தோர் ஸ்ரீமத்-வெ. ப. சுப்பிரமணியமுதலியாரவர்கள். தமிழராயினோர் ஆங் கில மகாகவிகளின் ஆழ்ந்த கருத்தின் திட்பநுட்பங்களை அறிந்து மகிழ்தற்குரிய கருவிகளுள் முதலியாரவர்களது இம்மொழி பெயர்

ப்புச் சிறந்ததொன்றென்னலாம். இவர்கள் வாக்கைநோக்கின் சிந்தாமணி, இராமாவதார முதலிய பெருங்காவியங்களில் நல்ல பழக்கமுடையார்களென்பதை நன்கு காட்டுகின்றது. இவர்களது செய்யுணடை பழுத்த செந்தமிழ்ப் புலவரதுபோல அமைந்திருத்தலும் மூலத்திலுள்ளவியழகையே தன் எதிரொலியாகக் கொண்டு விளங்குதலும், எம்மைமேலுமேலும் படிக்கத்தூண்டின. இந்நூலின் எஞ்சிய பாகங்களையும் இவர்களே மொழிபெயர்த்துதவல் விரும்பத்தக்கது.

கோம்பிவிருத்தம், நெல்லைச்சிலேடைவெண்பா:—அம்முதலியாரவர்களே, இப்பெயர் பெற்றநூல்களும் எம்பார்வைக்கு அனுப்பியுள்ளார்கள். இவற்றுள் **கோம்பி விருத்தம்** என்பது ஓந்தியைப் பற்றிய ஓரழகியகதையினைத் துணைக்கொண்டு அதனியல்பை நன்கு விளக்குகின்றது. இதுபோன்ற நூல் வெகுநாளாகத் தமிழர்க்குப் புதுமையாயினும், முற்காலத்தில் ஜைனர்கள், எலி விருத்தம், கிளி விருத்தம், நரிவிருத்தமெனப் பெயரிய நூல்கள் இயற்றியிருந்தனரென்று அறியப்படுகின்றது. இக்கோம்பி விருத்தம் 72-பாடல்களானமைந்த சிறுநூலேயாயினும் படிக்கப்படிக்க மகிழ்வூட்டுவதிற் பெருமை வாய்ந்துளது. இனி, **நெல்லைச்சிலேடைவெண்பா** என்பது வெண்பாவால் திருநெல்வேலி விஷயமாக வியற்றப்பட்ட ஒரு சிறு பிரபந்தம். ஒவ்வொரு வெண்பாவின் முற்பாதியில் தாங்குறித்த தலத்தையும், பிற்பாதியில் அத்தலத்திற்றிருக்கோயில்கொண்ட பெருமானையும் குறித்துப் பெரும்பான்மையும்சொல்லணிபெறப் புனைந்தது. இத்தகைய சிறு பிரபந்தங்கள் பாடுபவரது கவித்திறமையை நன்றாகக் காட்டவல்லன. ஆங்கில விற்பன்னராகிய முதலியாரவர்களியற்றிய இந்நூல்மிகச்செவ்விதினமைந்து விளங்குதலைக்கண்டு வியக்கின்றோம். இவைகளை யெல்லாம் விரிப்பதிலும் சுருங்கச்சொல்லுமிடத்து, முதலியாரவர்களை "சிறந்த தமிழ்க்கவி" என்றே முடிக்கலாம்.

பத்திராசிரியர்.

சிவமயம்.

குருமொழி வினவிடை

அகவலும் உரையும்.

காப்பு.

தேங்கமழுஞ் சோலைசெறி தில்லைமன்று ளெப்பொழுதும்
பாங்குடைய வன்பர் பணிந்தேத்த—வோங்கிவளர்
செங்கழுநீர்ப் பிள்ளையார் சேவடியைக் கைதொழுவோ
மெங்களிடர் கெட்டோட வே.

நூல்.

அகவல்.

வினா.

அருவாய் நின்ருய் குருவென் றதுவென்

இ-ள். (உருவத்திருமேனிகொண் டெதிரெழுந்தருளியிருந்தாலும் உருவத்திலே) அருவத்திருமேனியாயிருந்த சுவாமீ? குருஎன்ற சொற்பொருள் யாது?

விடை.

கு என்பது அந்தகாரமாகிய மலம். ரு என்பது அம்மலத்தை நீக்குகை. எனவே மலநிவிர்த்தி செய்பவன் குரு என்பதாயிற்று.

வினா.

நீக்கமில் குருவே தீக்கை யென்றதென்

இ-ள். சிவனெனவுந் தேவரீரென்வும் அபேதம் நீங்காத ஆசாரியனே! தீக்கை யென்ற சொற்குப் பொருள் யாது?

விடை.

தீ என்பது ஞானத்தை யுண்டாக்குகை. (அந்தஞானத்தால்) க்ஷா என்பது ஆன்மாக்களுக்கு ஆணவம் மாயை கன்மம் ஆகிய மும்மலங்களையும் போக்குகை. க்ஷா என்பது தைக்ஷ ஆயிற்று.

வினா.

அந்தமில் குருவே மந்திர மென்றதென்

இ-ள். முடிவில்லாத ஆசாரியனே மந்திரம் என்றசொற்குப் பொருள் யாது?

விடை.

மந் தன்னை நினைப்பவனை யெல்லாவற்றையு முள்ளபடி யறிவித்து திரம் - சனனமரணத்துன்பமற் காப்பது.

வினா.

மாசில் குருவே யாசமித் தென் பயன்

இ-ள். ஆணவாதி தோஷமில்லாத ஆசாரியனே ஆசமனஞ்செய்ததாற் பிரயோஜனம் யாது?

விடை.

உழுந்தமிழ்ந்து நீரை முதலாவதள்ளி யாசமனஞ்செய்தால் ஆன்மதத் துவமாகிய இருபத்துநான்குஞ் சுத்தியாவது.

இரண்டாவது அம்முறை யாசமனஞ்செய்தால் வித்தியாதத்துவமேழு ஞ் சுத்தியாவது

மூன்றாவதம்முறை யாசமனஞ்செய்தால்சுத்தவித்தைமுதல் மூன்றுஞ் சுத்தியாவது.

இங்ஙனந் தத்துவங்கள் சுத்தியாதற்பொருட்டு ஆசமனம்பண்ணல் வே ண்டுவது. இதுவன்றியும் இந்த ஆசமனங்களாலே இருக்குமுதலிய வேதம் மூன்றிற்கும் பிரீதியாம்.

வினா.

திட்டமாய் பின்னைத் தொடுமிடந் தொட்டதென்

இ-ள். உறுதியாகப் பின்பு தொடுமிடங்களைத் தொட்டதினாலே பிர யோசனம் யாது ?

விடை.

கண்களைத் தொடிற் சோமசூரியர்களுக்கும் நாசிகளைத் தொடில் அசு வினிதேவதைகளுக்கும் காதுகளைத் தொடில் அட்டதிக்குத் தேவதைகளுக் கும் தோள்களைத் தொடில் இந்திரனுக்கும் நாபியைத் தொடில் திருமாலுக் கும் இருதயத்தைத் தொடில் கலாமந்திரங்களுக்கும் பிரீதியாவது. இங்ங னந் தேவதைகளுக்கும் மந்திரங்களுக்கும் பிரீதியாதலாற் றொடுமிடங்களைத் தொடல்வேண்டுவது.

சத்திய மான அத்திர சந்தியென்

இ-ள். உண்மையான அத்திரமந்திரத்தாற் சந்திசெய்ததினாலே பிர யோசனம் யாது ?

விடை.

சூரியனிடத்திலே இருக்கிற சிவபிரானுக்கு அத்திரமந்திரத்தினாலே அருக்கியங்கொடுத்தால் எல்லாப் பாவமுங்கெடுவது. அம்மந்திரஞ் சகல பாவங்களையுஞ் சேதிப்பதற்காயுதமாம். ஆதலா லம்மந்திரத்துக்கு அத்திரமெனப் பெயராயிற்று.

வினா.

கூற்றை யுதைத்தோ னீற்றுச் சுத்தியென்

இ-ள். யமனையுதைத்த சிவபிரானது விபூதியைச்சுத்திசெய்வானேன்?

விடை.

கற்பம் அனுகற்பம் உபகற்பம் ஆகியமூவகை விபூதியினாலே யமைக்கப்பட்ட திருநீறே சுத்தம். அங்ஙனம் மந்திரத்துடன் வைக்கப்பட்டதல்லாத திருநீற்றைக் கலாமந்திர சங்கிதா மந்திரங்களாற் சுத்திசெய்து மேற்கூறிய மூவகை விபூதிபோலத் தரிக்கும்பொருட்டென்க.

வினா.

வெட்டென நீற்றை யிட்டாற் பயனென்

இ-ள். சடுதியிலே அத்திருநீற்றைத் திரிபுண்டரமாக அணிந்ததனாலே பிரயோசனம் யாது ?

விடை.

பதினாறு தானங்களிலுந் திருநீறு தரிக்கில் அட்டவசுக்களுக்கும் அட்டவித்தியேசுரருக்கும் பிரீதியுண்டாவது.

வினா.

மாசில் குருவேபின் பாசமித் தென்பயன்

இ-ள். ஐயந்திரிபு அறியாமைக் குற்றநீங்கிய ஆசாரியனே அதன்மேல் ஆசனஞ்செய்வதாற் பிரயோசனம் யாது ?

விடை.

தீக்ஷையிலே பஞ்சபூதங்களைச் சோதித்திருக்கவும் நாடோறுமது திடம்பிறத்தற்பொருட்டுப் பூதசுத்திபண்ணுமாறுபோல முதற்கண் ஆசமனம் பண்ணினதால் தத்துவசுத்தியாயிருக்கவும் மீளவும் அங்ஙனஞ் செய்வது அந்தச்சுத்தி திடமாதற்பொருட்டு.

வினா.

பிரணவத் தாலே பிராணா யாமமென்

இ-ள். அகார உகார மகாரமாகிய மந்திரத்தாலே வாயுவைத் தடைசெய்வது என்ன ? காரணம்

விடை.

ஒருவர் ஒருகருமத்தைச் செய்து முடிப்பதற்கு மனமொருமிக்கவேண்டும். ஆதலால் பிரணவத்தை யாதியாகவுடைய சங்கிதாமந்திரங்களாற் பிராணவாயுவை யுள்ளொடுக்குங்காலொடுக்கி வெளிவிடுங்கால் விடுவது, அம்மனந் தன்வசப்பட்டு நிற்கும்பொருட்டு. பிராணன் - பிராணவாயு. ஆயாமம் - அதனைப் போக்குவரவு செய்து ஒடுக்குதல்.

வினா.

விரணமறப் பண்ணில் விளைபய னேது

இ-ள். குற்றமற மேற்சொன்னபடி பிராணாயாமஞ் செய்ததனாலுண்டாகும் பயன் யாது?

விடை.

இம்மையிலே சகலசித்திகளும் மறுமையிலே மோக்ஷமுங் கிடைப்பது.

வினா.

வலக்கையைக் காதில் வைப்பதாற் பயனென்

இ-ள். பிராணாயாமஞ்செய்து சிவத்தியானம்பண்ணி முடிந்தபின் வலக்கையைக்கொண்டு வலக்காதைத் தொடுதலால் யாது பிரயோசனம்?

விடை.

வலக்காதிலே அக்கினி முதலிய தேவதைகளிருப்பதால் பூரககும்பக இரேசகமாகிய பிராணாயாமஞ் செய்த கரஞ்சுத்தியாவது.

வினா.

இடக்கையோ வலக்கையோ துடைப்பது முந்த

இ-ள். காதைப் பரிசித்தபின் இடக்கரத்தையா? வலக்கரத்தையா? முதலாவது துடைப்பது.

விடை.

வலக்கரத்திலே சகல தேவதைகளும் அதிட்டிக்கப்பட்டிருத்தலா லந்தக்கரத்தைக்கொண்டு அசுசியாகிய இடக்கரத்தை அத்திரமந்திரத்தாலுள்ளும் புறம்பும் இவ்விரண்டுதரந் துடைத்துச் சுத்தியாக்கிப் பின்பு இடக்கரத்தைக்கொண்டு வலக்கரத்தை அவ்வாறு சுத்திசெய்க.

வினா.

கரநியா சத்தால் வருபய னேது

இ-ள். கரங்களைத் துடைத்தபின் அவற்றை நியாசம்பண்ணுவதால் வரும் பயன் யாது? நியாசம் - தொட்டுச் செய்யுங் கிரியை.

விடை.

கரங்களின் சாகைகள் ஆகிய விரல்கள் சுத்தியாவது. பிரமசாரிய முதலி ய நான்காச்சிரமத்தாருஞ் சிருட்டி திதி சங்காரமாகிய மூவித நியாசங்களை அவரவர்க்குக் கூறிய வழியறிந்து செய்யில் அந்தந்தப் பதத்தையடைவார் கள். நியாச மூன்றில் சிருட்டிநியாசங் கிருகத்தனும் திதிநியாசம் பிரமசா ரியும் சங்காரநியாசம் வானப்பிரத்தனுஞ் சந்நியாசியுங் கொள்க.

வினா.

உறுப்பிலொன் றல்லவோ சிறப்பென் கரந்தான்,

இ-ள். அவயவங்களுக்குளொன்றல்லவா கைகள் அவைகளுக்குமட்டு ம் விசேடம் வந்ததியாது?

விடை.

சத்திசிவமான இருகையையு மொன்றுகூட்டி அங்குட்டமாகிய பெரு விரலிரண்டினையும் நடுப்பெறக் கர்ணிகைபோல மடக்கி மற்றை யெட்டுவிர ல்களையு மெட்டிதழ்களாகவும் பாவித்துத் தாமரைமலராக்குவதே.

வினா.

அத்தத்தின் மந்திர மெத்தவைப் பானேன்

இ-ள். அந்தக் கைகளிலே மந்திரங்களை மிகவும் வைத்துக் கிரியை செய்தற் கென்ன? காரணம்

விடை.

தாமரைமலர்போன்ற அந்தக்கைகளின் சாகைகளாகிய விரல்களிலே சிவபிரானைப் பூசித்தற்பொருட்டு. பூசித்தல் ஆசனமூர்த்தி முதலிய மந்தி ரங்களாலென்பது உபதேசமுறையாலுணர்க.

வினா.

தங்கும் பயனே தங்கநியா சத்தால்

இ-ள். அவயவநியாசத்தாலுண்டாகும் பயன் யாது?

விடை.

சிவத்துவமல்லாதவன் சிவனை யருச்சித்தற் கருகனல்லனாதலின் அவ யவங்களிலே ஆசனமூர்த்தி முதலிய மந்திரங்களினாலே பரிசித்துக் கிரியை செய்து அருச்சித்தற் கருகனாதற்பொருட்டு,

வினா.

அப்பினை யள்ளித் தற்பித் தென்பயன்

இ-ள். தண்ணீரையள்ளி விட்டதனாலே பிரயோசனம் யாது?

விடை.

சங்கிதாமந்திரங்கள் தேவர்கள் இருடிகள் பூதம் பிதிர்க்கள் முதலாயி னோர்க்குப் பிரீதியாவது.

வினா.

நியதி முடித்து நியாசம் பண்ணி
னிறைபய னேது வுபதே சிகனே

இ-ள். ஞானாசாரியரே நீர் கூறியபடியே நியதிசெய்து இரண்டாவது நியாசஞ் செய்தால் வரும்பயன் யாது ?

விடை.

முதலிலே கரசுத்தி செய்து இரண்டாவதுங் கரநியாசம் பண்ணுநற் கரமிகச்சுத்தியாவது. கரசாகைகளை யொருதரஞ் சுத்திசெய்தாற் போதா தோவென்றால் குண்டத்திலே யிருக்கும் அக்கினியைப் பிரகாசப்படுத்திப் படுத்தி ஓமம் பண்ணுமாறுபோலக் கரசாகைகள் மந்திரங்களாற் சுத்தியாயி ருக்கவுந்திரும்பத் திரும்பச்சுத்தி விருத்தியாதற் பொருட்டு மறுதரமுநியா சிக்கவேண்டும்.

வினா.

தொண்டர் நாளுந் தெண்டம் பண்ணில்
விண்ட வினையெது தண்டா வருளாய்

இ-ள். நீங்காத கிருபையுள்ள ஆசாரியரே பத்தர்கள் தினந்தோறும் சூரியநமஸ்காரம் பண்ணுநற் போன கன்மம் யாது?

விடை.

அந்த நமஸ்காரத்தினாலே இம்மையிலே மகத்தாகிய குட்ட முதலிய வியாதிகளெல்லாந் தீர்ந்து மறுமையிலே மோக்ஷத்தையடைவது.

வினா.

தருக்கென நாளுந் திருக்கோ யிலிலே
யெண்ணிய நியமம் பண்ணிய பயனென்

இ-ள். பத்தியின்றிச் செருக்குதலுடனேயாயினுஞ் சிவாலயத்திற் செ ன்று சிவலிங்கதரிசனஞ் செய்தாற் பிரயோசனம் யாது?

விடை.

சிவலிங்கப் பெருமானைக் காலமே தரிசித்தாற் சகல பாவங்களும் போகும். மத்தியானத்திலே தரிசித்தால் ஒரு சென்மத்திலே செய்த பாவங்களெல்லாம் போகும். சாயுங்காலத்திலே தரிசித்தால் ஏழுசன்மத்திலே யியற்றிய பாவங்களெல்லாம் நீங்கும் இவைகளே.

வினு.

ஓமென் றெழுகாற் சாமானி யார்க்கியம்
பத்திரந் தன்னை மெத்த நறுக்கித்
தாபித் தென்பய னுபத் தரனே.

இ-ள். அடியார்கள் விபத்தை நீக்கும் ஞானுசாரியரே பிரணவத்தை யுச்சரித் தேழுதரம் பத்திரத்தைக் கிள்ளிச் சாமானிய அருக்கியங் கூட்டுவதிற் பயன் யாது?

விடை.

துவாரபாலகர்கள் ஆவரணதேவதைகள் சண்டேசுரன் இவர்களுக்கு அவ்வருக்கியத்தைக் கொடுத்து அவர்களருள்பெறுவது.

வினு.

நிச்சய மாகப் பச்சிமந் தன்னி
லாசி றுவாரம் பூசித் தென்பயன்

இ-ள். துவாரம் நான்குதிக்கிலு முண்டாயிருக்கவு மேற்குத் துவாரத்திலே மாத்திரம் பூசித்ததனுற் பிரயோசனம் யாது?

விடை.

வடக்குத்திக்குச் சத்தியிருக்குந் தலமாதலாற் றுவாரபூசையாகாதென்று சிந்தியாகமங்கூறுதலானும் புருவதிக்கிலே துவாரபூசை செய்யிற் போகத்தைக் கொடுக்குமென்றும் தக்ஷிண திக்கிலே கோமுகையை வடக்கே வைத்துத் துவாரபூசை செய்தல் குற்றமென்று மகுடாகமங் கூறுதலாலிம் மூன்றையுமொழித்து மேற்குத் துவாரத்திலே பூசைசெய்வதே போக மோக்ஷங்களைக் கொடுக்குமென்பது. இது சிவாகமநூற் றுணிவு.

வினு.

அழுந்தச் சிவனை யெழுந்தரு ளப்பணிப்
பஞ்ச சுத்தியை விஞ்சவே நாளுந்
திண்ண மாகப் பண்ணும் படியென்

இ-ள். பெட்டகக் கோயிலுளிருக்குஞ் சிவலிங்கப்பெருமானை யிறுகப் பிடித் தெழுந்தருளச் செய்து ஆன்மசுத்தி தானசுத்தி திரவியசுத்தி மந்திர சுத்தி யிலிங்கசுத்தி ஆக ஐந்து சுத்தியினையுமுறுதியாகச் செய்யுந் தன்மை யாற் பயன் யாது?

விடை.

ஆன்மாக்களுக்குப்போகமோக்ஷம் அருளுதற்பொருட்டேயாம். தீக்ஷை பண்ணும்போது ஆன்மசோதனை பண்ணியிருக்கவும், மீண்டும் நாடோறும் பூதசுத்தி கூறியது அந்தப்பூதம் வாயிகபூதமென்றும் அப்பியந்தரபூதமென் றும் இருவகைப்பட்டிருக்கும். ஆறத்துவாவையடைந்திருக்கிற பூதமுஞ் சரீரகெதமாயிருக்கிற தூலபூதமுந் தீக்ஷையினாலே சோதிக்கப்பட்டுச் சுத்த மாயிருந்தாலும் ஆன்மா சஞ்சிதகன்மவாதனை சரீரகெதமாயிருந்து புசிக் கையினாலதுசுத்தியாயிற்றோ இல்லையோவென்று சந்தேகம் நிகழ்தலாலே யோகதாரணையினாலே நாடோறும் பூதசோதனையைப் பண்ணி மந்திரமய மாக்கிச் சுத்தனாய்ச் சிவலிங்கப் பெருமானை யருச்சிக்கவேண்டும். பூதம் - ஆன்மா.

தானசுத்தியாவது பூமி அந்தரிக்ஷம் ஆகாயம் ஆகிய மூவகை விக்கினங் களையும் அத்திரமந்திரத்தாலே போக்குவது. அவற்றைப்போக்காதவிட த்துப் பயனில்லை.

திரவியசுத்தியாவது திரவியங்களெல்லா மாயையினிடத்தினின்றும் உண்டாவனவாதலால் சுத்தனாயிருக்கிற சிவபிரானுக்கு மாயேயமாகியதிரவி யங்கள் அங்கீகாரமாகமாட்டா அதுவன்றிப் பலத்தையுங் கொடா ஆதலால் சிவசத்தியை நிரீக்கணாதி மந்திரங்களா லவற்றிலதிட்டிப்பது. அங்ஙனஞ் செய்யிற் சுத்தியாகிச் சித்தாகிய சிவனுக்கேற்கும். அஃதெவ்வாறென்னில் விறகானது அக்கினியைச் சேர்ந்தபோதே தற்சொரூபங்கெட்டு அக்கினி சொரூபமானாற்போலுமென்க.

மந்திரங்களெல்லாம் எந்நாளுஞ் சுத்தியாயிருக்கவும், அவற்றைச் சுத்திசெய்வானேனெனில் மந்திரங்கள் அதிகாரபலத்துடனே கூடி திரோ தான சத்தியால் மறைப்புண்டிருக்கையால் பஞ்சகலை முதலிய பிராசாதமந் திரத்தைச் சமயிமுதலிய நால்வரும் அவரவர்க்கேற்ற பிராசாதகலைகளை யறி ந்து அந்தப்படி யுச்சரிக்கில் அம்மந்திரங்கள் பராசத்தியுடனே லயித்து அக் குற்றம் நீங்குதற்பொருட்டென்க.

இலிங்கசுத்தியாவது சிவபிரானை ஸ்நானவேதிகையி லெழுந்தருளப்பண் ணிப் பரிசபூசைசெய்து அபிஷேகம்பண்ணுவது. அந்தச் சுத்திசெய்யா

விடில் முதனுட் பூசித்த மந்திரங்களெல்லாம் விந்துதத்துவத்தி லொடுக்கப் பட்டிருக்கையால் அம்மந்திரங்கள் பிரகாசமின்றிக் குரூரமாயிருக்கிற பூதமு தலிய விக்கினங்களாலே தடைபட்டுப் போகமோக்ஷங்களைக் கொடுக்கமாட் டா. ஆதலா லம்மந்திரங்கள் தடையின்றிப் பிரகாசிக்கும்பொருட்டு, இலி ங்கத்தை அத்திரமந்திரத்தினுலும் பீடத்தைப் பாசுபதாத்திரத்தினுலும் அபிஷேகம்பண்ணினுல் சகல விக்கினங்களுந் தீர்ந்து அம்மந்திரங்கள் பல னைக்கொடுக்கும். இவ்வைந்து சுத்திகளையு முபதேசமுறையானே தெளி வாக வுணர்ந்து கொள்க.

வினு.

எண்ணெய் பானெய் யிறைவனுக் காட்டி
னண்ணும் பயனென் புண்ணிய குருவே.

இ-ள். புண்ணியசொரூபராகியஆசாரியரே சிவபிரானுக்கு எண்ணெய் பால்நெய்முதலியவைகளை யபிடேகஞ்செய்தால் வரும் பிரயோசனம் யாது?

விடை.

கைச்செக்காலாட்டி வாசிக்கச்செய்த தைலமாகிய எண்ணெயை யபி டேகித்தால் வாயுலோகத்தையடைந்து அங்குள்ளபோகத்தை யநுபவித் திருப்பதும் பால் நெய் இவைகளையபிடேகம்பண்ணினுல் வெள்ளிவிமானத் தேறிச்சென்று சந்திரலோகத்தையடைந்திருப்பதுமே.

வினு.

பஞ்ச கௌவியம் பஞ்சா மிர்தத்தால்
விஞ்ச வாட்டில் விளைபய னேது.

இ-ள். நித்திய நைமித்தியகாலங்களிலே சிவபிரானுக்குப் பஞ்சகௌ வியம் பஞ்சாமிர்தங்களை விதிவழித்தாபித்து அபிடேகம்பண்ணி லடையும் பலன் யாது?

விடை.

பசுவினிடத்திலே சகல தேவதைகளுமிருக்கையால் அதனிடத்துண் டாகிய பஞ்சகௌவியத்தை யபிடேகஞ் செய்தார் சகல பாவங்களையு நீங்கி மோக்ஷத்தையடைவார்கள். பஞ்சாமிர்தங்களை யபிடேகம் பண்ணில் இட்டசித்திகளைப் பெறுவார்களாதலின் அவ்விரண்டுமே யென்க.

வினு.

விண்ணோர் பிரானைத் தெண்ணீ ரதனு
* லாடிய பண்ணி னீடிய பயனென்.

---

* ஆடிய - செய்யிய என்னும் வினையெச்சம்.

இ-ள். தேவதேவனாகிய சிவபிரானை வடித்துமணங்கட்டிய சுத்த சலத்தா லபிடேகஞ் செய்வித்தால் வரும் நீண்ட பிரயோஜனம் யாது? எனில்

விடை.

அபிடேகஞ்செய்தவர் செய்வித்தவர் தமதாணவமலத்தைப் போக்கி மேலான சிவலோகத்தை யடைந்திருப்பதுவே.

வினா.

திண்ண மாகத் திருவொற் றுடை
சாத்தி யாதனத் தேற்றி வைத்தே
யாதார சத்திமுத லோதிய சத்தி
மண்டல மீறுத் தொண்ட ரருச்சித்
தென்பயன் குருவே யன்பால ருளாய்.

இ-ள். உறுதியாகத் திருவொற்றுடைபுனைந்து சிவபிரானை அலங்கார ஆதனத்தின்மேலே பூருவாபிமுகமாக வெழுந்தருளப்பண்ணி ஆதாரசத்தி முதற் சத்திமண்டலமீறாக லயாங்கபூசையையும் பிரமாங்க முதலிய போகாங்க பூசையையும் பத்தர்கள் செய்தாற் பலன்யாது? ஆசாரியரே அருள்வீராக.

விடை.

ஆன்மாக்கள் போகாங்கத்தால் சுத்த சாட்குண்ணியத்தை யடைவதும் லயாங்கத்தால் சிவபிரானோ டைக்கமாவதுமே.

வினா.

ஓதிய சோட சோபசா ரத்தை
யாதிக் களித்தா லாவதென் குருவே.

இ-ள். ஆசாரியரே உபசாரங்கள் ஆயிரமுதலிய பலவென்றாகமங்கள் கூறியிருக்கவும் ஆசனம் ஆவாகனம் பாத்தியம் ஆசமனம் அர்க்கியம் ஸ்நானம் பரிவட்டம் கந்தம் புட்பம் நைவேத்தியம் தாம்பூலம் தூபம் தீபம் திருவாலாத்தித்தட்டு திருநீறு சுத்தோதகம் என்னும் பதினாறினையுஞ் சிவபிரானுக்குக் கொடுத்தலாலுண்டாகும் பலன் யாது?

விடை.

இங்ஙனங்கூறிய பதினாறுஞ் சௌக்கியகன்மமெனப் பெயராதலால் இம்மைக்கண் போகத்தையும் மறுமைக்கண் மோக்ஷத்தையுங் கொடுக்கும். இவ்விரண்டுமடைவதுவே.

வினா.

பவித்திரஞ் சாத்திற் பயனென் குருவே.

இ-ள். சுத்தனயிருக்கிற சிவபிரானுக்குப்பவித்திரஞ்சாத்துவதினலே யென்ன? பயன் ஆசாரியரே.

விடை.

புத்திகாமன் முத்திகாமன் ஆகியவிருவருந் தமக்கேற்ற மந்திரங்களை முறையாக வுச்சரித்து மனவாக்குக்காயங்களிலே யுண்டாகிய தாபத்திரயங் களைப்போக்கி யவை புனிதமடையச்செய்வதுவே.

வினு.

அக்கினி காரியஞ் சிக்கெனவிருந்து
பண்ணிற் பயனென் விண்ணோர் பிரானே.

இ-ள். தேவர்களுக்குந் தேவனே நித்தியாக்கினியைத் திடமாகவிருந் து பண்ணினலுண்டாகும் பலன் யாது?

விடை.

ஆன்மா செய்த நானுதிகவைகுல்லியங்களெல்லாந்தகித்துப் பூசாபலத் தை யடைவிக்கும்பொருட்டென்க.

வினு.

அட்ட புட்பம் வெட்டெனச் சாத்திற்
கிட்டும் பயனென் மட்டவிழ் சடையாய்.

இ-ள். மணம்பொருந்திய சடாபாரத்தையுடைய ஞானசாரியரே சிவ பிரானுக்கு எட்டுப்புட்பங்களைச்சாத்தினு லுண்டாகும் பலன் யாது.

விடை.

ஞானபூசைக்குக் கருவியாகிய கொல்லாமை முதலிய எண்வகைக்குண ங்களும் பெறுவதென்க.

வினு.

ஏத்தி யிசைவா மூர்த்தி பண்ணி
யழுந்தப் பெட்டகத் தெழுந்தருள் வித்து
சண்ட பூசை தொண்டாற் பண்ணில்
வந்த பயனென் னெந்தா யருளாய்.

இ-ள். தோத்திரஞ்செய்து மூர்த்தி பூசனையை யுபதேசமுறையா லுணர்ந்து செய்து பராமுகார்க்கியங் கொடுத்து பெட்டகக் கோயிலிலே யெழுந்தருளுவித்துச் சண்டேசுரபூசையை வழிபாட்டினலியற்றி லுண்டா கும் பயன்யாது? என்னுடைய சுவாமியே.

விடை.

சரலிங்கபூசையாகில் அசுத்ததத்துவத்திலே அபிமுகமாகமாகவிருந்து பூசைகொண்டசிவனை முன்புபோலச் சுத்ததத்துவத்திலே ஊர்த்தசிந்தாகுலராயிருக்கவென்று பராமுகார்க்கியங்கொடுத்தும் மண்முதலியவற்றாற் செய்த க்ஷணிகலிங்கபூசையாகில் முன்புபோலப்பராமுகார்க்கியங்கொடுத்து அந்தலிங்கத்தை விசர்ச்சனஞ்செய்து இருதயத்திலேயொடுக்கியும் சண்டேசுவரபூசை பண்ணுதவிடத்துச் சிவபூசைப்பலன் கிடையாதாதலால் அவரைப் பூசித்து அப்பலன் பெறுவதென்க.

வினா.

மாசற நாளு மாயே சுரரை
யாசறப் பூசித் தடைபய னேது,

இ-ள். இங்ஙனம் சிவபூசைசெய்து முடித்தபின்பு குற்றமற நாடோறும் மயேசுரரை விதிப்படி பூசித்தடையும் பலன் யாது?

விடை.

பூசிப்போர் தமது தொழிற்குற்றமாகிய அலகிடல் மெழுகல் அங்கிமூட்டல் நீரெடுத்தல் அரிசிகுற்றல் என்னும் ஐந்தினாலுமுண்டாகிய குற்றநீங்குகையே.

முற்றிற்று.

பச்சை மாமயி லிச்சையாற் றவம்புரி
கச்சிப் பதியா னிச்சையா லுயர்ந்தோன்
மழவைக் கதிபன் றழுவக் குழைந்தான்
புண்ணிய முதல்வ னெண்ணிய சற்குரு
நாதன் பொன்னடி நீதியால் வணங்கி
யாசற வனுட்டான மாதி யாகப்
பாசம தகல வீசிய வகவன்
மாசற வினாவால் வகுத்துக் கொண்டே
தேசுள திகழ்மன வாசகங் கடந்தான்
பூசனை முடிவாப் புகன்றனன் மகிழ்ந்தே.

இவ்வகவற் பாட்டாற் காஞ்சீபுரத்திலுள்ள மனவாசகங் கடந்தார் இந்நூல் செய்தனரென்பது விளங்குகின்றது.

இது கொல்லமாண்டு அ௲௯ம௲-ம் வருஷ சித்திரைமீ ௰௬௨ திருநெல்வேலிஜில்லா வண்டானத்திலிருந்த நல்லகுற்றாலிங்கவிராச ரெழுதி முடித்த எட்டுப்பிரதியிலிருந்தும் பிற பிரதிகளிலுங் காணப்பட்டமையால் இந்நூல் 200-வருஷங்கட்கு முற்பட்டதென்று தெரிகின்றது.

மு. ரா. அருணாசலக் கவிராயர்,
சேற்றூர்ச் சமஸ்தான வித்துவான்.

மலையும் பள்ளத்தாக்கும் மற்றும்.

பூமியானது எல்லாவிடங்களிலும் ஒரே மட்டத்தைக் கொண்டில்லையென்பதை முன்னமேயே கண்டுவந்தோம். சாதாரணமாய் வெற்றிடங்களில் பூமிமட்டம் ஒன்றாகவேயிருக்கத் தோன்றிய போதிலும் சற்று வித்தியாசமுண்டென்பதையுந் தெரிந்து அதற்கேற்ற கருவிகளால் பூமிமட்டத்தைத் தெரியவல்லோம். ஆனால் சிற்சில விடங்களில் பூமியானது பக்கவிடங்களைக்காட்டிலு மதிகமாய் உயர்ந்திருப்பதுமன்றி அவ்வுயர்வு வெகு தூரம் நீண்டும் பரவியுமுள்ளதாகக் கண்டு அதைத் தக்கபடி மலையாகவுங் குன்றாகவும் பீடபூமியாகவும் (Plateau) மேட்டு வெளியாகவும் கண்டு பெயரிட்டுக் கூறுகிறோம். நமது இவ்விந்து தேசத்திற்கு வடக்கேயுள்ள இமயகிரியை ஓர் பெரிய மலையாகக் கூறுவர். இமய மென்றால் பனி, கிரியென்றால் மலை; ஆகையால் இமயகிரியாவது பனிமலை: அல்லது பனியால் மூடப்பட்டுள்ள மலை. நீலகிரியாவது நீலவர்ணத்துடன் காணப்படும் ஓர் மலைப்பூமி. உயரமதிகரித்தால் மலை யென்றும் உயரங்குறையக் குறையக் குன்றென்றும் பீடபூமி யென்றுங் கூறுவர். உத்தேசம் 2000-அடி உயரத்திற்கதிகமானால் அம்மேட்டை மலையாகக் கொள்ளத்தகும். அவ்வெண்ணிற்குக் குறைந்துள்ள உயர்வான பூமிகளை அவைகளுக் கேற்றபடி கூறவல்லோம். கிராமங்களுக் கருகே பார்க்கக்கூடியதும் மரஞ்செடிகளடர்ந்ததும் பாறைகளையுங் கற்களையுங் கொண்டதுமான உயர் விடங்கள் 2000-அடிக்குக் குறைந்திருப்பின் அவைகளைக் குன்றுகளாகச் சொல்லவேண்டும். குன்றினுந் தாழ்வான செழிப்புற்றதுமற்றதுமான விடம் பீடபூமியாகவும் மேடாகவுமிருக்கலாம். இமயகிரிச்சாரலைத்தொடர்ந்து சற்றுமேற்கில் இவ்வகைப் பீடபூமி விசாலமாகப் பரவியுள்ளது. அதை பாமர்ஸ் (Pamirs or Plateau) அல்லது பாமர் பீடபூமி யென்றழைப்பர். பீடபூமிக்குந் தாழ்வாய் சுற்றுப்பக்கத்தினு முயர்வாயுள்ள இடங்களை மேட்டிடங்களாகக் கொண்டு அவ்வத்தேய ஒழுக்கப்படி அர்ச்சுனன் மேடென்றும் பல வெவ்வேறு பெயரைக்கொண்ட மேடுகளாகவும் கூறிவருவர். மேலும் சிற்சில விடங்களில் மணலானது கூட்டமாய்க் கூடி ஏறக்குறையப் பெருமேடுகளாகக் காண்பன. அவைகளை மணற் குன்றாகவும் மணல் மேடாகவுங் கூறுவதுண்டு. பூமியின்கண் ஒவ்வோரிடங்களில் மலையடர்ந்தும் மலைப்பக்கத்திலிருந்து உச்சியினின்று புகையுடன் வெப்பம் வெளிப்படக் கண்டிருக்கின்றனர். இதைத் தீமலை அல்லது அக்கினிமலை யென்று (Volcano) கூறுவர். ஆதலால் இதுவரையிலும் சொல்லி வந்த மலை, குன்று, பீடபூமி, மணற் குன்று, மணல் மேடு, அக்கினிமலை முதலிய உயர்விடங்களைப் பரிசோதித்து ஒருவாறு அவைகளின் விசேஷங்களைக் கண்டறிய முயலுவோம்.

(a) மலை.—இப்பூமியின் மேல் வெவ்வேறு தேசங்களில் மிகப்பெரிய மலைகளிருப்பதைப் பார்த்து எழுதியிருக்கிறார்கள். இப்பெருமலைகள் 2000-அடி உயரமானவை. நீர்மட்டமெப்போதும் ஒரே அளவானதாலும் சாதாரணமாய் நீரானது பள்ளத்தைத் தேடிச் செல்ல வல்ல பொருளாதலாலும் மனிதர் சுலபமாய் அணுகக்கூடிய கடல் நீரை ஆதாரமட்டவளவாகக்கொண்டு அதினின்று அவ்வவ்விடங்களினுயரத்தைச் சொல்லி வருவது வழக்கம். கடலினும் பள்ளமான இடத்தில் மனிதர் சஞ்சாரம் செய்வது கஷ்டம். டென்மார்க்கு (Denmark) என்னும் தேசத்தில் பூமிமட்டமானது கடல் மட்டத்தினுங் குறைவாதலால் கடல் நீர் உட்புகாமலிருக்க ஓர் வித அணைகள் போட்டு அவைகளை டைக்ஸ் (Dykes) என்று கூறிவருவர். ஆதலால் கடல்நீர்மட்டத்தைக்கொண்டு பூமியின் ஏற்றத்தாழ்வைச் சொல்லி வருவது சுலபமான வழியாகப் புலப்படுகிறது. ஓர் மலையின் உயரம் 3 மைல் என்றால் அதன் அடிவாரத்திலிருந்து அதன் தலை முனைவரையில் 3 மைலென்பதல்ல; பக்கத்திற்காட்டிய சித்திரப்படி கடல் நீர் மட்டத்தினின்று மலையின் தலையுச்சி வரை அளக்கவல்ல உயரம் 3 மைல் என்பதேயாம். இவ்வுலகில் சிற்சிலவிடங்களில் 30000 அடி அதாவது சுமார் 5 மைலுக்கு மேற்பட்ட உயரத்தையுடையமிகப்பெரு மலைகளுண்டு. அவையெல்லாம் கடல் நீர் மட்டத்தைக் கொண்டு உயர்வு தோன்றக் காட்டுபவை. அவ்விதமே அவ்வத்தேயங்களின் பூமிமட்டத்தைக் கடல் நீர் மட்டத்தைக்கொண்டு சொல்லி வருவார்கள். நமது இந்து தேசத்தில் விந்திய பர்வதத்திற்கு வடக்கேயுள்ள பூமியை இந்துஸ்தானமென்றும் தெற்கேயுள்ள பூமியை தக்ஷிண இந்தியா அதாவது டெக்கான் என்றும் கூறுவர். தக்ஷிணஇந்தியாவின் உயர்வு 2000 அடி முதல் 3000 அடி வரையிலுள்ளது என்றால் சமுத்திரமட்டத்திற்கு தக்ஷிண இந்தியாவினுயரம் 2000 அடிமுதல் 3000 அடி வரையிலுமென்பதாம்.



ஓர் மலையாவது பெருங்குன்று. ஆதலால் ஒரு குன்றைச் சிறு மலையாகக் கூறுதல் தகும். மலைகள் சாதாரணமாய் வரிசையாக நீண்ட போக்குடையன. இந்தியாவிற்கு மேற்கிலும் கிழக்கிலும் மலைகள் தெற்கு வடக்காய் ஓடுவன. அவைகள் முறையே மேற்குமலைத் தொடர்ச்சி (Western Ghauts) என்றும் கிழக்கு மலைத்தொடர்ச்சி (Eastern Ghauts) யென்றுங் கூறு

வர். இவைகளை நேராக ஓடும் மலைகளென்றும் (LongitudinalMountain) சொல்லத்தகும். மற்றுஞ் சில மலைகள் தொடர்ச்சியாக வோடும் மலைகளுக்குக் குறுக்காக ஓடுந் தன்மையன. அவற்றைக் குறுக்காயோடும் மலைகளாகச் சொல்லவல்லோம் (Transverse Mountains). மற்றுஞ் சில விடங்களில் மலைகள் கூட்டமாய்க் கூடியுள்ளன. அவற்றை மலைக்கூட்ட மென்று (A group of mountains) கூறுவதுண்டு. இவ்விதம் மலைகள் பூமியின் மேலிருக்க மலைகளின் விதங்களை இன்னும் பரிசோதித்து அவற்றின் நிலைமையை அடியில் வருமாறு கண்டு வருவோம்.

மலையின் தலை முனையை மலையுச்சி யென்றும் அதன் கீழ்ப்பாகத்தை மலையடிவாரமென்றும் பக்கங்களை மலைச்சார்வுகளென்றுங் கூறுவர். அவ்விதமே குன்றுகளுக்கும் உச்சி அடிவாரம் சார்வுகளுள்ளன. அநேக குன்றுகளின் சார்வுகள் கரடுமுருடின்றி ஒழுங்காகப் பார்வைக்கு ஒரே சம மட்டத்தைக்கொண்டுள்ளன போல்பவை. மேல் முனைகள் அதாவது உச்சிகள் உருளை வடிவங் கொண்டிருப்பன போலக் காண்கின்றன. இவ்விதமே உயர்ந்திருக்கும் மலைகளின் மேல் சற்று தூரம் வரையில் யாதுமில்லாமலிருக்கப் புகைபோன்று மேகமானதுபடியவும் பார்க்கின்றோம். இது போன்றமலைகளை மேகமூடியமலைகளென்று (Cloud Capped Mountains) கூறுவதுண்டு. கிழக்குமலைத்தொடர்ச்சியின் ஓர் பாகமாகிய திருப்பதி மலையின்மேல் மேகமானது படிதலைக் கீழிருந்து காணலாம். மேலும் ஒவ்வோர் மலையின் தலைமுனை கரடுமுருடாகவும் சில விடங்களில் செங்குத்தாகவுமிருக்கக் காண்கின்றோம். வடஆர்க்காடு ஜில்லாவிலுள்ள நகரி மலையின்உச்சி செங்குத்தாக விருக்கப் புகைவண்டி ஓடுங்கால் வெகு தூரத்திலிருந்து பார்க்கக்கூடியதாயுள்ளது. மற்றும் மதுரை ஜில்லாவில் யானைமலையென்று சொல்லிவரும் மலையானது பெரிதாகவும் உச்சிசெங்குத்தாகவும் தோன்றப் பார்க்கின்றோம். மலையைச் சுற்றியுள்ள பூமியானது சாதாரணமாய்க் குன்றுகளடர்ந்துள்ளன. அக்குன்றுகளின் பக்கங்களில் ஊர்களிருக்கவும் பார்த்து வருகிறோம். ஆதலால் மலை யென்பது சாதாரணமாய்க் குன்றுகள் பரவியிருக்கப்பெற்ற பூமியினின்று புறப்பட்டது என்று எண்ணலாகிறது. சிற்சில விடங்களில் மலைச்சார்வுகளில் மிகப் பெரிய பாறைகள் ஒன்றன்மேலொன்றுயடுக்கி யுள்ளனபோல் தோன்றிப் பக்கங்களில் வெகு ஆழமான பள்ளங்களையும் வெடிப்புக்களையுங் கொண்டுள்ளன. இவைகளைத் தாண்டி மலையின்மேலேறுதல் வெகு கஷ்டமாகப் புலப்படும்.

மலையானது வெகு உயரமானதாயிருந்தால் மலையின்மேல் இமம் அதாவது உறைபனி (Snow) தங்கும். நீரைப்பற்றிப் படிக்குங்கால் உறைபனிக்கும் (Snow) பனிக்கட்டி யென்று சொல்லிவரும் நீர்க்கட்டிக்குமுள்ள

(Ice) வித்தியாசத்தைக் கண்டுவருவோம். உயரச் செல்லச் செல்லக் காற்றானது குளிர்ச்சியடைவதனால் மலையின்மேல் வெகு உயரத்தில் குளிர்ச்சியினால் உறைபனி யுண்டாக உறைபனி மலையின் பக்கங்களில் தங்குகிறது. புகைக் கூண்டு அல்லது ஆகாய விமானமென்று சொல்லத்தக்க (Balloon) காற்றுப்படகில் போகும்போது வெகுஉயரத்தில் குளிர்ச்சியினால் வாயினின்றும் மூக்கினின்றும் விடப்பட்ட சுவாசம் புகைபோன்று கெட்டியாய் வெளிவருகிறதென்றும் நீர் கட்டியாய் இறுகிப்போவதென்றும் குளிர்ச்சியைத் தாங்க வல்ல முரட்டுச் சட்டைகளை ஏறிப்போகிறவர்கள் உடன் கொண்டு போவதாகவுந் தெரிகிறது. ஆதலால் மலையின் மேல் உறைபனி ஆரம்பிக்கத்தக்க விடங்களைச் சேர்த்து நேராக வரையப்பட்ட கோட்டிற்கு உறைபனிக்கோடு என்று கூறுவதுண்டு (Snow line). உயரத்தில் வெகு குளிர்ந்த இடங்களிற்றான் உறைபனியும் ஆலங்கட்டியும் (Hail) உண்டாகும் இயல்புடையன. மிக்க குளிரால் சில வேளைகளில் மேகத்தின் நீராவியானது கனத்தன்மையை யடைந்து உறைபனியாகவும் ஆலங்கட்டியாகவும் விழும். வருடம் முழுவதும் பெரிய மலைகளின் மிக்க உயரத்தில் உறைபனி உருகாமலிருப்பது முண்டு. அவ்விடங்கள் தூரப்பார்வைக்கு வெகு நேர்த்தியாயிருப்பன. மலை திரளாகக்கிடந்தால் அதுமலைக் கூட்டமென்று முன்னமேயே படித்தோம். அவைகளில் சில மலைகள் மற்றவைகளைப் பார்க்கிலும் உயர்ந்திருக்கலாம். அம்மலையுயர்வுகளைச் சிகரங்களென்று (Peaks) கூறுவர்.

(*b*) பள்ளத்தாக்கு (Valley)—இரண்டு மலைகள் பக்கம் பக்கமா யிருந்து ஒரே வரிசையாக ஓடினால் அவற்றின் நடுவிலுள்ள நீண்ட பள்ளத்திற்குப் பள்ளத்தாக்கென்று பெயர். ஆதலால் மலைகள் நேராக வோடினாலும் குறுக்காக வோடினாலும் அம்மலைகளுக்கு நடுவில் நேராகவும் குறுக்காகவும் பள்ளத்தாக்குகளிருத்தல் சுலபமாயறியலாம். ஆதலால் பள்ளத்தாக்குகளில் நேராக ஓடுவனவும் (Longitudinal Valley) குறுக்காக வோடுவனவுமாய் (Transverse Valley) இரண்டுவிதப்பள்ளத்தாக்குகளுள. குறுக்காக வோடும்பள்ளத்தாக்குகளில் மலைச்சாரல்களினின்று கீழேவிழும் நீர்ப்பெருக்குகள் மிக்க பள்ளத்தையுண்டுபண்ணி அக்குறுக்குப் பள்ளத்தாக்கிலுள்ள நீரானது நேர்பள்ளத்தாக்கிலோடும் அருவிகளுடன் சேர்ந்து அவ்வருவிகளுக்கு நீர்ப்பிடிப்பிடமாக ஆகின்றன. நீண்ட பள்ளத்தாக்குகள் சாதாரணமாய்க் குறுக்குப் பள்ளத்தாக்குகளைவிட நீண்டும் அவற்றின் பூமி மட்டம் மிகத் தாழ்ந்திருந்தாலும் குறுக்குப் பள்ளத்தாக்குகளிலோடும் அருவிகளைவிட மெதுவாயோடத்தக்க அருவிகள் உடைத்தாயுமிருப்பன.

சிற்சில விடங்களில் பள்ளத்தாக்குகளின் நீர்போக்கில் பாதைகள் ஓடப்பார்க்கலாம். மற்றும் குறுக்காகவோடும் பள்ளத்தாக்குகளிலும் வெகு

நெருக்கமான பாதைகள் மலையடிகளுக்கு நடுவில் போவதுண்டு. இப்பாதைகளை இங்கிலீஷில் "Pass" என்றும் தமிழில் கணவா யென்றுஞ் சொல்லுவர். இந்து தேசத்திற்கு மேற்குத்திக்கில் ஆப்கானிஸ்தான்பெலுசிஸ்தான் என்கிற தேசங்களுக்கருகில் இமயமலைத்தொடர்ச்சியாகக் கருதவல்ல மலைகளுக்கு நடுவில் கணவாய்கள் மேற்கூறியபடி கைபர்பாஸென்றும் பொலன் பாஸென்றும் பெயர் பெற்றுள்ளன. மலையின் ஓர் பக்கத்திலிருந்து மற்றோர் பக்கத்திற்குப் போவதற்குக் கணவாய்கள் மிக்க உபயோகமாயுள்ளன. மேலும், ஆப்கானிஸ்தான் பெலுச்சிஸ்தான் கணவாய்கள் எதிரிகள் இந்து தேசத்திற்குள் சுலபமாக வராமல் தடுக்கவுமுபயோகமாகின்றன. ஏனெனில் அக்கணவாய்கள் வெகு நெருங்கியுள்ளன. அவைகளின் வழியாய் எதிரிகள் கூட்டங் கூட்டமாய்ச் செல்ல முடியாது.

(c) **அக்கினிமலை** (Volcanoes)—பூமியின் உட்புறம் வெகு உஷ்ணம் பொருந்தியிருப்பதால் சில வேளைகளில் குகை முதலியவைகளின் வழியால் கடல்நீர் முதலியவை குளிர்ச்சிகொண்டு தாக்கப் பூமியின் உட்புறம் திடீரென்று சுருங்கலாகிறது. அவ்விதம் சுருங்குங்கால் பூமியின் மேற்புறத்தில் ஓரிடம் மேடாகவும் ஓரிடம் பள்ளமாகவு மாவதுண்டு. இதுகாரணமாகவே மலைகளுமுண்டாகின்றன. ஆனால் சிலவிடங்களில் பூமியின் வெப்பமதிகரித்து வெளிப்படுவதுண்டு. இவ்விதம் பூமிவெப்பம் வெளிப்படு மிடமெல்லாம் மேடாகவும் மலையாகவுமிருக்கவேண்டுவதில்லை. ஆதலால் பூமி வெப்பம் வெளிப்படு மிடங்களையெல்லாம் மலையென்று கருதி **அக்கினிமலை** யென்றழைப்பதுபிழையாகும். ஆனால் மலைப்பாங்குகளில் இவ்விதம் வெப்பம் வெளிப்படுவது விசேஷமாகையால் சாதாரணமாய் அவ்விடங்களை **அக்கினிமலை** யென்று சொல்லி வருவது வழக்கம்.

பூமியினின்று வெப்பம் வெளிப்பட்டுப் பரவுமுன்னாவது பூமி வெடிப்



புக்கொள்ளும் முன்னாவது ஓர் பேரிரைச்சலுடன் **பூகம்பம்** (Earth quake) அதாவதுபூமிநடுக்கமுண்டாகும். பூகம்பத்தைப்பற்றித் தனியாகச்சொல்லிவருவோம். பூமியின் வெப்பமானது அடியில் வருமாறு வெளியே கிளம்பிச் சுற்றும்பரவுகிறது. பக்கத்திற் காட்டிய சித்திரத்தில் மலையின்மேல் பூமிக்குள்ளிருந்து ஓர் குழாய்மூலமாகப் புகைபோன்று வெளிக்கி

ளம்பக் குறித்திருக்கிறது. குகைகளின் மூலமாகவாவது மற்றெந்த வழியாக வாவது குளிர்ந்த நீரானது வெகு வெப்பமாயுள்ள உட்புறத்தைத் தாக்கும் போது நீரானது வெகு சீக்கிரத்தில் ஆவியாக, கரைந்துள்ள கல்லும் மண் ணும் கரியும் கந்தகம் போன்ற மற்றப் பொருள்களும் ஒன்று சேர்ந்து வெகு வேகத்துடன் சித்திரத்திற் காட்டியபடி பூமிக்குழாய்மூலமாக அதி க உயரம் மேலே கிளம்பி மிக்க வெப்பத்தை வெளி விடுவதுமன்றி, நீராவி யானது வெகு உயரத்தில் குளிர்ந்த காற்றில் தாக்கிக் கனமடைந்து மேக மாய்ப்பரவி சற்றுநேரத்திற்குள் திரண்ட மழையாகப் பெய்கிறது. இவ் விதம் பூமி வெடித்தாவது மலைமேல்வாயினின்றாவது பூமியின் உட்புற வெப்பத்துடன் கலந்து கற்கண் முதலியவை கரைந்து ஆறாகப் பெருகும் போது சுற்றுப்பக்கத்துள்ள கிராமங்கள் சோலைகள் மற்றுமுள்ள யாவும் பாழாய்ப்போவதுமன்றிப்பூமித்தோற்றத்தையும்ஒருவாறு மாறுபடுத்தக் கூ டியவாறு புலப்படுகிறது. இவ்விதம் பருவதாக்கினிப் பிரவாகமாகப் பரவு ம் கரைந்த கற்கள் முதலியவைகளை அக்கினிமலையின் சிட்டமென்றும் இங் கிலீஷில் 'லாவா' வென்றும் (Lava) கூறுவர். சிலநாள் கழிந்தபின் வெடி ப்புண்ட விடங்களைப் போய்ப் பார்த்தால் மிகப் பெரும் பள்ளங்களாகக் காணப்படுவன. அவ்வகையான ஒவ்வொரு பள்ளத்திற்கும் அக்கினிமலைப் பிளப்பு அல்லது எரிமலைப் பிளப்பென்று பெயர். இதை இங்கிலீஷில் க்ரேட்டர் (crater) என்பர். சித்திரத்திற் காட்டியபடி எரிமலைப் பிளப்பா னது ஆழமாகவிருப்பதுமன்றி பூமிக்குள் வெகுதூரம் ஓர் குழாயைப்போல் செல்லத்தக்கதாகவுங் காணலாம். இப்பிளப்புகளினின்று கந்தகம் முதலி யவைகளைச் சீவி யெடுப்பார்கள். ஆதலால் குழாயுடன் எரிமலைப்பிளப்பை க் கண்டறிய வேண்டுமானால் அதற்கு நாம் சாதாரணமாக உபயோகிக்கிற வாயகன்ற பெய்குழலை (funnal) உபமானமாகக் கொள்ளலாம். பூமியி னின்று எடுக்கப்பட்ட சிலாதைலம் (Petroleum) அல்லது கிரோஸனாயில் (Kerosine oil) என்னும் எண்ணெயைத் தகரத்தொட்டியினின்று கீழே சிந் தாமல் வெளியேவிடத் தகரத்தாலாகிய பெய்குழாய்களைப் பார்த்து வருகி றோம். அதன் மேல்வாய் அகன்று அதன் கீழுள்ள குழாய் குறுகியிருப்ப து போல எரிமலைப் பிளப்பானது மேல்வாயகன்று அதன் கீழுள்ள பள் ளம் குழாயைப்போலப் பூமிக்குள் செல்லுவதாயுள்ளது. இவ்வெரிமலைப் பிளப்புக்களை அக்கினி மலைப்பிரதேசங்களில் காணலாம். நமது இந்துதே சத்திற்குத் தென்கிழக்காயுள்ள பெருந்தீவுகளில் ஜாவா (Java) வென்னும் தீவில் விசேஷமாய்க் காணலாம். இவ்வெரிமலைப் பிளப்புக்களினின்று சீவி யெடுக்கப்பட்ட கந்தகக்கட்டிகள் மஞ்சள் நிறங்கொண்டு படிகங்கள் (crystals) ஒன்றுகூடிய பெருங் கட்டிகளாகக் காணப்படுகின்றன. நமது தேசத்தில் சிற்சில விடங்களில் கற்கண்டுப் படிகங்கள் ஒன்றுசேர்ந்து ஓர்

பாத்திரவடிவமாக இருக்கப்பார்க்கிறோம். அவ்விதப்படிகக் கற்கண்டுக்கட்டிகளைப் பருத்தி நூலைச்சுற்றி வார்ப்பிடம்போல் வார்த்தெடுக்கக் காணலாகும். இக்கற்கண்டுக் கட்டிகளுக்கொப்பிட்டுக் கந்தகக் கட்டிகளைக் கருதலாகிறது. மற்றும் ஜாவா தீவிற்குச் சென்று அக்னிமலைப் பிளப்பின் மேல்வாய்வரையிற் பரிசோதித்து அவ்வவ்விடங்களின் விசேஷங்களைக் கண்டறிந்த கல்விச்சிறப்புற்ற மகான்கள் அவ்விடங்களுக்கருகில் வெப்பமான அருவி நீரோட்டமிருக்கவுங் கண்டு தெரிவித்திருக்கிறார்கள். ஆதலால் தேசசஞ்சாரம் செய்வதனாலாகும் பயனை ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் மெய்யறிவிற்கேற்றபடி யோசித்துக் கல்விச்சிறப்படையும்வண்ணம் தேர்ந்து பார்த்துவருவது மிக்கநன்மையை யுண்டுபண்ணவல்லதோர் செயலாமென்பதைச் சுலபமாயறியக்கூடும்.

(*d*) **பூமியதிர்ச்சி அல்லது பூகம்டம்:** ஓர் குளத்தின் அசைவற்ற நீரின் மேல் யாதாயினுமோர் சிறுகல் அல்லது செத்தையைப் போட்டவுடன் பார்த்தால் அவ்விடத்தைச் சுற்றி வட்டமாக நீர்க்கோடுகள் பக்கத்திற் காட்டியபடி அகன்று பரவப் பார்த்து வருகிறோம். நீர் வெகு இளகிய பதார்த்தமாகையால் கல் அல்லது செத்தையைப் போட்டவுடன் அது அமிழ்வதினால் அக்கல் அல்லது செத்தை உட்கொண்ட இடத்தின் நீரானது பக்கத்திலுள்ள நீருடன் சேர்ந்து அலைபோலாய் நீரின் மேடுபள்ளத்தினால் புழுக்கள் நகர்வனபோற் பக்கத்திலெங்கும் பரவுமியல்புடையது. இது காரணத்தினாலேயே சூரியன், சந்திரன் முதலானகிரகங்கள் இழுப்பதாலும்



காற்றின் வேகத்தினாலும் அசைக்கப்பட்டெழும் நீரானது பக்கத்தில் நீர்த்தாழ்வு அல்லது பள்ளத்தை யுண்டாக்கிப் பிறகு அப்பள்ளம் மூடுபட்டுப் பக்கத்தில் மற்றோர் பள்ளமுண்டாக்கி இவ்வாறு மேடுபள்ளங்களாக ஆகிவரும். நீர் நிலையின் தன்மையைக் காட்டும் நீரோட்டத்திற்கு அலையென்று கூறிவருவார்கள். இவ்வலையைப் போலவே பூமிக்குள் சுமார் 30 மைலில் வெவ்வேறு காரணங்களாலுண்டாகவல்ல அதிர்ச்சியினால் அவ்விடத்தைச் சுற்றி பூமியின் மேற்பாங்கு வரையில் அவ்வதிர்ச்சி பரவுகிறபடியால் பூமிக்குள் முதலிலுண்டாகு மதிர்ச்சியானது வெகு வேகமாயிருந்து இவ்வதிர்ச்சியின் அலையானது சுற்றிப்பரவப்பரவ வேகத்தில் குறைவடைகிறது. இதற்கு உதாரணமாக மேற்காட்டிய சித்திரத்தின் உட்புற அலை வட்டமானது தெளிவாக அவ்வலைபரவப்பரவக் கடையில் வெகு மெலிதாய் கண்ணுக்குப்புலப்படாமல் நீருடன் கலந்து விடுகிறது. பூமியின் அதிர்ச்சியானது இவ்வாறு சுற்றிப் பரவுங்கால் பூமியின் உட்புற நி

லையை மாற்றும்இயல்புடன் சிலகாலங்களில் பூமியின் மேற்புற நிலையையும் அபாயகரமாக ஏற்றத்தாழ்வடையுமாறு மாற்றவல்லதாய்ப் பார்த்து வருகிறார்கள். ஆகையால் அவ்வவ்விடத்தின் இருப்புக்கேற்றபடி பூமியதிர்ச்சியை பலமாகவும் இலேசாகவும் நாம் உணர்ந்துவருகிறோம். பூமியினதிர்ச்சியானது உண்டானால் கடலில் கப்பலசைவதனால் கப்பலின் பாய்மரம் கொடிகள் முதலியவையும் அசைந்து வளைவனபோல பூமியின் மேற்புறமுள்ள மரங்கள், மலைகள் முதலியவையும் அசையப் பார்த்திருக்கின்றார்கள். இவ்விதம் பூமியினதிர்ச்சி சுற்றிப்பரவும்போது பூமியின் கீழிருந்தும் நம்மைச் சுற்றியுள்ள வாயுவிலும் ஒலிகள் கிளம்புகின்றன. பூமியினதிர்ச்சியை அளவிட்டுக் கருதவல்ல ஆயுதங்களும் சாஸ்திரமும் ஏற்பட்டுள்ளன.

சாதாரணமாய் பூமியினதிர்ச்சியானது ஒவ்வோர் காலத்தில் தோன்றுவதாக நமக்குப்புலப்படுகிறது. ஆனால் உண்மையில் அவ்வதிர்ச்சி அடிக்கடி பூமிக்குளுண்டாகிறது. அவ்வதிர்ச்சிகள் வெகு இலேசானவையாகையால் நமக்குப்புலப்படாமற் போய்விடுகின்றன. அக்னி மலைப்பாங்குகளில் இவ்வதிர்ச்சி வெகு வேகமாய்க்கிளம்பும். அக்னிமலையற்ற விடங்களில் பூமியதிர்ச்சியின் வேகத்தால் மிக்க அபாயம் நேரிடுவதுண்டு. எரிமலை வெடிப்பும் (Volcanic eruption) பூமியதிர்ச்சியும் (Earth quake) ஒன்றுக்கொன்று சம்பந்த முண்டாய் வெளியாகின்றன. வெடிப்புக்குமுன் அதிர்ச்சியுண்டாம். தென் அமெரிக்காவின் மேற்குப்பாகத்தில் இவ்வதிர்ச்சி விசேஷித்துண்டாகிறது. ஜெப்பான் (Japan) தீவுகளிலும் பூமியதிர்ச்சி அடிக்கடி யுண்டாவதுண்டு.

பூமியதிர்ச்சிக்கு அநேக காரணங்கள் கூறுவார்கள். பூமிக்கு வெளியேயுள்ள காற்றுப் பளுவானது மாறுபடுவதாலும் சூரிய சந்திரர்களிப் பூமியை இழுக்குந் தன்மையாலும் அதிர்ச்சியானது சில காலங்களில் உண்டாவதாய்ச் சொல்வதுண்டு. ஆனால் அதிர்ச்சியானது பூமிக்குள் சில காரணங்களால் வெகு வேகமாயுண்டாமென்பது விளங்க அறியத்தக்கது. பூமியானது நாளடைவிலே குளிர்ச்சியடைவதால் பூமியின் உட்புறமானது கீழ் நோக்கிக் குளிர்ச்சியடையும்போது சுருங்குகிறபடியால் சிற்சில விடங்களில் தரை வரிசைகளின் (Strata) கனங்களடைப்புண்டு மாறுதலையடையக் கூடும். இக்காரணத்தால் பூமியதிர்ச்சி யுண்டாகலாம். மேலும் சிலகாலங்களில் பூமிக்குள் நீராவியானது திடீரென்று உண்டாவதும் பரவுவதுமாயிருந்தால் இவ்வதிர்ச்சி புறப்படக்கூடும். மற்றும் சில வேளைகளில் பூமிக்குள் பருத்த குகைள் உண்டானால் இவ்வதிர்ச்சி யுண்டாகவுங் கூடும். மொத்தத்தில் இப்பூமியதிர்ச்சியானது 30-மைலுக்குட்பட்டுத்தான் பூமிக்குள் உண்டாகும்.

வர இரண்டுவழிகள் உள்ளன. கரைவழியாக ரயிலேறிவரலாம், கடல்வழியாகக்கப்பலேறிவரலாம். இவ்வாறு வரும் வண்டிகளையும் கப்பல்களையும் அங்கங்குப் பரிசோதித்துப் பார்க்க சர்க்காரால் சில சிப்பந்திகள் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். ஒவ்வோர் இடத்திலும் இப்பிரயாணிகளை அதிகாரிகள் பரிசோதித்து அவர்கள் காய்ச்சல் முதலிய சூசகங்களால் பிளேக் என்பது இல்லை என்பதை நிச்சயித்துக்கொண்டபிறகு அப்பிரயாணிகளின் விலாஸத்தை யெழுதிக்கொண்டு அவர்களை பாஸ்போர்ட் என்று சொல்லப்படும் ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்துப்போடச்சொல்லி அவ்வொப்பந்தத்தின் ஒரு பிரதியை அவர்கள் கையிற்கொடுத்து அவர்கள் போகுமிடங்களுக்கு அனுப்புகின்றார்கள். மற்றைய பிரதி அப்பிரயாணி எந்தஊர்போகின்றானோ அந்த ஊருக்கு அனுப்பப்படும். அந்தப்பிரயாணி அவ்வொப்பந்தப்படி, தான் எந்த ஊர் சேர்ந்தானோ அந்த ஊரில் இதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் அதிகாரிகள் முன்பாக 10-நாள்வரையில் தினந்தோறும் வந்து தனக்கு வியாதி ஒன்றுமில்லை என்பதை நிரூபிக்கவேண்டும். அவ்வாறு செய்ததற்கு சாட்சியாகத் தங்களிடமிருக்கும் பிரதியில் அந்த அதிகாரிகள் கையொப்பம் பெறவேண்டும். இவ்வேற்பாடுகளெல்லாம் நம்மையும் நமது நாட்டையும் இந்நோயிலிருந்து பாதுகாக்கும்பொருட்டு உண்டாக்கப்பட்ட ஏற்பாடுகள். ஆனால் பாமர ஜனங்கள் இதை அவ்வாறு நினைக்காமல் சில சமயத்தில் பொய் விலாஸம் கொடுத்து மோசம் பண்ணுகின்றார்கள். இது நியாயமே அல்ல.

ஒருவன் தனதுமேனிமுழுமையும் அழுக்கின் குவியலாட்டத்தால் தரித்திருக்கும் ஆடை பலவிததுர்க்கந்தம்வீச பிளேக் உண்டாயிருக்கும் ஊரைவிட்டுப் புறப்பட்டுப்பிளேக்கில்லாத ஓர்ஊருக்குவருவானேயானால் அம்மனிதனிடம் தற்காலத்தில் பிளேக் என்பது இல்லாமலிருந்த போதிலும் அதிகாரிகள் அவனை என் வழியில் நிறுத்தி அவனைக்கொஞ்சநாள் வைத்திருந்து அவன் மேனியையும் அவன் வஸ்திரங்களையும் பிளேக்கைப்பரவச் செய்யும் பயத்திலிருந்து சாஸ்திரப்படி ஏற்பட்டிருக்கும் முறைகளால் நீக்கி அவனை அனுப்பக்கூடாது? ஆகையால் இவ்விதமாகவரும் மனிதனை வழியிலோ அல்லது ஓர் நகரத்தின் எல்லைக்குவெளியில் ஏற்பட்டிருக்கும் சாவடியிலோ அதிகாரிகள் 10-நாள் வரையில் அவசியம் நிறுத்தியேவைத்து அனுப்பலாம்.

பிரதான நகரங்களில் இவ்வித பரிசோதனை கிரமமாகநடக்கும். அதே பிரகாரம் கிராமாந்திரங்களில் நடக்கமாட்டாதாகையால் பிளேக் என்னும் நோய் உண்டாகும் காலத்தில் ஒவ்வொரு ஜில்லாவிலும் (Observation circles) சோதனைக்கொட்டங்கள் என்று குறைந்தபட்சம் ஒரு பத்துமைல்

சுற்றளவை ஒருபாகமாகப்பிரித்து அதற்குள் அச்சோதனையை நடத்த இவ் வியாதி உண்டாகும் காலத்தில் ஸானிடேரிஇன்ஸ்பெக்டர் (Sanitary Inspector) என்று சொல்லப்படும் அதிகாரியை நியமிப்பார்கள். இவ்வாறுஏற் படுத்தப்படும் நான்கு சோதனைக்கொட்டடங்களுக்கு மேலதிகாரியாக ஓர் பி ளேக்ஸூபெர்வைசர் என்று சொல்லப்படும் பெரிய உத்தியோகஸ்தனை நியம னம் பண்ணுவார்கள். இவன்தான் இன்ஸ்பெக்டர்கள் நடத்தும் வேலையை பரிசோதித்து அப்போதைக்கப்போது தனது எஜமானராகிய ஜில்லாவைத் தியர் மூலமாக கலேக்ட்டர் அல்லது மற்றஅதிகாரிகளுக்கு ரிப்போர்ட்டுகள் அனுப்பிக் கொண்டிருக்கவேண்டும்.

பிளேக் காணுமுன் நாம் வெகு ஜாக்கிரதையாகவிருந்து அது நாமிருக் கும் நகரத்துக்குள் புகாமல் தடுக்கவேண்டுமல்லவா? இவ்வாறு பாதுகாத் துக்கொள்ளப் புத்திமான்கள் எப்பொழுதும் ஜாகரூபசபை(Vigilance committees) என்றுசொல்லப்படும் சபையை இந்நோய் உண்டாகும் காலத்தில் ஏற்படுத்திக்கொள்ளுவார்கள். ஒவ்வொருவனுக்கும் தனது தெருவிலும் தனக்கு அக்கம்பக்கத்திலும் அதிகமாகத் தெரிந்திருக்குமாகையால் 200-வீடு களுக்குள்ஒருவனை அவ்விருநூறுவீடுகளுக்கும்பொறுப்புள்ளவனுகப்பொறுக் கிஜாகரூபசபையில் அவனை ஒருவனுக நியமிப்பார்கள். இவன் வேலை என் னவெனில் இவனுக்குச்சோதனைக்காகவென்று கொடுக்கப்பட்டிருக்கும் 200 வீடுகளுக்கும் ஓர்வித நோயுமில்லையா, பிளேக் பிரதேசங்களிலிருந்து ஒரு வரும் வரவில்லையா என்று பரிசோதித்துக்கொண்டும் அப்போதைக்கப் பொழுது ரிப்போர்ட்டு செய்துகொண்டு மிருப்பதேதான். இவர்கள் செய் யும் வேலையானதுலோகோபகாரமாகச்சம்பளமில்லாமல் செய்யும் வேலையா கையால் இவ்வேலையில் அமர்ந்தவர்கள் வெகு ஆவலுடனும் உற்சாகத்துட னுமிதை நடத்தவேண்டும். இவ்வேலையில் நியமிக்கப்படுகிறவர்கள் தங் கள் நற்குணத்துக்குப்பெயர் பெற்றவர்களாயும் எல்லாருக்கும் வேண்டியவர் களாயு மிருக்கவேண்டும். அப்பொழுதுதான் வேலையும் வெகு நயமாய் நட க்கும்.

நிலத்தின்வழியில் வரும் பிரயாணிகளைப் பரிசோதிப்பதுபோல் கப் பலேறிவரும் பிரயாணிகளையும் பரசோதிக்கப் பலமுறைகள் ஏற்படுத்தப்ப ட்டிருக்கின்றன. அவ்வாறே கப்பலையும் விலக்கிநிறுத்தி (Impose quarantine) பரிசோதிக்கவும், பரிசுத்தம் செய்யவும் பலவிதநிபந்தனைகளுண்டு. அவ்வாறே கரைமார்க்கமாக ஓர் ஊருக்குள் வரும் சாமான்களையும் கப்பல் வழியாக இறக்குமதிசெய்யப்படும் சாமான்களையும் பரிசோதிக்கவேண்டிய நிபந்தனைகள்பல ஏற்பட்டிருக்கின்றன. இவைகளையெல்லாம் சென்னை

ராஜாங்கத்தார்கள் இதற்காகவென்றே* அச்சிட்டிருக்கும் பிளேக்நிபந்தனை கள் என்று சொல்லப்படும் புஸ்தகத்திலும் நமது இராஜதானியின் ஸானிடேரிக்கமிஷனராகிய டாக்ட்டர் கிங்கு துரையவர்களியற்றி யிருக்கின்ற பிளேக் இன்ஸ்பெக்டர்† என்னும் புஸ்தகத்திலும் நாம் முற்றிலும் அறிந்து கொள்ளலாம். நாம் மேற்கூறிய புஸ்தகங்களில் பிளேக் உண்டாகுங்காலத்தில் ஏற்படவேண்டிய வைத்தியசாலைகள் கையோடு வைத்திருக்கவேண்டிய ஔஷதங்கள் ஒவ்வொரு நோயாளிக்கும் நாம் நடத்தவேண்டிய சிகிற்சைகள் இவைகளெல்லாவற்றையும் சாங்கோபாங்கமாக கிங்துசொல்லியிருக்கின்றார். அவைகளை அப்புத்தகங்களில் செவ்வையாகத் தெரிந்துகொள்ள வேண்டும்.

இந்நோய் உண்டாகும் காலத்திலும் உண்டாகி நம்மை வருத்தும் காலத்திலும் நமது வீடுவாயில் முதலியவைகளை சர்க்கார்அதிகாரிகள் பரிசுத்தம் செய்வார்கள். அதற்கு நாம் உட்படவேண்டும். இந்நோய் பிரபலமாகவிருக்கும்பொழுது வீடுதோறும் அதிகாரிகள்வந்து பரிசோதிப்பார்கள். அதற்கும் நாம் ஆக்ஷேபிக்கக்கூடாது.

பிளேக்கால் மாண்டவர்களை எரிப்பதேதான் மற்றவர்கள் சௌக்கியத்திற்கு ஒருவிதக்குறைவையும் உண்டாக்காதவழி என்று சொல்லுகின்றார்கள். ஆனால் இது எல்லாரும் செய்யமாட்டார்கள். சிலர் தங்கள் மதக்கொள்கைப் படி பிணத்தைப் புதைப்பார்கள். அவ்வாறுசெய்யும்பொழுது பிளேக்பிணத்தை பூமிக்கு ஆறடிக்கீழ் சில மருந்துகளுடன் புதைக்கவேண்டும். அதிகாரிகள் புஸ்தகங்களாக எழுதியிருக்கும் இப்பிளேக் நிபந்தனைகளை நாம் கொஞ்சம் இவ்வத்தியாயத்தில் சொன்னோம்.

அம்மைகுத்தி அம்மையிலிருந்து ஒருவனை இரட்சிப்பதுபோல் பிளேக் கென்றதொத்து நோய்க்கும் அம்மைகுத்துவது (Inoculation) கண்டுபிடித்திருக்கின்றார்கள். அவ்வாறு பிளேக் அம்மை குத்திக்கொள்ளுவதால் பிளேக்கால் உண்டாகும் மரணத்தொகை குறைவுபடுகின்றதென்று கணக்குகள் உண்டாக்கியிருக்கின்றார்கள். பம்பாய் ராஜதானியில் (Undera) உண்டேர

---

* Plague Regulations and Rules. Price 8 as. To be had at Government press, Mint Buildings, Madras.

† The plague Inspector - Price 1 Rupee. Messrs Addison & Co., Madras.

என்னும் ஊரில் பிளேக் தோன்றியபொழுது அதிகாரிகள் அவ்விடத்திலிருந்தவர்களுக்கு பிளேக் அம்மைகுத்திவைத்தார்கள். சிலகுடும்பங்கள் பிளேக் அம்மைகுத்திக்கொள்ளவில்லை, சிலகுடும்பங்கள் குத்திக்கொண்டன. அக்குடும்பங்களில் உண்டான மரணத்தால் இவ்வம்மையின் குணகுணங்களைப் பற்றி நமது நண்பர்களே ஒருவாறு ஊகித்துக்கொள்ளலாம்:—

ஓர் குடும்பத்தின் பிளேக் அம்மை குத்தப்படாத ஜனங்கள்.	அவர்களுள் பிளேக் கண்டவர்கள்.	பிளேக்கால் மாண்டவர்கள்.
124	54	37
64	27	26

ஓர் குடும்பத்தின் பிளேக் அம்மைகுத்தப்பட்ட ஜனங்கள்.	அவர்களுள் பிளேக் கண்டவர்கள்.	பிளேக்கால் மாண்டவர்கள்.
250	50	20
71	8	3

அம்மை குத்தப்படாமல் பிளேக் கண்டு மாண்டவர்கள் நூற்றுக்கு 30, நூற்றுக்கு 40 என்று இருக்கும் பொழுது, அம்மை குத்தப்பட்ட பிறகு பிளேக் கண்டு மாண்டவர்களுடைய கணக்கு நூற்றுக்கு 8, நூற்றுக்கு 4 என்று ஏற்படுகின்றது. ஆகையால் இப்பிளேக் அம்மையால் குணமுண்டு என்பதை ஒருவராலும் தடுத்துச் சொல்லமுடியாது. ஆனல் பிளேக் அம்மை குத்திக்கொள்ளுவதால் முற்றிலும் பிளேக் பயம் நீங்குகின்றதில்லை. பிளேக்கின்மூம்மரமான உபத்திரவம் ஒருவாறு குறைவுபடும். இவ்வம்மையின் பிரயோஜனம் 5, 6, மாதகாலந்தான் நம்மிடமிருக்கின்றதென்றும் 5, 6, மாதகாலத்துக் கொருதடவை நாம் மறுபடியும் பிளேக் அம்மை குத்திக் கொள்ளவேண்டும் என்றும் வைத்தியர்கள் சொல்லுகின்றார்கள்.

T. R. Tawker & Sons,

Mount Road, Madras.

வைரம், பச்சை, கெம்பு முதலிய ரத்தினங்களும், நகைகளும், எங்களிடம் சரசமாய் விலைக்கு தரப்படும். தவிர நூதனமாய் வேண்டிய நகைகள் உத்திரவின்பேரில் செய்யப்படும். எங்களிடம் தயாராயிருக்கும் நகைகளுக்கு அற்புதமான காட்லாக்கு லெட்டரின்பேரில் அனுப்பப்படும். உயர்ந்த வேலைக்காரர்களைக்கொண்டு வேலைத் திறமாயும் உத்திரவாதமாயும் செய்தனுப்பப்படும். ஒரு முறை பார்த்தால் அனுபோகம் தெரியவரும்.

B. 106 கெடியார சேலுக சவரன் போன்னுல் செய்தது ரூ 165, 138, 118 வரையில். ஷை வெள்ளி ரூ 8.



B. 510. போன் கைகெடியாரம் ஹண்டிங் முகிகால் மூடியுடையதும் (லீவர்) தலையில் சாவியுடையதும் சரியான காலங் காட்டுவதுமானது ரூ 140. ஷை வெள்ளிக் கெடியாரம் ரூ 25 முதல் 60-வரையில்.

B. 107 கெடியார கொலுசு சவரன் போன் ரூ 170. 8-மாத்துப் போன் 145. 6-மாத்துப் போன் ரூ 125. ஷை வெள்ளிக்கொலுசு ரூ 10.

J. 1053. காசிமாலை பலவிதமான காசுகள் வைத்த காசிமாலை மாதிரிகள் எங்களிடம் தயாராயிருக்கிறது. அதின் விலையும் மாதிரியும் தேவையானவர்களுக்கு மனுவின்பேரில் தெரிவிக்கப்படும். மாதிரி பிளானும் அனுப்பப்படும்.

CHILDREN IN INDIA

have much to contend with, owing to the enervating climate.

Early in life they need a tonic and reconstructive to aid in developing their little bones and muscles.

SCOTT'S EMULSION

contains the proper bone and tissue builder for children.

IT IS IDEAL.

The results are noticeable shortly after taking.

NOT TOUCHED BY HAND.

FOR SALE AT ALL CHEMISTS.

SCOTT & BROWNE, LTD.,
MANUFACTURING
CHEMISTS,
LONDON, ENGLAND.

மதுரைத் தமிழ்ச்சங்கத்தில்
விற்கப்பெறும் புத்தகங்கள்.

"செந்தமிழ்" இரண்டு, மூன்றாந் தொகுதிகள் பைண்ட் செய்யப்பெற்று இப்போது விலைக்குத்தயாராகவுள்ளன. கையிருப்பிற் சிலபிரதிகளேயிருத்தலால், வேண்டியோர் உரியபோதே எழுதி வி. பி-தபால் வாயிலாகப் பெற்றுக்கொள்ளக்கடவர். ஒருதொகுதி விலை ரூ 5. 'பைண்ட்' இல்லாதது ரூ 4—8—0.

சங்கப்பதிப்பு.

		ரூ	அ	பை
1.	ஞானாமிர்தமூலமும்உரையும்	1	0	0
2.	சைவமஞ்சரி	1	8	0
3.	ஐந்திணையைம்பதுரை	0	3	0
4.	இனியது நாற்பதுரை, கஜநூல்	0	3	0
5.	புலவராற்றுப்படை (பழையது)	0	8	0
6.	நேமிநாதம் உரையுடன்	0	10	0
7.	திருநூற்றந்தாதி உரையுடன்	0	4	0
8.	பன்னிரு பாட்டியல்	0	4	0
9.	அநுமான விளக்கம்	0	4	0
10.	சங்கப்புலவராற்றுப்படையுரை	0	4	0
11.	விவசாயரசாயன சாஸ்திரச்சுருக்கம்	0	6	0
12.	திணைமாலை நூற்றைம்பது உரை	0	4	0
13.	அட்டாங்க யோகக்குறள்	0	1	0
14.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	0	3	0
15.	யாப்பு அணியிலக்கணங்கள் [விசாகப்பெருமாளையரது பஞ்சலக்ஷண வினாவிடையினின்று எடுத்தது.] ..	0	8	0
16.	வில்லிபுத்தூரர் பாரதம்—(ஆதிபர்வம், சபாபர்வம் பலபிரதிகளைக்கொண்டு ஆராய்ச்சி செய்யப்பட்டது)	1	0	0
17.	திருச்செந்திற்கலம்பகம்	0	3	0
18.	முத்தொள்ளாயிரச்செய்யுட்கள் (௧௦௫)	0	1	0

மற்றப்பதிப்பு.

		ரூ	அ	பை
19.	தருக்காமிர்தம்	0	8	0
20.	அத்துவித வாக்கியத் தெளிவுரை (ஸ்ரீசிவஞானசுவாமிகள் செய்தது.)	0	4	0
21.	விதானமாலை [சோதிடம்]	0	8	0

☞ விலாசம்:—மதுரைத்தமிழ்ச்சங்கம் மானேஜ்மெண்டு ஆபீஸ், மதுரை.

வி. ஷேக்பரீத் அண்டு கோ.

மவுண்ட்ரோட், சென்னை.

முன் விலை 18-ரூபாய். தற்காலம் ரூபாய் 6.



நெ. 1. 6-ரூபாய் கிரயத்துக்கு ஸிஸ்டம ரூஸ்கோப்பேடண்டு லீவர் ஜர்மன் வெள்ளி கெடியாரம 7-வருஷம் உத்திரவாத ஸ்டாம்பு கியாரண்டியுடன் 24 வித இனாம் சாமான்களும் சேர்த்துக் கொடுக்கப்படும்.

மிக இலட்சணமும், நாணயமும், சரியான காலத்தைக் காட்டக்கூடியதும் ஸிஸ்டம் ராஸ்கோப் பேடண்டு லீவர் சுவிஸ்மேட் கெடியாரமானது ஒருபக்கம் அதிக கனத்த கண்ணாடியால் மூடி போட்டது மேல்சாவியுள்ளது. 4 கெம்பு செதுக்கியது. பார்ப்பவர் ஆச்சரியப்படும்படியானது. எந்தக்கம்பேனியிலும் கிடைக்கப்படமாட்டாது. பெயர்போன கம்பேனியாரால் செய்யப்பட்டது. 24 விதமான விநோத சாமான்களும் சேர்த்து ரூபா 6.

இனாம்சாமான்களின் விபரம்.

கெடியாரம் வைக்கும்படியான வில்வெட்பெட்டி 1, கண்ணாடி 1, வில் 1, சீமையில்செய்த வெகு நேர்த்தியான கொலுசு 1, சீமையில் செய்த ஒருபக்கம் எட்வர்ட் சக்கரவர்த்தியும் மற்றொருபக்கம் ராணி அலக்சாண்டிராவுமாகிய இவர்களின் பொட்டகிராப்வைத்த லாக்கெட் தொங்கட்டம் 1, சைனா பேனா 1, கத்தி 1, பூபோட்ட சைனா குட்டை 1, சீமை செண்ட் என்னும் வாசனைபுட்டி 1, ஆஸ்டிரேலியாவில் செய்த மனவுல்லாச பரிமளம் வீசும் ரோஸ் சோப்பு 1, ஷர்ட்டுபட்டன் செட் 1, பூனா சாவிவளையம் 1, குளிர்ச்சிபொருந்திய மூக்குக்கண்ணாடி 1, ஜெர்மன் மணிபாக்ஸ் 1, சீமை தோல்பை எலெக்டிரிக் தங்க ஷோக் மோதிரம் 1, ஆஸ்டிரியாவில் செய்த முன்பார்வையில் கண்ணாடிவைத்து உள்புறத்தில் 2 வருஷத்திய காலண்டர் வைத்து 80 பேஜுகள் அடங்கிய வாய்ப்புறத்தில் பென்சல் வைத்த நோட்புக் 1, பென்சல் 1, குழந்தைகள் வாத்தியம் 1, ஜெர்மன் தேசத்தில் செய்த மன்னாதிமன்னர்களாகிய சக்கரவர்த்திகளின் உருவங்களடங்கியதும் நகைகள் வைத்துக்கொள்ளும்படியான டப்பாக்கள் 6, ஆக மொத்தம் 24 வித சாமான்கள் இனாம்.

V. SHAIK FAREED & Co,

Mount Road, **Madras.**